# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.04.17 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## இலங்கை மின்சாரம்

***மின்சாரத்தொழிலுக்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; தேசிய மின்சார மதியுரைப் பேரவையைத் தாபிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; இச்சட்டத்தின் நியதிகளின்படி 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத்தொழிலுக்கான ஒழுங்கு படுத்துநராகவிருப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழான எந்தக் கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களில் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு, மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை சம்பந்தமான எல்லாச் செயற்பாடுகளும் உரித்தாக்கப்பட வேண்டுமோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களின் கூட்டிணைப்புக்கு ஏற்புடையற்பாலனவான சட்டவாக்க வழிமுறைகளை ஏற்பாடுசெய்வதற்கும்; தொடர்புபட்ட எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையற்பாலனவாக இருக்கவேண்டிய செயல்முறைகளைக் குறித்துரைப்பதற்கும்; 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச்சபைச் சட்டத்தையும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தையும் நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்கு மானதொரு சட்டமூலம்***


*மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 270.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கை மின்சாரம்

*ச.வ.- ஓ. 1/2023*

***மின்சாரத்தொழிலுக்கான சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; தேசிய மின்சார மதியுரைப் பேரவையைத் தாபிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; இச்சட்டத்தின் நியதிகளின்படி 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத்தொழிலுக்கான ஒழுங்குபடுத்துநராக விருப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழான எந்தக் கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களில் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு, மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை சம்பந்தமான எல்லாச் செயற்பாடுகளும் உரித்தாக்கப்படவேண்டுமோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களின் கூட்டி ணைப்புக்கு ஏற்புடையற்பாலனவான சட்டவாக்க வழிமுறைகளை ஏற்பாடுசெய்வதற்கும்; தொடர்புபட்ட எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையற்பாலனவாக இருக்கவேண்டிய செயல்முறைகளைக் குறித்துரைப் பதற்கும்; 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தையும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தையும் நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*முன்னுரை*

எந்தச் சுயாதீனமான கூட்டிணைப்பு உருவகங்களில் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு, மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை சம்பந்தமான எல்லாச் செயற்பாடுகளும் உரித்தாக்கப்பட வேண்டுமோ மற்றும் எந்தச் சுயாதீனமான கூட்டிணைக்கப்பட்ட உருவகங்கள் இச்செயற்பாடுகளின் வினைத்திறனான

முகாமைக்கும் இச்செயற்பாடுகளில் சந்தைப் போட்டியை உருவாக்குவதற்கும் பொறுப்பாதல் வேண்டுமோ அந்தச் சுயாதீனமான கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களின் கூட்டிணைப்பின்மூலம் அரசாங்கத்துக்குச் சொந்தமான தனியோர் உருவகத்துக்குத் தற்போது உரித்தாக்கப்பட்ட மின்சாரத்தொழிலின் செயற்பாடுகளின் தனிப்படுத்துகையினாலும் தனிவேறாக்குகையினாலும் ஆதாரப்படுத்தப்பட்ட மின்சாரத் தொழிலினுள் புதிய முதலீட்டை ஈர்ப்பதற்கான தேவையை முறையாக ஏற்றங்கீகரிக்கின்றதும் அதற்காக வடிவமைக்கப்பட்டதுமான மின்சாரத் தொழிலின் ஏலவேயுள்ள நிறுவனஞ்சார் கட்டுக்கோப்புக்கான சீர்திருத்தங்கள் தேவையாகவுள்ளனவாதலாலும்:

அத்துடன் மின்சாரத்தொழிலின் நிலைபெயர்வுக்கும் மீள்ஒழுங்குபடுத்துகைக்குமான திட்டமொன்று தயாரிக்கப்படுவதுடனும் உரியநேரத்திலான மற்றும் அத்தியாவசியமான சட்டஞ்சார், கட்டமைப்புசார், மேற்பார்வை மற்றும் சந்தை அடிப்படையிலான மாற்றங்களை அடிப்படையாகக்கொண்ட அடையாளங்காணப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதுடன் தொடங்குகின்ற செய்முறையொன்று தேவையாகவுள்ளதாதலாலும்; பங்குத் தொகுதிச் சந்தை நிரற்படுத்தலையும் பகிரங்கத் தனியார் பங்காண்மை முறைமைகளையும் பயன்படுத்தி மின்சாரத் தொழிலின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தனியார்துறை முதலீட்டை வசதிப்படுத்துவதற்கு, வெளிப்படையான காப்புவரிகள் பற்றிய விதிமுறைகள், வெளிப்படையான நிதிசார் முதலீடு மற்றும் வளமுகாமைத்துவம் அத்துடன் சீராக்கப்பட்ட வகைகூற வேண்டியமையும் மேற்பார்வை வழிமுறைகளும் என்பவற்றினூடாக இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்படவுள்ள கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களின் நிதிசார் சுயபோதுமாந்தன்மையை உறுதிப்படுத்துவதற்குச் சீர்திருத்தங்கள் நாடுகின்றன:

அத்துடன் இலங்கை அரசாங்கம், அதன் கரியமகற்றல் இலக்குகளையும், காலநிலை மாற்றக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துவதனூடாகவும் இறக்குமதிசெய்யப்பட்ட புதைபடிவ எரிபொருள் மூலங்களின்மீது தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு உள்நாட்டுப் புதுப்பிக்கப்படற்பாலனவான மின்வலுமூலங்களிலிருந்து மின்வலுவை உச்சளவினதாக்குவதற்கு நவீன தொழினுட்பவியலினாலும் செயல்முறைகளினாலும் வசதிப்படுத்தப்பட்ட

மின்சாரப் பிறப்பாக்கத்துக்கு புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலுவின் பங்களிப்பை அதிகரிப்பதனூடாகவும், புதுப்பிக் கப்படற்பாலதான மின்வலுவின் ஒன்றிணைப்பை வசதிப் படுத்துவதற்கும் வினைத்திறனான மற்றும் வெளிப்படையான முறையில் மின்பிறப்பாக்கத்தின் மாற்றுச் செயல்முறைகளிடையே போட்டியை ஊக்குவிப்பதற்கும் மின்வலு மாற்றம், களஞ்சியப் படுத்துகை மற்றும் முகாமையில் உருவாகிவருகின்ற தொழினுட்ப வியல்களை இசைவாக்குவதனூடாகவும், மின்சாரத்துறையின் வளர்ச்சிக்கு இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாட்டை ஏற்றங்கீ கரிப்பதும் அவசியமாகவிருப்பதாதலாலும்:

ஆகவே இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின், 3 ஆம் பிரிவின், 38 ஆம் பிரிவின் மற்றும் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்:

ஆயின், நியமிக்கப்பட்ட தேதியானது, சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதியாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவின்மூலம் தேவைப்படுத்தப்பட்ட வாறாக நியமிக்கப்பட்ட தேதியெதுவும் வர்த்தமானியில் வெளியிடப்படாதிருப்பின், இப்பிரிவின், 3 ஆம் பிரிவின், 38 ஆம் பிரிவின் மற்றும் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத்தேதி யன்று பாராளுமன்றச்

சட்டமாக வருகின்றதோ அத்தேதியிலிருந்து ஆறுமாதகாலப்பகுதி முடிவுறுவதன்மேல் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) சட்டமூலமானது பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற தேதியன்று இப்பிரிவினதும் 3 ஆம் பிரிவினதும் 38 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) அமைச்சர், இவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்படவேண்டுமென அல்லது நிறைவேற்றப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட சூழ்நிலைகளைக் கவனத்துட்கொண்டு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய பிரிவுகளுள் ஒவ்வொன்றும் நடை முறைக்கு வரவேண்டிய வெவ்வேறு தேதிகளைப் பின்வருமாறு நியமிக்கலாம்:-

(அ) திறந்த அணுகுகை தொடர்பாக 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமோ அந்தத் தேதி; அத்துடன்

(ஆ) மொத்த விற்பனை மின்சாரச் சந்தை தொடர்பாக பாகம் IX இன் ஏற்பாடுகள் எந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமோ அந்தத் தேதி.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், இயைபான கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்:

ஆயின், (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கட்டளைகள், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்று முடிவுறுமுன்னரும் ஆக்கப்படுதல் வேண்டும். இந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியினுள் கட்டளையெதுவும் ஆக்கப்பட்டிராவிடின், (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள், சொல்லப்பட்ட

ஐந்தாண்டுக்காலப்பகுதி முடிவுறும் தேதியன்று நடைமுறைக்கு வருவனவாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், அமைச்சர், சொல்லப்பட்ட ஐந்தாண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் மூன்று மாதங்களினுள் எந்நேரத்திலும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அத்தகைய காலப்பகுதியை ஒரு தடவையில் இன்னுமோர் ஓராண்டுக் காலப்பகுதிக்கு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நீடிக்கலாம். எவ்வாறாயினும், அத்தகைய நீடிப்பின் அதிகாிப்புக் காலப்பகுதி ஐந்து ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

## பாகம் I

### சட்டத்தின் குறிக்கோள்கள்

*சட்டத்தின் குறிக்கோள்கள்*

**2.** மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகம், மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை தொடர்பாக இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) வெளிப்படையான கொள்கைகளினூடாக எல்லா நேரங்களிலும் இலங்கைபூராகவும் மின்வழங்குகையின் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட, வினைத்திறனான மற்றும் சிக்கனமான முறைமையொன்று வழங்கப்படுவதற்காகவும் பேணப்படுவதற்காகவும் பொறுப்பாகவுள்ள சுயாதீனமான மற்றும் வகைகூற வேண்டிய கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களினூடாகச் சீராக்கப்பட்ட மின்சாரத்தொழில் செயல்நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துதல்;

(ஆ) நாடுபூராகவும் வினைத்திறனான மின்வழங்குகைக்காகவும் பாவனையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் சுயாதீனமான மற்றும் வகைகூறவேண்டிய கூட்டிணைக்கப்பட்ட உருவகங்கள் தாபிக்கப்படுவதனை வசதிப்படுத்துதல்;

(இ) மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை தாபிக்கப்படுவதனையும் பணியாற்றுவதனையும் ஊக்குவித்தலும் வசதிப்படுத்துதலும்;

(ஈ) புதிதாகச் சந்தையினுட் பிரவேசிப்போர் பிரவேசிப்பதற்கான முந்துரிமைசார் நடாத்துகையையும் தடைகளையும் நீக்குவதன்மூலம் மின்சாரத்தொழிலில் போட்டியை மேம்படுத்துதலும், புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலு உட்பட, புதிய மின்பிறப்பாக்கக் கொள்ளளவின் திறந்த போட்டியுள்ள மின்பெறுகையை அனுமதித்தலும், மின்பிறப்பாக்கக் கொள்ளளவின் வெளிப்படையான, திறமை ஒழுங்குவரிசை அனுப்புகையை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் எல்லா வகையினவையுமான தொழினுட்பவியல்களுக்காகவும் பாவனையாளர்களுக்காகவும் மின்கடத்துகை வலையமைப்புக்கான ஓரங்காட்டா அணுகுகையை வழங்குதலும்;

(உ) (இதனகத்துப்பின்னர் "உரிமம்பெற்றோர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இச்சட்டத்தின்கீழ் உரிமங்கள் அளிக்கப்பட்டுள்ள உருவகங்கள், அவற்றுக்கு வழங்கப்பட்ட முறையான உரிமங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனானமுறையில் செயலாற்றுமென்பதனை உறுதிப்படுத்துதல்;

(ஊ) எல்லா வளவுகளுக்கும் வழங்கப்பட்ட மின்சாரத்தின் வினைத்திறனான பாவனையை உறுதிப்படுத்தும் அதே வேளையில், மின்சாரத்துக்கான எதிர்காலத் தேவைப்பாடுகளுட்பட, மின்சாரத்துக்கான நியாயமான எல்லாக் கோரிக்கைகளும் எதிர்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(எ) சீராக்கப்பட்ட காப்பு நியமங்கள்மூலமும், நம்பகத்தன்மைமூலமும் சேவைகளின் தரத்தின்மூலமும் மின்சாரத்தின் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை,

மின்விநியோகம், மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகையிலிருந்து எழுகின்ற அபாயங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்;

(ஏ) எல்லாப் பாவனையாளர்களுக்கும் மின்சாரத்தின் கட்டுபடியானதன்மையையும் உரிமம்பெற்றவர்களின் நிதிசார் ஒப்பேறுதன்மையையும் உறுதிப்படுத்துவதற்குக் காப்புவரிக் கோட்பாடுகளை அடையாளங் காணுதல்; அத்துடன்

(ஐ) இயற்கை வளங்களின் உச்சளவிலான பாவனையை உறுதிப்படுத்தும் அதே வேளையில், இலங்கையின் தேசியக் கொள்கைகளுக்கும் அதன் சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் இணங்க இலங்கை மின்சாரத் தொழிலின் கரியமகற்றுதலுக்கும் புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலு மற்றும் மின்வலு ஒன்றிணைப்பின் ஊக்குவித்தலுக்கும் ஏற்பாடுசெய்தல்.

பாகம் II

## தேசிய மின்சார மதியுரைப் பேரவை, தேசிய மின்சாரக் கொள்கை மற்றும் கொள்கை வழிகாட்டுநெறிகளின் வழங்குகை

**3.** (1) (இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''தேசிய மின்சார மதியுரைப் பேரவை'' என வழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய பேரவையொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும். தேசிய மின்சார மதியுரைப் பேரவையைத் தாபித்தல்

(2) பேரவையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அப்பெயரைக்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(3) (அ) பின்வருவன தொடர்பில் தேசிய மின்சாரக் கொள்கையை வகுத்தமைப்பதில் அமைச்சருக்கு மதியுரையளிக்கும் பொறுப்பு பேரவைக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(i) மின்சாரத்தொழில் மற்றும் இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி தேசிய மின்சாரக் கொள்கையை வகுத்தமைத்தல் தொடர்பான கருமங்கள்;

(ii) இலங்கையில் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகம், மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை தொடர்பாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மின்சாரத்தொழிலின் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான கருமங்கள்;

(iii) போட்டியுள்ள மின்சாரச் சந்தைகளைத் தாபித்தல் உட்படவும் அதன் வெற்றிகரமான நடைமுறைப் படுத்துகையை உறுதிப்படுத்துவதற்கெனச் சீர்த்திருத்தச் செயல்முறையினூடாகப் பிராந்தியச் சந்தைகளுடனான இடைத்தொடர்புகள் உட்படவும் மின்சாரத்தொழிலின் அபிவிருத்திக்கான முன் மொழிவுகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல் தொடர்பான விதிமுறைகள்பற்றி;

(iv) மிகக்குறைந்த சிக்கனமான ஆகுசெலவில் மின்சாரத் தேவையை எதிர்கொள்வதற்குப் புதுப்பிக்கப்படற் பாலதான மின்வலு, நவீன தொழினுட்பவியல்கள் மற்றும் மின்வலு வினைத்திறன் என்பனவுட்பட, சுதேச மின்வலு வளங்களின் உச்சளவிலான பயன்பாடு;

(v) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேசிய மின்சாரக் கொள்கையின் நியதிகளின்படி நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தின் தயாரிப்புடன் தொடர்புபட்ட கருமங்கள்;

(vi) பாவனையாளரின் கட்டுபடியானதன்மை, நிதிசார் நிலைபெறுதன்மை மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களின் முதலீடுகளின்மீதான நியாயமான திரும்பல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு, நிதியமைச்சினதும் ஒழுங்குபடுத்துநரினதும் கலந்தாலோசனையுடன், தேசியக் காப்புவரிக் கொள்கையை வகுத்தமைத்தல் தொடர்பான கருமங்கள்; அத்துடன்

(vii) தேசிய மின்சாரக் கொள்கையுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதிலிருந்து எழுகின்ற வேறேதேனும் கருமம்.

(ஆ) பேரவையானது, இவ்வுட்பிரிவின்கீழ் அதன் பொறுப்புக் களை நிறைவேற்றுகையில், இயைபான அக்கறைகொண்டுள் ளோரைக் கலந்தாலோசிக்கலாம் என்பதுடன் நாட்டினதும் பாவனையாளர்களினதும் மிகச்சிறந்த நலன்கருதி நல்லெண் ணத்துடன் செயலாற்றுதலும் வேண்டும்.

(4) அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஏழு உறுப்பினர்களைப் பேரவை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்களுள் ஒருவர் பேரவையின் தவிசாளராக அமைச்சரினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்:-

(அ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ஆ) தேசியத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(இ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஈ) மின்வலுக் கொள்கையாக்குதல் என்ற துறையில் நிபுணத்துவம்கொண்டவரும், திறமை எய்தியுள்ளவரும், ஆகக்குறைந்தது இருபதாண்டுகளைக்கொண்ட அனுபவத்தையேனும் கொண்டுள்ளவருமான ஆளொருவர்;

(உ) பொருளியலில் நிபுணத்துவம்கொண்டவரும், திறமை எய்தியுள்ளவரும், ஆகக்குறைந்தது இருபதாண்டு களைக்கொண்ட அனுபவத்தையேனும் கொண்டுள்ள வருமான ஆளொருவர்;

(ஊ) மின்சக்தி முறைமைத் திட்டமிடுதலும் தொழிற்படுதலும் என்ற துறையில் நிபுணத்துவம் கொண்டவரும், திறமை எய்தியுள்ளவரும், ஆகக்குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தையேனும் கொண்டுள்ளவருமான ஆளொருவர்; அத்துடன்

(எ) புதுப்பிக்கத்தக்க மின்வலு, மின்வலு இடைப்பெயர்வு மற்றும் நிதி என்ற துறையில் நிபுணத்துவம் கொண்டவரும், திறமை எய்தியுள்ளவரும், ஆகக் குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுப வத்தையேனும் கொண்டுள்ளவருமான ஆளொருவர்.

(5) (அ) பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும் பதவியேற்கு முன்னர் நியமனத்தேதியன்றுள்ளவாறு அவரது அக்கறைகள் பற்றிய பொதுவான வெளிக்காட்டுகையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பேரவையின் முன்னர் எடுக்கப்படவுள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அக்கறைகொண்டுள்ள பேரவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய அக்கறையின் தன்மையைப் பேரவைக்கு வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அக்கருமம் தொடர்பாகப் பேரவையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

(6) (அ) பேரவையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், நிருவாகத்தில் நிபுணத்துவம் கொண்டவரும், திறமை எய்தியுள்ளவரும், ஆகக்குறைந்தது இருபதாண்டுகளைக்கொண்ட அனுபவத்தையேனும் கொண்டுள்ளவருமான பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, பேரவையின் அலுவல் களினது நிருவாகத்துக்காகப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன் பேரவையினால் காலத்துக்குக்காலம் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் நிருவாக மேற்பார்வையின்கீழ் செயலாற்றுதல் வேண்டும்.

(7) பேரவையின் உறுப்பினர்கள் மூன்றாண்டுக் காலப்பகுதி யொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அவர்களின் நியமனக்கடிதங்களில் தரப்பட்டுள்ள தொடர்புகுறி நியதிகளுக்கிணங்கப் பேரவைக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(8) (அ) இயைபான நிபுணத்துவம், பேரவையின் முன்னருள்ள குறிப்பிட்ட ஏதேனும் பிரச்சினைக்காகத் தேவையாக இருக்குமிடத்து, அமைச்சர், குறிப்பிட்ட தகைமைகளையும் நிபுணத்துவத்தையும் கொண்ட ஆட்களைப் பேரவையின் கூட்டங்களில் சமுகமாயிருப்பதற்குக் கூட்டுச்சேர்க்கலாம்.

(ஆ) அத்தகைய ஆட்கள், அவர்களின் நிபுணத்துவத்தைத் தேவைப்படுத்துகின்ற பிரச்சினை எந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படுகின்றதோ அந்த ஏதேனும் கூட்டத்தில் பங்குபற்றுதலும் உதவுதலும் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், அவர்கள் அவ்வாறு கலந்துரையாடப்படும் ஏதேனும் கருமத்தின்மீது வாக்களிப்பதற்கு உரித்துடையோராதலாகாது.

(9) (அ) ஆளொருவர் -

(i) இலங்கைப் பிரசையாகவிராதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(ii) நியமிக்கப்படுவதற்குமுன்னர் மூன்றாண்டு களினுள் பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது இருந்திருந்தால்;

(iii) மின்சாரத்தொழிலிலுள்ள ஏதேனும் உருவகத்தில் அல்லது ஒரு சம்பந்தப்பட்ட ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஓர் அக்கறை முரண்பாடாக அமைகின்ற ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டுள்ள அத்தகைய ஆளாக விருந்தால்;

(iv) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப் பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(v) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்த வராக வெளிப்படுத்தப்பட்டு பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவரான அல்லது வங்கிமுறிந்தவரான ஆளொருவராக விருந்தால்;

(vi) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் ஏதேனும் குற்றவியல் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டிருந்தால்; அல்லது

(vii) பேரவையின் ஓர் உறுப்பினரென்றமுறையில் அத்தகைய ஆளுக்குக் குறித்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்கின்ற ஏதேனும் உள அல்லது உடல் இயலாமைக்கு உட்பட்டவராக விருந்தால்,

அத்தகைய ஆள் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

(ஆ) அமைச்சர், பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்குப் பேரவையின் எவரேனும் உறுப்பினர் உட்பட்டவராகவிருப்பின், அதற்கான காரணங்களை எழுத்தில் அமைச்சரவைக்கு அறிவித்தபின்னர், அத்தகைய உறுப்பினரை அகற்றுதல் வேண்டும்.

(10) (அ) பேரவை, அதன் பொறுப்புடைமைகள் சம்பந்தமான கருமங்கள் உட்பட, (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அதன் பொறுப்புடைமைகளை நிறைவேற்றுவதில் பேரவைக்கு உதவவேண்டிய பேரவையின் பணியாட்டொகுதியினராகப் பணிபுரிவதற்கு அத்தகைய எண்ணிக்கையோரான ஆட்களைத் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும்.

(ஆ) பேரவை, பணியாட்டொகுதியினரின் ஒழுங்கமைப்புசார் கட்டமைப்பு மற்றும் பணியாட்டொகுதியின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் குறித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பேரவையின் நாளாந்த அலுவல்கள் முகாமைசெய்யப்படவேண்டிய முறை பற்றிக் குறித்துரைக்கின்ற விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(இ) பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகு தியினருக்கு ஊதியம் செலுத்தப்படற்பாலதான முறை மற்றும் வீதங்கள் என்பன திறைசேரிச் செயலாளரின் கலந்தாலோ சனையுடன் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(11) பேரவையின் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படவேண்டிய முறையையும் பேரவையின் கூட்டங்களை நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் ஒழுங்கு படுத்துவதற்கான விதிகளைப் பேரவை ஆக்குதல் வேண்டும்.

(12) அமைச்சர், காலத்துக்குக்காலம், பேரவையின் கடமை களையும் பணிகளையும் வினைத்திறனாகப் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தேவைப்படக்கூடியவாறான ஒட்டுமொத்தத் திட்டமிடுகையும் ஒருங்கிணைப்பும் உட்பட, தேசிய மின்சாரக் கொள்கையுடன் சம்பந்தப்பட்ட கருமங்கள்மீது அத்தகைய பணிப்புகளையும் வழிகாட்டுநெறிகளையும் பேரவைக்கு வழங்கு

தல் வேண்டும். அத்தகைய பணிப்புகளும் வழிகாட்டுநெறிகளும் இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்கும் தேசிய மின்சாரக் கொள்கைக்கும் ஒத்தனவாக இருத்தல் வேண்டும்.

*தேசிய மின்சாரக் கொள்கையை வகுத்தமைத்தலும் கொள்கை வழிகாட்டு நெறிகளை வழங்குதலும்*

**4.** (1) தேசிய மின்சாரக் கொள்கை, 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட சட்டத்தின் குறிக்கோள்களையும் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட மின்வலுமீதான தேசியக் கொள்கைக்கு ஒத்தவொரு முறையில் மின்சாரத்தொழிலின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் கொள்கையையும் பிரதிபலித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் அமைச்சர், மின்சாரத்துக்கான அதிகரித்துவருகின்ற எதிர்காலக் கோரிக்கைகளை இலங்கை எதிர்கொள்வதனை இயலச்செய்கின்ற நோக்குடன், ஒழுங்குபடுத்துநர், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், உரிமம்பெற்றோர், பாவனையாளர் ஒழுங்கமைப்புகள் மற்றும் வேறு இயைபான அக்கறைகொண்டுள்ளோர் என்போருடனான கலந்தாலோசனையின் பின்னரும் அமைச்சரின் இயைபான எல்லாத் தேசியக் கொள்கைகளுக்கும் கொள்கை வழிகாட்டு நெறிகளுக்கும் இணங்கியொழுகவும், தேசிய மின்சாரக் கொள்கையின் வரைவை வகுத்தமைக்கும்படி பேரவையைப் பணித்தல் வேண்டும்.

(3) பேரவை (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரின் பணிப்புக்கு இணங்கியொழுகப் பின்வருவனமீது அரசாங்கக் கொள்கையின் உருவரையொன்றை உள்ளடக்கவேண்டிய தேசிய மின்சாரக் கொள்கை வரைவொன்றை வகுத்தமைப்பதற்கு முற்படுதல் வேண்டும்:-

(அ) கட்டுபடியானதன்மை, மின்வலு உறுதிப்படுத்துகை மற்றும் கரியமகற்றலுக்காக அரசாங்கத்தின் சர்வதேச ஈடுபாடுகளுடன் இணைதல் என்பவற்றை உறுதிப் படுத்தும் அதேவேளையில் மதிப்பிடப்பட்ட கோரிக்கையை எதிர்கொள்வதற்கு மின்சக்தி முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும்

போட்டியுள்ள காப்புவரிகள் அத்துடன் மின்வழங்கலில் நம்பகமானதன்மை என்பவற்றினூடாகப் பாவனையாளர் திருப்தியை அதிகரித்தல்;

(ஆ) மின்பிறப்பாக்கம் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய தொழினுட்பவியல்கள் மற்றும் மின்வலு வினைத்திறனை மேம்படுத்துவதற்குக் கோரிக்கை சார்ந்த தொழினுட்பவியல்கள்;

(இ) தேசிய மின்வலுவின் உறுதிப்பாட்டை அதிகரிக்கின்றவையும் இறக்குமதிசெய்யப்பட்ட புதைபடிவ எரிபொருள்மூலங்களின் மீது தங்கியிருத்தலைக் குறைக்கின்றவையுமான புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலு, மின்வலுக் களஞ்சியப்படுத்துகை மற்றும் மின்வலு வினைத்திறன்போன்ற மின்வலு தொழினுட்பவியல்களிலான முதலீடுகளுக்கு ஊக்குவிப்பளித்தல்;

(ஈ) புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலு அடிப்படையிலான மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்வலுக் களஞ்சியப்படுத்துகை மற்றும் முடிவுப் பாவனையாளர் மின்வலு வினைத்திறன் என்பவற்றின் அபிவிருத்தி உட்பட மின்சாரத்தொழிலின் நிதிசார் ஒப்பேறக்கூடிய தன்மையையும் மின்சாரத்தொழிலுக்கு தனியார்துறை முதலீடுகளை ஈர்ப்பதற்கான தேவையையும் உறுதிப்படுத்துதல்;

(உ) புதிய மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை மற்றும் மின்வலுக் களஞ்சியப்படுத்துகைக் கொள்ளளவைப் பெறுகையில் போட்டியை அறிமுகப்படுத்துதல் மற்றும் மொத்தவிற்பனை மின்சாரச் சந்தையைத் தாபிப்பதற்கான முந்நிபந்தனைகளையும் மைல்க்கற்களையும் குறித்துரைத்தல்;

(ஊ) அரசாங்கத்தில் மின்சாரக்கொள்கைக் குறிக்கோள்களை எய்துவதற்கு மின்சாரத்தொழிலின் நிலைபெறுதகு வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட முதலீட்டைத் திரட்டுதல்;

(எ) நிதி அமைச்சினதும் கொள்கை நடைமுறைப்படுத்துதல் அமைச்சினதும் கலந்தாலோசனையுடன் வகுத்தமைக் கப்பட்ட தேசியக் காப்புவரிக் கொள்கை;

(ஏ) காலத்துக்குக்காலம் மீளாயப்படவேண்டிய மின்வலு மீதான தேசியக் கொள்கையை உள்ளடக்குதல்; அத்துடன்

(ஐ) சட்டத்தின் குறிக்கோள்களை எதிர்கொள்வதற்காக முன்னுரிமைகளையும் வழிமுறைகளையும் அடையாளங் காணுதல்.

(4) (அ) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி மற்றும் பகிரங்க அக்கறைகொண்டுள்ளோருடனான போதியளவு கலந்தாலோசனையின்பின்னர், பேரவையினால் தேசிய மின்சாரக் கொள்கையினது வரைவின் வகுத்தமைத்தல் பூர்த்திசெய்யப்பட்டதன்மேல், அமைச்சர், அத்தகைய தேசிய மின்சாரக் கொள்கை வரைவானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மின்வலுமீதான தேசியக் கொள்கைக்கும் ஒத்ததாகவுள்ளதெனத் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய வரைவுக்கொள்கையை அமைச்சரவைக்கு அதன் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஆ) அமைச்சரவை (அ) என்னும் பந்தியின்கீழ் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்ட கொள்கையை மீளாய்வு செய்யலாம் என்பதுடன் அத்தகைய கொள்கைக்கான அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் அதற்கான திருத்தங்களுக்கு யோசனையளிக்கலாம்.

(5) அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன்மேல், அமைச்சர், அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் தேசிய மின்சாரக் கொள்கையை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நியதிகளின்படி தேசிய மின்சாரக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு, மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை பற்றிய

முன்னைய எல்லாக் கொள்கை ஆவணங்களின்கீழும் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அவற்றின் முன்னையதை விலக்கும் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) நான்காம் உட்பிரிவின்மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறாக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதன்மேல், ஒழுங்குபடுத்துநர், உரிமம்பெற்றோருக்கு வழிகாட்டுநெறிகளை வழங்குவதனூடாகத் தேசிய மின்சாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(8) அமைச்சர் ஒவ்வோர் ஐந்தாண்டுகளிலும் ஒருதடவை, பேரவையின் மதியுரையின்மீதும் அக்கறைகொண்டுள்ளளோருடனான கலந்தாலோசனைகளின் பின்னரும் தேசிய மின்சாரக் கொள்கையின் பரிசீலனையொன்று நடாத்தப்படுவதனைச் செய்விக்கலாம்:

ஆயின், மேற்கூறப்பட்ட ஐந்தாண்டுக் காலப்பகுதி பூர்த்தி செய்யப்படுமுன்னர் தேசிய மின்சாரக் கொள்கையை நாளதுவரையாக்குவதற்கு அவசரத் தேவையொன்று எழுந்தால், தேசிய மின்சாரக் கொள்கையின் பரிசீலனையொன்று நடாத்தப்படுவதனைச் செய்விக்கும்படி அமைச்சர் பேரவையைப் பணிக்கலாம்.

(9) உட்பிரிவுகள் (1) முதல் (7) வரையிலானவற்றில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறை, தேசிய மின்சாரக் கொள்கையை நாளதுவரையாக்கல் தொடர்பாக இணங்கியொழுகப்படுவதனை அமைச்சர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(10) அமைச்சர், கொள்கை மற்றும் திட்டம் நடைமுறைப்படுத்துதல் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும், காலத்துக்குக்காலம், அத்தகைய கொள்கையின் தேசிய செயல் நுணுக்கங்கள் மற்றும் தேசிய இலக்குகள் உள்ளடங்கலாக தேசிய மின்சாரக் கொள்கையின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான கொள்கை வழிகாட்டுநெறிகளை எழுத்தில் வழங்கலாம். அத்தகைய வழிகாட்டுநெறிகள் -

(அ) பின்வருவன தொடர்பில் வழிகாட்டுகையை வழங்குதல் வேண்டும்:-

(i) மின்சாரத்தொழிலின் சீர்திருத்தத்தை வசதிப் படுத்துதல்;

(ii) மின்வலு உறுதிப்பாடும் சூழல் நிலைபெறு தகுதன்மையும் தொடர்பில் வேறு கொள்கைக் குறிக்கோள்களுக்கும் இலக்குகளுக்கும் இணங்க எதிர்வுகூறப்பட்ட கோரிக்கை வளர்ச்சியை எதிர்கொள்வதற்குத் தேசிய மின்சாரக் கொள்கையின் நடைமுறைப்படுத்துகையை உறுதிப் படுத்துதல்;

(iii) மின்சாரத்தொழிலின் நிலைபெறுதகு அபிவிருத்திக்காகத் தேசிய இலக்குகளை எய்துவதற்கென இலங்கையில் மின்சாரத்துக்கும் இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிமமளித்தல், ஒழுங்குபடுத்தும் மற்றும் சோதனைச் செயற்பாடுகள் என்பன தொடர்பான மேற்பார்வைப் பொறிமுறைகளுக்குமான தேவைப்பாட்டை மதிப்பிடுதல்;

(iv) கட்டுபடியான மற்றும் நிலைபெறுதகுமுறையில் நாட்டின் புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலுவை அதிகரிப்பதற்காகவும் மின்வலு உறுதிப்பாட்டை உயர்த்துவதற்காகவும் தேசிய இலக்குகளை எய்துவதற்குக் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஊக்குவிப்புகளை அடையாளங்காணுதல்;

(v) இருபத்தொன்பதாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தேசியக் காப்புவரிக் கொள்கையின் நடைமுறைப் படுத்துகையை வசதிப்படுத்துதல்;

(vi) போட்டி மற்றும் பாவனையாளர் விருப்புத்தெரிவை அறிமுகப்படுத்துவதற்காக மின்சாரச் சந்தைச் சீர்திருத்தங்களைத் தொடக்கிவைப்பதில்

பின்பற்றப்படவேண்டிய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் அடையாளங்காணுதல்;

(vii) தொழிற்பாட்டுச் செலவுகள், தனிசுச் சேவை மற்றும் உரிமம்பெற்றோரின் ஒப்புரவின்மீது நியாயமான திரும்பல் என்பவற்றை மேவுவதற்குப் போதிய பணஓட்டங்களை உறுதிப்படுத்துவதற்குப் போதியதாகவிருக்கக்கூடியதாகப் பாவனையாளர்களுக்கு நம்பகமான மற்றும் கட்டுபடியான மின்வழங்கல் கிடைக்கக்கூடியமையை எல்லா நேரங்களிலும் உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(viii) வெளியிடப்படவேண்டிய மின்சாரத்தொழில் செயல்நிறைவேற்ற அறிக்கைகளின் தன்மைபற்றிய வழிகாட்டுகை; அத்துடன்

(ஆ) பின்வருவன தொடர்பில் ஒழுங்குபடுத்துநர் மற்றும் இயைபான அக்கறைகொண்டுள்ளோரின் கலந்தாலோசனையுடன் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு வழிகாட்டுகையை வழங்குதல்:-

(i) தேசிய மின்சாரக் கொள்கையின் நியதிகளின்படி புதுப்பிக்கத்தக்க மின்வலுவை மேம்படுத்துவதற்குச் சந்தை அடிப்படையிலான ஊக்குவிப்புகள்;

(ii) நம்பகத்தன்மையையும் மின்வலு உறுதிப்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்கு மின்வலுக் களஞ்சியப்படுத்துகை மற்றும் வேறு சிக்கனமான மின்வலு மூலங்களுக்கான ஊக்குவிப்புக் கொள்கைகள்;

(iii) திறந்த அணுகுகை மற்றும் மொத்த விற்பனை மின்சாரச் சந்தையைத் தாபித்தலினூடாகப் போட்டியை அறிமுகப்படுத்துவதற்குத் தேவைப்பட்ட வழிமுறைகள்; அத்துடன்

(iv) ஆகக்குறைந்த சிக்கனமான ஆகுசெலவிலும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட தேசிய இலக்குகளையும் சர்வதேசக் கடப்பாடுகளையும் எதிர்கொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட நம்பகத்தன்மையுடனும் மின்சாரத்தின் வழங்குகையை இயலச்செய்வதற்கு நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல்.

(11) (அ) ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்திற்கமைய, ஒழுங்குபடுத்துநரும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரும் (10) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட எவையேனும் எழுத்திலான கொள்கை வழிகாட்டுநெறிகளுக்கு உடனடியாகப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(ஆ) ஒழுங்குபடுத்துநரும் தேசிய முறைமைத் தொழிற்படுத்து நரும் கொள்கை வழிகாட்டுநெறிகளுக்குப் பயன்கொடுப்பதில் எழக்கூடிய எவையேனும் சிரமங்கள் பற்றி அமைச்சருக்கு அறிவிக்கலாம். அமைச்சர், ஒழுங்குபடுத்துநர் மற்றும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய சிரமங்களை விளித்துரைப்பதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகளைச் சட்டத்தின் கட்டுக்கோப்பினுள்ளும் இயைபான கொள்கை வழிகாட்டுநெறிகள் தொடர்பான கோட்பாடுகளினுள்ளும் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி ஒழுங்குபடுத்துநருக்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கும் அறிவித்தலும் வேண்டும்.

(12) அமைச்சர், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், சட்டத்தின் பாகம் IV இன்கீழ், தேசிய முறைமைத் தொழிற் படுத்துநரின் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிதலும் பற்றித் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்குப் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை எழுத்தில் வழங்கலாம் என்பதுடன் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் அத்தகைய பணிப்புகளுக்கு உடனடியாகப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

## பாகம் III

## மின்சாரத்தொழிலுக்கான ஒழுங்குபடுத்துநர்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத் தொழிலின் ஒழுங்கு படுத்துநராக விருத்தல்

**5.** (1) (இதனகத்துப்பின்னர் "இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட (இச்சட்டத்தில் "ஒழுங்குபடுத்துநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, சட்டமூலமானது பாராளுமன்றத்தின் சட்டமாக எத்தேதியன்று நடைமுறைக்கு வருகின்றதோ அத்தேதியிலிருந்து மின்சாரத்தொழிலுக்கான ஒழுங்குபடுத்துநராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஒழுங்குபடுத்துநர், மின்சாரத்தொழில் தொடர்பாக அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், எல்லா நேரங்களிலும், நியாயத்துடனும், பாகுபாடின்றியும், சுதந்திரமாகவும் உரியநேரத்திலானதும், வெளிப்படையானதும், புறவயமானதும், இச்சட்டத்தின் கோட்பாட்டுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் ஒத்திருக்கின்ற முறையிலும் நியாயமாகச் செயலாற்றுதல் வேண்டும்:

ஆயின், ஒழுங்குபடுத்துநர், குறிப்பிட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் இச்சட்டத்தில் ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராத பட்சத்தில் மட்டுமே, அதனைத் தீர்மானிப்பதற்கு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளை நாடுதலும் அவற்றை ஏற்புடையனவாக்குதலும் வேண்டும்:

ஆயின், மேலும், மின்சாரத்தொழிலுக்கு அவை ஏற்புடையதாகுவதில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றுக்கிடையில் முரண்பாடுள்ள பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(3) ஒழுங்குபடுத்துநர் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தேசிய மின் கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் மற்றும் மின்விநியோகம் உட்பட, மின்பிறப்பாக்கம் மற்றும் மின்கடத்துகையில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கு உரிமங்களை வழங்குதல்;

(ஆ) உரிமங்களின் நிபந்தனைகளைத் தீர்மானித்தல் மற்றும் அத்தகைய ஏற்பாடுகளைத் திரிபுபடுத்துதல் அத்துடன் அத்தகைய நிபந்தனைகளுடன் இணங்கியொழுகாமைக்காக அல்லது அவற்றை மீறியமைக்காக உரிமங்களை இல்லாதொழித்தல்;

(இ) பாவனையாளர் சேவை நியமங்களுக்கு இணங்கியொழுகுதலுட்பட உரிமம்பெற்றவர்களின் செயல்நிறைவேற்றத்தைக் கண்காணித்தல்;

(ஈ) உரிமங்களிலுள்ள நிபந்தனைகளுக்கு அல்லது தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்கு வலுவுறுத்தற் கட்டளைகளை ஆக்குதல்;

(உ) திறந்த அணுகுகையையும் மொத்தவிற்பனை மின்சாரச் சந்தையையும் அறிமுகப்படுத்துவதற்கும் தொழிற்பாட்டுமயமாக்குவதற்கும் ஏற்புடையற்பாலனவான இயைபான ஒழுங்குவிதிகளை வகுத்தமைப்பதற்குப் பிரிவுகள் 13 மற்றும் 30 வரையிலானவற்றின் நியதிகளின்படி அமைச்சருக்கு உதவுதல்;

(ஊ) போட்டிக்கெதிரான சந்தைச் செயல்முறைகள், ஒன்றிணைவுகள் மற்றும் கொள்ளுதல்கள் அத்துடன் அதிகாரங்கொண்ட பதவிகளின் துர்ப்பிரயோகம் என்பனபற்றி விசாரணைசெய்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்;

(எ) 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பிணக்குகளைத் தீர்மானித்தல்;

(ஏ) உரிமம்பெற்றோரினாலும் மின்சாரப் பாவனையாளர்களினாலும் பின்பற்றப்படவேண்டிய காப்பு வழிகாட்டுநெறிகளையும் பணிப்புகளையும் வழங்குதல் மூலம் மின்சார வழங்கல் வலையமைப்பின் காப்பான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துதல் மற்றும் அத்தகைய வழிகாட்டுநெறிகளையும் பணிப்புகளையும் வலுவுறுத்தல்;

(ஐ) மின்சார வழங்குகைப் பெறுமதிச் சங்கிலியில் வினைத்திறனிலான சீராக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் கோரிக்கைசார்ந்த மின்வலு வினைத்திறனிலான சீராக்கத்தை மேம்படுத்துதல்;

(ஒ) மின்பிறப்பாக்க உரிமம்பெற்றோரிடமிருந்து ஊட்டுகைக் காப்புவரி, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்குத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் பேரளவிலான விற்பனைக் காப்புவரி, மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்குச் செலுத்தப்படற்பாலனவான மின்கடத்துகைக் காப்புவரி மற்றும் திறந்த அணுகுகை விதிப்பனவுகள், விநியோகிப்புக் காப்புவரியைக் கொண்டுள்ள (அதாவது, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோரின் வலையமைப்பு ஆகுசெலவுகளுக்காக) மற்றும் மின்வழங்குகைக் காப்புவரியைக் கொண்டுள்ள (அதாவது, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோரின் மின்சக்திக் கொள்வனவுக் காப்புவரிக்காக) முடிவுப் பாவனையாளர் காப்புவரி மற்றும் மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு உரிமம் பெற்றோரினால் அறவிடப்படவேண்டிய அனுமதிக்கப்பட்ட அரசிறை என்பவற்றைக் காலாகாலம் நிர்ணயித்தல்;

(ஓ) அக்கறை கொண்டுள்ளோருடனான கலந்தாலோசனைகளை நடாத்தியபின்னர் நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தை வகுத்தமைக்கும்படி தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ஔ) நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்திற்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் கிடைக்கக்கூடிய மின்பிறப்பாக்கக் கொள்ளளவின் மிகக்குறைந்த ஆகுசெலவிலான சிக்கனமான அனுப்புகைக்கும் இணங்க, புதிய மின்பிறப்பாக்கக் கொள்ளளவின் திறந்த போட்டியுள்ள மின்பெறுகையைக் கடைப்பிடிப்பதனூடாகத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினதும் மின்விநியோகிப்பு உரிமம் பெற்றோரினதும் மின்சக்திக் கொள்வனவு ஆகுசெலவில் ஆகுசெலவிலான குறைப்பு எய்தப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(க) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் பொறுப்பேற்கப்பட்ட மின்பிறப்பாக்க அனுப்புகையின் அனுப்புகைக் கணக்காய்வைப் பொறுப்பேற்றல்;

(ங) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் பொறுப்பேற்கப்பட்ட புதிய மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை மற்றும் மின்வலுக் களஞ்சியப் படுத்துகைக் கொள்ளளவு என்பவற்றின் வர்த்தக நியதிகளைப் பரிசீலனைசெய்தல் மற்றும் அங்கீகரித்தல்; அத்துடன்

(ச) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டத்தை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டத்திலிருந்தான எவையேனும் விலகுகைகளைக் கண்காணித்தல்.

ஒழுங்கு படுத்துநரினால் பேணப்பட வேண்டிய இடாப்பு

**6.** (1) ஒழுங்குபடுத்துநர், இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அதன் அலுவலகத்தில், விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய படிவத்திலான இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) ஒழுங்குபடுத்துநர், பின்வரும் கருமங்களை அத்தகைய இடாப்பில் பதியச்செய்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும் தொடர்பான விபரங்கள்;

(ஆ) அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் உரிமத்தின் நிபந்தனைகளினது திரிபுபடுத்துகை அல்லது அத்தகைய ஏதேனும் உரிமத்தின் இல்லாதொழிப்பு தொடர்பான விபரங்கள்;

(இ) ஒவ்வொரு கட்டளையும், பணிப்பும் அல்லது தீர்மானமும் உட்பட, ஒழுங்குபடுத்துநரின் ஒவ்வொரு முடிபும்;

(ஈ) இச்சட்டத்தின் நியதிகளின்டி ஆக்கப்பட்ட ஒவ்வொரு வலுவுறுத்தற் கட்டளையும்;

(உ) ஒழுங்குபடுத்துநரின் இலச்சினை எந்த வேறு சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப் பட்டுள்ளதோ அந்த வேறு ஏதேனும் சாதனம் அல்லது ஆவணம் தொடர்பான விபரங்கள்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் நியதிகளின்படி நடாத்தப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கேட்பின் நடவடிக்கைகளினது நிகழ்ச்சிக் குறிப்புகள்.

(3) இடாப்பின் உள்ளீடு, நாளின் நியாயமான மணித்தியாலங்களின்போது பொதுமக்களின் பார்வைக்குக் கிடைக்கக் கூடியதாக்கப்படுதல் வேண்டும். இடாப்பில் அடங்கியுள்ள ஏதேனும் தகவலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், விண்ணப்பத்தின்மீது, விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவொன்றின் மீது விண்ணப்பகாரருக்கு வழங்கப்படலாம். இடாப்பில் அடங்கியுள்ள தகவல் ஒழுங்குபடுத்துநரின் வலைத்தளத்தின்மீதும் வெளியிடப் படலாம்.

**7.** (1) ஒழுங்குபடுத்துநர், இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் மற்றும் புரியும் நோக்கத்துக்காக, எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறானவையும் ஒவ்வோர் உரிமம்

தகவலைக் கோருவதற்கு ஒழுங்குபடுத்து நருக்குள்ள தத்துவங்கள்

பெற்றவரினதும் வேறெவரேனும் ஆட்களினதும் கட்டுக்காப்பிலுள்ளவையுமான எல்லாத் தகவல்களையும் அல்லது ஆவணங்களையும் ஒழுங்குபடுத்துநருக்கு அல்லது ஒழுங்குபடுத்துநரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு மற்றும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் கொடுத்துதவும்படி விடயத்துக்கேற்ப, அத்தகைய உரிமம்பெற்றவரையும் ஆளையும் தேவைப்படுத்தலாம்.

(2) ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைக் கொடுத்துதவும்படி (1) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலின்மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் உரிமம்பெற்றவரும் அல்லது ஆளும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவது, அத்தகைய ஆள் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அவ்வாறு தேவைப்படுத்தப்பட்ட ஆவணத்தை அல்லது தகவலைக் கொடுத்துதவுவதிலிருந்து தடைசெய்யப்பட்டாலொழிய, அவரது கடமையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட தகவல் அல்லது ஆவணம் எதுவும், அத்தகைய தகவலை அல்லது ஆவணத்தைக் கொடுத்துதவுகின்ற உரிமம்பெற்றவரின் அல்லது ஆளின் சம்மதத்துடன் தவிர வெளியிடப்படுதலோ அல்லது வேறெவரேனும் ஆளுக்கு ஒழுங்குபடுத்துநரினால் வெளிப்படுத்தப்படுதலோ ஆகாது.

(4) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைக் கொடுத்துதவுகின்ற உரிமம்பெற்றவரின் அல்லது ஆளின் சம்மதமின்றி அத்தகைய தகவல் அல்லது ஆவணங்கள் ஒழுங்குபடுத்துநரினால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுதலானது–

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது அத்தகைய நீதிமன்றத்துக்கு; அல்லது

(ஆ) இச்சட்டத்தினால் ஒழுங்குபடுத்துநருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை நிறைவேற்றும் நோக்கத்துக்காக; அல்லது

(இ) ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துகின்ற இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஓர் உரிமத்தின் நிபந்தனையொன்றுக்கு இணங்கியொழுகுவதனை இயலச்செய்கின்ற நோக்கத்துக்காக; அல்லது

(ஈ) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில்,

(3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையொன்றாக இராததாகக் கருதப்படுதல் வேண் டும்.

மின்பரி சோதகர்கள்

**8.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடியவாறு, முறையாகத் தகைமைபெற்ற அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களை மின்பரிசோதகர்களாக ஒழுங்குபடுத்துநர் நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மின்பரிசோதகரொருவர் பின்வருவனவுட்பட, இப்பிரிவின் நியதிகளின்படி அல்லது இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவது அவரது கடமையாதல் வேண்டும்:-

(அ) மின்பிறப்பாக்கமும் மின்கடத்துகையும், பேரளவிலான கொள்வனவுகளும் பேரளவிலான விற்பனைகளும் உட்பட மின்வியாபாரமும், மின்விநியோகிப்பும் அல்லது மின்வழங்குகையும் என்பவற்றுக்காக ஓர் உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஓர் உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆட்களுக்குச் சொந்தமான மின்வழிகளையும் மின்பொறித்தொகுதிகளையும் சோதனையிடுதலும் பரீட்சித்தலும்;

(ஆ) எவரேனும் பாவனையாளரினால் அவரின் வளவுகளின்மீதுள்ள எவையேனும் மின்வழி மற்றும் மின்பொறித் தொகுதியைச் சோதனைசெய்து பரீட்சிக்கும்படி கோரப்பட்டால் அத்துடன் கோரப்படும்போது, இச்சட்டத்தின் நியதிகளின்படி அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் அல்லது விதியினால் விதிக்கப்பட்ட அத்தகைய மின்வழி அல்லது பொறித்தொகுதி தொடர்பான அல்லது அத்தகைய மின்வழிகளினூடாக அல்லது பொறித்தொகுதி களினூடாக அல்லது அவை மூலமான மின்வழங்குகை தொடர்பான ஏதேனும் தேவைப்பாடு இணங்கி யொழுகப்பட்டுள்ளதாவென்பதனை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அவ்வாறு செய்தலும்; அத்துடன்

(இ) ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, பந்தி (அ) அல்லது (ஆ) என்பவற்றில் குறித்துரைக் கப்பட்ட பணிகளுடன் தொடர்புபட்ட அத்தகைய வேறு துணைநிலைப் பணிகளை நிறைவேற்றுதலும்.

(3) (அ) மின்பரிசோதகர்கள், ஒழுங்குபடுத்துநரின் மேற்பார்வை யின்கீழ் இப்பிரிவின் நியதிகளின்படி அவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்புத் தொடர்பான பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். இப்பிரிவின் நியதிகளின் படி நிறைவேற்றப்பட்ட ஒரு சோதனை அல்லது பரீட்சிப்பு பூர்த்திசெய்யப்பட்டதன்மேல், மின்பரிசோதகர்கள் அத்தகைய பரிசோதகர்களினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சோதனை அல்லது பரீட்சிப்பு பூர்த்தி செய்யப்பட்டதன்மேல் ஏதேனும் மின்இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதியின் ஒவ்வொரு சோதனை அல்லது பரீட்சிப்புத் தொடர்பாகவும் அத்தகைய பரிசோதகரின் கண்டுபிடித்தல்கள் பற்றிய அறிக்கையொன்றை ஒழுங்குபடுத்து நருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஒழுங்குபடுத்துநர் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையைப் பரிசீலனை செய்வதன்மேல், ஒரு மின்பரிசோதகரின் கண்டுபிடித்தல்களுடன் உடன்படலாம் அல்லது உடன்படாது

விடலாம். உடன்படாத பட்சத்தில், ஒழுங்குபடுத்துநர் நடைமுறைப்படுத்துகைக்கு முன்னர், அறிக்கைக்கு அவசியமான மாற்றங்களை செய்வதற்கு இயைபான மின்பரிசோதகரைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஒழுங்குபடுத்துநர், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் இப்பிரிவின் நோக்கங்களுக்காக விதிகளை ஆக்கலாம்:-

(அ) மின்பரிசோதகர்களாக நியமிக்கப்படவேண்டிய ஆட்களின் தகைமைகள்;

(ஆ) மின்பரிசோதகர்களின்மீது விதிக்கப்பட்ட எவையேனும் கடமைகள் எம்முறையிலும், எந்நேரங்களிலும் புரியப்படவேண்டுமோ அம்முறையையும் நேரங்களையும் எடுத்துக்கூறியும்;

(இ) மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்வியாபாரம் மின்விநியோகிப்பு அல்லது மின்வழங்குகை என்பவற்றுக்காக ஓர் உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஓர் உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆட்களைப் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தியும்:-

(i) பதிவேடுகளை அல்லது வேறு இயைபான தகவல்களை மின்பரிசோதகர்களுக்குக் கொடுத்துதவும்படியும்; அத்துடன்

(ii) அத்தகைய மின்பரிசோதகர்களுக்கு வளவுகளுக்கான அணுகுகையையும் மின்பொறித் தொகுதிகளுக்கும் வேறு வசதிகளுக்குமான பயன்பாட்டையும் அனுமதிக்கும்படியும்;

(ஈ) அத்தகைய மின்பரிசோதகர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் எவையேனுமிருப்பின், செலுத்தப்படற்பாலதான பணத்தொகையையும் அத்தகைய பணத் தொகைகள் எவ்வாட்களினால் செலுத்தப்படற்பாலனவென்பதையும் குறித்துரைத்தும்;

(உ) உரிமம்பெற்றவரொருவர் எச்சூழ்நிலைகளில் மின்வழங்குகைக்கான அதன் கடப்பாட்டிலிருந்து விட்டுவிடப்படலாமோ அச்சூழ்நிலைகளை அடையாளங்கண்டும்; அத்துடன்

(ஊ) (2) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது (ஆ) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மின்வழிகள் மற்றும் மின்பொறித்தொகுதிகளைச் சோதனையிடுதல் மற்றும் பரீட்சித்தல் தொடர்பாக ஒரு மின்பரிசோதகருக்கும் ஒரு பாவனையாளருக்கும் அல்லது உரிமம்பெற்றவருக்கும் இடையே உடன்பாடின்மை ஏற்படும் பட்சத்தில், பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை எடுத்துக்கூறியும்.

(5) இப்பிரிவின்கீழ் மின்பரிசோதகரினால் பெறப்பட்ட ஏதேனும் கட்டணம், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 31 றின்கீழ் தாபிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துநரின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரைத் தாபித்தல்

தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமத்தின் வழங்குகைக்கான தகவுடைமை

**9.** இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்டதும் அதன் பங்குகளில் நூறு சதவீதத்தை அரசாங்கம் அதில் வைத்திருக்கின்றதுமான வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று, தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமத்தின் வழங்குகைக்காக இச்சட்டத்தின் நியதிகளின்படி விண்ணப்பிப்பதற்குத் தகவுடையதாதல் வேண்டும்.

**10.** (1) (அ) ஒன்பதாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று (இதனகத்துப்பின்னர் "தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "தேசிய முறைமைத் தொழிற்படுத்துநராக" இருத்தல் வேண்டு மென்பதுடன் அத்தகைய கம்பெனிக்குத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமமொன்று ஒழுங்குபடுத்துநரினால் வழங்கப்படுதலும் வேண்டும்.

தேசிய முறைமைத் தொழிற்படுத்து நருக்கு உரிமம் வழங்குதலும், பணிப்பாளர் சபையும் அதன் பணிகளும்

(ஆ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் அலுவல் களினது நிருவாகமும் முகாமையும், அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப் படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) ஒரு மேலதிகச் செயலாளர் என்ற பதவிக்குக் குறையாத பதவியொன்றை வகிக்கின்ற அமைச்சரின் அமைச்சிலிருந்தான பிரதிநிதியொருவர்;

(ii) திறைசேரிப் பிரதிச் செயலாளரொருவர்;

(iii) மின்சக்தி முறைமைத் தொழிற்பாடு மற்றும் திட்டமிடுதலில் ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகளைக்கொண்ட அனுபவத்தையேனும் கொண்டுள்ள மின்பொறியியலாளரொருவர்;

(iv) கருத்திட்ட நிதி மற்றும் பெறுகையில் ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகளைக்கொண்ட அனுபவத்தை யேனும் கொண்டுள்ள ஆளொருவர்; அத்துடன்

(v) வர்த்தகச் சட்டத்தில் நிபுணத்துவத்தைக் கொண்ட வரும், திறமை எய்தியுள்ளவரும், ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகளைக் கொண்ட அனுபவத்தை யேனும் கொண்டுள்ளவருமான ஆளொருவர்;

இவர்களுள் ஒருவர் தவிசாளராக அமைச்சரினால் நியமிக் கப்படுதல் வேண்டும்.

(இ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் பிரதான நிறைவேற்றலுவலர் நிருவாகத்தில் நிபுணத்துவம் கொண்டவ ராகவும் திறமை எய்தியுள்ளவராகவும், ஆகக்குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவராகவும் இருத்தல் வேண்டும்; அவர் அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் பணிப்பாளர் சபையும் பிரதான நிறைவேற்றலுவலரும், விடயத்துக்கேற்ப, பணிப்பாளர்கள் சபையின் பணிப்பாளரொருவராக அல்லது பிரதான நிறைவேற்றலுவலராகப் பதவியேற்குமுன்னர் அவர்களின் நியமனத்தேதியன்றுள்ளவாறு அவர்களின் அக்கறைகளின் பொது வெளிக்காட்டுகையொன்றை அமைச்ச ருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) சபையின்முன்னர் எடுக்கப்படுவதற்குள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறைகொண்டுள்ள எவரேனும் பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்றலுவலர், சபைக்கு அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அக்கருமம் தொடர்பான சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

(2) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் பின்வருவன வற்றுக்குப் பொறுப்பாதல் வேண்டும்:-

(அ) இலங்கையின் மின்சக்தி முறைமையின் நிகழ்வுநேரத் தொழிற்பாட்டுக்காக முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தைத் தொழிற்படுத்துதலும் பேணுதலும்;

(ஆ) அடுத்துவரும் ஆண்டில் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட புதிய மின்பிறப்பாக்கக் கொள்ளளவுட்பட, கிடைக்கக்கூடிய மின்பிறப்பாக்கக் கொள்ளளவிலிருந்து அடுத்துப் பின்வரும் ஆண்டுக்காக

மின்சாரத்துக்கான எதிர்வுகூறப்பட்ட கோரிக்கையை எம்முறையில் எதிர்கொள்வதற்குத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உட்கருதுகின்றதோ அம்முறையை எடுத்துக்கூறி ஒழுங்குபடுத்துநருக்கு ஒவ்வோராண்டினதும் செத்தெம்பர் முப்பதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் மிகக்குறைவான சிக்கனமான ஆகுசெலவின் அடிப்படையின் மீதான வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டத்தைச் சமர்ப்பித்தல்;

(இ) நாட்டின் மின்சக்தி முறைமையின் ஒன்றிணைக் கப்பட்ட தொழிற்பாடு, வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டத்திலுள்ள எதிர்வுகூறல்களின் அடிப்படையின்மீது இருப்பதனை உறுதிப் படுத்துதலும் வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டத்திலிருந்தான எவையேனும் வேறுபாடுகளைக் கண்காணித்தலும் அவற்றுக்கான காரணங்களுடன் ஒவ்வொரு பஞ்சாங்க மாதத்தினதும் முடிவில் அவற்றை ஒழுங்குபடுத்துநருக்கு அறிக்கையிடுதலும்;

(ஈ) மின்வழங்குகை மற்றும் கோரிக்கை என்பவற்றுக்கிடையேயான சமநிலையை நிகழ்வு நேரத்தில் உறுதிப்படுத்துவதற்கு மின்சக்தி முறைமையின் ஒருங்கிணைந்த தொழிற்பாடும்; இந்நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(i) விதித்துரைக்கப்படவேண்டியவாறு அதியுச்ச மின்பிறப்பாக்க அட்டவணைப்படுத்துகையும் அனுப்புகையும் தொடர்பிலான கோட்பாடுகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் முறைமையியல்களுடன் இணங்கியொழுகுதல்;

(ii) கொடுக்கப்பட்ட எந்நேரத்திலும் மின்சாரத்துக்கான மொத்தக் கோரிக்கையை எதிர்கொள்வதற்கு மிகவும் சிக்கனமான மற்றும் அனுகூலமான நியதிகளின்மீதும் வெளிப்

படையான, வகைகூறவேண்டிய முறையிலும் செய்துகொள்ளப்பட்டுள்ள அல்லது தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்குக் கைமாற்றப் பட்டுள்ள மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளுக்கு அல்லது நியமப்படுத்தப் பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை களுக்கு இணங்க அதியுச்ச மின்பிறப்பாக்க அட்டவணைப்படுத்துகையும் மின்பிறப்பாக்கப் பொறித்தொகுதிகளிலிருந்து மின்சார அனுப்புகையும். பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகளும் பயன்படுத்தப்பட வேண்டிய உடன்படிக்கைகளின் படிவங்களும் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்;

(iii) மின்கட்டமைப்புக் கோவைக்கு இணங்க இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பின் உறுதியான மற்றும் சிக்கனமான தொழிற் பாட்டினூடாக மின்கட்டமைப்புக் கட்டுப்பாட் டுக்காகவும் நாளாந்த மின்சக்தி அனுப்புகைக் காகவும் நிகழ்வு நேரத் தொழிற்பாடுகளை நிறைவேற்றுதலும், மின்கட்டமைப்புத் தொழிற் பாடுகளைக் கண்காணித்தலும் விதித்துரைக்கப் படவேண்டியவாறான அத்தகைய முறையில் ஒழுங்குபடுத்துநருக்கு அனுப்புகைக் கணக் காய்வை நடாத்துவதற்காகத் தேவைப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் வழங்குதலும்;

(உ) உரிய நேரத்திலான மற்றும் பயனுள்ளவொரு முறையில் ஓரங்காட்டுகைசாரா மின்கடத்துகை நெருக்கடி முகாமையை உறுதிப்படுத்துதல்;

(ஊ) மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளினூடாக அல்லது நியமப்படுத்தப்பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளினூடாக ஒரு மின்பிறப்பாக்க உரிமம்பெற்றவரிடமிருந்து பேரளவிலான

மின்சாரத்தைக் கொள்வனவுசெய்தல் தொடர்பாக எல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களையும் பதிவதற்குப் பேரளவிலான வழங்குகைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கொன்றைத் தாபித்தலும் அத்தகைய கணக்கின் விபரங்கள் பற்றிய மாதாந்தப் பகிரங்க வெளிக்காட்டுகையும் மின்சாரத்தின் இறக்குமதியையும் ஏற்றுமதியையும் கண்காணித்தல் உட்பட, மின்சக்தி விற்பனை உடன்படிக்கைகளினூடாக, அல்லது ஒழுங்குபடுத்துநரின் முன்னங்கீகாரத்துடன் வேறெவரேனும் பாவனையாளர்களுக்கு, அல்லது பிராந்தியச் சந்தையுடன் மின்வியாபாரஞ்செய்தலின் விடயத்தில் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கு விற்பனைசெய்தலும். பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகளும் பேரளவிலான வழங்குகைக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்கினதும் பயன்படுத்தப் படவேண்டிய உடன்படிக்கைகளினதும் படிவங்களும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்:

(எ) இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பினூடாகக் கடத்தப்பட்ட மின்சாரத்தின் அளவும் தரமும் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல்;

(ஏ) இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பின் ஒட்டு மொத்தத் தொழிற்பாட்டின்மீது மேற்பார்வையையும் கட்டுப்பாட்டையும் பிரயோகித்தல்; அத்துடன்

(ஐ) 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, புதுப்பிக்கப் படற்பாலனவான மின்வலுப் பொறித்தொகுதிகளி லிருந்தான வெளியீட்டின் இடைக்கிடையேயான தன்மையை முகாமைசெய்வதற்கு, ஒழுங்குபடுத்து நரினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறை களுக்கிணங்க, காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப் பட்டவாறாக மின்வலுக் களஞ்சியப்படுத்துகையையும் துணைநிலைச் சேவைகளையும் பெறுதல்:

ஆயின், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், விதித்துரைக்கப்படவேண்டியவாறான முறை யிற்றவிரவும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய வன்றியும் ஏதேனும் வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபடுதலாகாது.

(3) அமைச்சர், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் அவை நடைமுறைப் படுத்தப்படவேண்டிய (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுக்கான நடவடிக்கைமுறையையும், படிவத்தையும், முறையையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(4) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் பின்வருவனவற்றுடன் சம்பந்தப்பட்டதாக 18 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான இலங்கை மின்சாரச் சபையின் பணிகளினது கைமாற்றுகை, இலங்கை மின்சாரச்சபையின் மேற்கூறப்பட்ட பணிகள் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு உரித்தாக்கப்பட்டதனை யடுத்துச் செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் குறிப்பிடப் படுகின்றது:-

(அ) மின்பிறப்பாக்க அட்டவணைப்படுத்துகையும், ஈடுபடுத்துகையும் மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதிகளின் திறமை ஒழுங்குவரிசைச் சிக்கன அனுப்புகையும்;

(ஆ) ஆகுசெலவு, சிக்கனமான பெறுமதி மற்றும் கரியமகற்றுகைக் குறிக்கோள்கள் என்பனவற்றைக் கவனத்துட்கொண்டு மின்சாரக் கோரிக்கையை எதிர்கொள்வதற்கு எதிர்கால மின்சக்தி முறைமையின் அதியுச்சளவினதாக்கப்பட்ட திட்டமிடுகை;

(இ) முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் தொழிற் பாடும் பேணுகையும்; அத்துடன்

(ஈ) மின்பிறப்பாக்க உரிமம்பெற்றோரிடமிருந்து பேரளவு வடிவத்திலான மின்சாரத்தைப் பெறுதலும் அத்தகைய பெறப்பட்ட பேரளவு வடிவத்திலான மின்சாரத்தை

மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கும் உள்நாட்டு, பிராந்திய அல்லது சர்வதேசச் சந்தையில் வியாபாரஞ்செய்கின்ற வேறெவரேனும் பாவனையாளர்களுக்கும் விற்பனைசெய்தலும்.

(5) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தை இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை தயாரித்தல் வேண்டும்; இது, பத்தாண்டுக் காலப்பகுதியை மேவுகின்ற மின்பிறப்பாக்க மற்றும் மின் கடத்துகைக் கொள்ளவையும், மின்வலுக் களஞ்சியப்படுத்துகையையும் துணைநிலையான சேவைச் சேர்க்கைகளையும் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட தேசிய மின்சாரக் கொள்கைக்கும் வழங்கப்பட்ட கொள்கை வழிகாட்டுநெறிகளுக்கும் இணங்க, பத்தாண்டுகளைக் கொண்ட மேலதிகக் காலப்பகுதிக்காகச் சுட்டிக்காட்டுகைத் திட்டமொன்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(6) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், சொல்லப்பட்ட நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதில், ஆகக்குறைந்த சிக்கனமான ஆகுசெலவுக் கோட்பாடு, மிகவும் சிக்கனமானமுறையில் அனுகூலம்வாய்ந்த மின்சார மின்பிறப்பாக்கக் கொள்ளளவு மற்றும் வேறு சாத்தியமான மாற்று வழிமுறைகள் கிடைக்கக்கூடியமையைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அவற்றை ஒழுங்குபடுத்துநருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(7) (அ) ஒழுங்குபடுத்துநர், உரிமம் பெற்றோர் உட்பட இயைபான அக்கறை கொண்டுள்ளோருடனான கலந்தாலோசனையின்பின்னர், திட்டம் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு விதப்புரைகளை வழங்குதல் வேண்டும்.

(ஆ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், பந்தி (அ) வின்கீழ் பெறப்பட்ட விதப்புரைகளைக் கவனத்துட் கொண்டு திட்டத்தை இறுதியாக்குதல் வேண்டுமென்பதுடன் ஒழுங்குபடுத்துநரினால் செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை

ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களுட்பட, அத்தகைய விதப்புரைகள் பெறப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் அவற்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். அமைச்சர், ஒழுங்குபடுத்துநரினதும் பேரவையினதும் கலந்தாலோசனையுடன், திட்டத்தைப் பரிசீலனைசெய்தல் வேண்டுமென்பதுடன் தேசிய மின்சாரக் கொள்கைக்கு அது ஒத்திருக்கின்றதென்பதுபற்றித் திருப்திப்படுவதன்மேல், ஆண்டு முடிவடையுமுன்னர் அதனை அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். அமைச்சரவை, காரணங்களைக் குறிப்பிட்டதன்மேல், திட்டம் பெறப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் திட்டத்தை ஒன்றில் அங்கீகரித்தல் வேண்டும் அல்லது அதற்கு அங்கீகாரம் மறுத்தல் வேண்டும்.

(8) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வகைகூறவேண்டியதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலிருந்து தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் செய்யப்பட்ட எவையேனும் விலகுதல்கள்பற்றி அமைச்சருக்கும் ஒழுங்குபடுத்துநருக்கும் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(10) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்திலிருந்து செய்யப்பட்ட விலகுகைகளையும் அத்தகைய விலகுகைகளுக்கான காரணங்களையும் அத்தகைய விலகுகைகளிலிருந்து எழுகின்ற பொருளாதாரக் கரிசனைகள் எவையேனுமிருப்பின் அவற்றையும் குறித்துரைத்து அமைச்சருக்கும் ஒழுங்குபடுத்துநருக்கும் வருடாந்தம் அறிக்கையொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(11) நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டம் -

(அ) ஆகக்குறைந்த சிக்கன ஆகுசெலவு மின்பிறப்பாக்கத் தொழினுட்பவியல்கள், மின்வலுப் பேணிக்காப்பு மற்றும் களஞ்சியப்படுத்துகைத் தொழினுட்பவியல்கள்

அத்துடன் வேறு கோரிக்கைசார்ந்த தொழினுட்ப வியல்கள் உட்பட, மின்பிறப்பாக்க விசாலிப்பு மற்றும் மின்கடத்துகை வலையமைப்பு அபிவிருத்தி ஆகிய இரண்டுக்கும் மின்சாரத்துக்கான நியாயமான மதிப்பிடப்பட்ட கோரிக்கையை எதிர்கொள்வதற்கு மின்பிறப்பாக்கப் பொறித்தொகுதிகளிலிருந்து போதிய கொள்ளளவு இருப்பதனை உறுதிப்படுத்து வதற்கான திட்டங்களை உள்ளடக்குதல் வேண்டும்;

(ஆ) தேசிய மின்சாரக் கொள்கையில் உருவரையப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் மின்சாரத் துக்கான எதிர்பார்க்கப்பட்ட கோரிக்கையை எதிர் கொள்வதற்குத் தேவையான மின்சக்திப் பிறப்பாக்கக் கொள்ளளவுச் சேர்கைகளை அடையாளங்காணுதல் வேண்டும்;

(இ) 15 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பை அதிகாரிப்பதற்கும் ஒழுங்குபடுத்துநரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய அங்கீகரிக்கப் பட்ட நீண்டகால மின்சக்தி அபிவிருத்தித் திட்டத்துக் கிணங்கப் புதிய மின்சக்திப் பொறித்தொகுதிகளுக்குத் தொடுப்பை வழங்குவதற்கும் அல்லது பிராந்தியச் சந்தைகளுக்குத் தொடுப்பை வழங்குவற்கும் புதிய மின்கடத்துகைக் கொள்ளளவையும் மின்கடத்துகைச் சொத்துக்களையும் அடையாளங்காணுதல் வேண்டும்.

(12) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநருடனும் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநரினாலும் மேலதிக மின்கடத்துகை உரிமம்பெற்றோரினாலும் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட மின்கடத்துகை மற்றும் வலையமைப்பு வசதிகளின்மீது தொழிற்பாட்டு அதிகாரத்தைத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு வழங்கி 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி மேலதிக மின்கடத்துகை

உரிமங்கள் வழங்கப்படுகின்ற ஆட்களுடனும் மின்கடத்துகைச் சேவை உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்குத் தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்.

(13)(அ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டவொரு தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் வேறு நாடுகளுடன் மின்வியாபாரஞ்செய்வதற்குப் புறநீங்கலான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின்கீழ் செய்வதற்கு உட்கருதப்பட்ட வியாபாரத்தின் நியதிநிபந்தனைகள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) மின்பிறப்பாக்க உரிமம்பெற்றவர் எவரும் ஏதேனும் நாட்டுக்கு மின்சாரத்தை நேரடியாக விற்பதற்கு அதிகார மளிக்கப்படுதலாகாதென்பதுடன் பாவனையாளர் அல்லது மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் எவரும் ஏதேனும் நாட்டிலிருந்து மின்சாரத்தைக் கொள்வனவுசெய்வதற்கு அதிகாரமளிக்கப்படுதலுமாகாது.

(14) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், (12) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக மின்பிறப்பாக்க உரிமம்பெற்றவர்களுடன் மின் சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளையும் மின்கடத்துகை உரிமம்பெற்றவர் களுடன் மின்கடத்துகைச் சேவை உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதல் வேண்டும்:

ஆயின், இலங்கை மின்சாரச்சபையினால் செய்துகொள்ளப் பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நடைமுறையில் உள்ளவையுமான எல்லா மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளும் நியமப்படுத்தப்பட்ட மின்சக்திப் கொள்வனவு உடன்படிக்கைகளும், அத்தகைய மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளின் அல்லது நியமப்படுத்தப்பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை களினதும் எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக அதே நியதிநிபந்தனை

களின் கீழ் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்குக் குறித்தளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி செய்துகொள்ளப்பட்டன என்றாற்போன்று செல்லுபடியானவையாகவும் பயனுள்ளவையாகவும் தொடர்ந் திருத்தலும் வேண்டும். எந்த மின்பிறப்பாக்க உரிமம்பெற்ற வர்களுடன் அத்தகைய மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை களும் நியமப்படுத்தப்பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன் படிக்கைகளும் செய்துகொள்ளப்பட்டனவோ அந்த மின்பிறப்பாக்க உரிமம்பெற்றவர்கள், அத்தகைய உடன்படிக்கைகள் முடிவுறும் வரை தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு மின்சாரத்தை விற்பதற்குக் கடப்பாடுடையவர்களாதல் வேண்டும்.

**11.** (1) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்துக்கிணங்க, பெறுகை

(அ) பின்வரும் நடவடிக்கைமுறையின் அடிப்படையில் கேள்விப்பத்திரங்களைக் கோருவதன்மூலம் மின்சாரத்தை, மின்பிறப்பாக்கற் கொள்ளளவை மற்றும் மின்வலுக் களஞ்சியப்படுத்துகைக் கொள்ளளவைப் பெறுதல் வேண்டும்:-

தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், ஏதேனும் புதிய மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியைப் பெறுவதனை மேற்கொண்டுநடாத்துவதற்கு அல்லது (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தொடக்கநிலைக் கொள்ளளவுக்கு விஞ்சுதலாக ஏலவேயுள்ளவொரு பொறித்தொகுதியின் மின்பிறப்பாக்கற் கொள்ளளவை, மின்வலுக் களஞ்சியப்படுத்துகைக் கொள்ளளவை மற்றும் வேறேதேனும் வகையினதான துணைநிலைச் சேவைக் கொள்ளளவை விசாலிப்பதற்காக முன்மொழிவுகளைக் கோருதல் வேண்டுமென்பதுடன் பகிரங்கத் தனியார் பங்காண்மைகளுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுட்பட, மின்பெறுகையானது ஒரு வெளிப்படையான மற்றும் போட்டியுள்ள முறையில் பொறுப்பேற்கப்படுதலும் வேண்டும். அத்தகைய மின்பெறுகைக்காக மின்சாரத்தொழிலின் குறித்த நடவடிக்கைமுறைகள் மற்றும் அதற்குத் தேவையான படிவங்கள் அரசிய லமைப்பின் 156ஆ (1) ஆம் உறுப்புரையின் நியதிகளின்

படி தாபிக்கப்பட்ட தேசியப் பெறுகை ஆணைக்குழுவு டனான கலந்தாலோசனையுடன் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்டவாறாக விருத்தலும் வேண்டும்:

ஆயின், -

(i) மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியின் கொள்ளளவு (3) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு தொடக்கநிலைப் பெறுமதிக்குக் குறைவாக அல்லது சமமாக இருப்பின், அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு மின்வலு அதிகாரசபைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் இலங்கை நிலைபெறுதகு மின்வலு அதிகாரசபையினால் புதுப்பிக்கத் தக்க மின்வலு வளங்களினூடாக மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பின்;

(ii) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று ஒரு புதிய மின்பிறப் பாக்கற் பொறித் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது ஏலவேயுள்ள மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதி யொன்றின் மின்பிறப்பாக்கக் கொள்ளளவை விசாலிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட் டுள்ளவிடத்து; அல்லது

(iii) நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று 2009ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாட்டிற்கிணங்க, இலங்கை மின்சாரச் சபையினால் ஒரு செல்லுபடியான அளிப்புக்கடிதம் வழங்கப்பட்டுள்ளவிடத்து,

தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தேவைப் படுத்தப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு கேள்விப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கான தேவைப் பாடு, இழுபட்ட விலைகூறலைக் கோருவதற் கான செய்முறை இயல்திற நன்மையை அல்லது மிகக்குறைந்த ஆகுசெலவில் எவரேனுமாளினால் வழங்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட மின்பெறுகைக்கான அவசரக் கொள்ளளவை விஞ்சுமிடத்து, ஒரு தேசிய இடர்நிலையின்போது அல்லது ஒரு பாரிய மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதி யின் நீண்டகாலக் கட்டாயச் செயலிழப்பின் போது அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டவாறு ஏதேனும் அவசரநிலைமையை எதிர்கொள்வதற்கு அபிவிருத்தி செய்யப் பட்டுவருகின்ற ஏதேனும் புதிய மின்பிறப் பாக்கற் பொறித்தொகுதி அல்லது ஏதேனும் ஏலவேயுள்ள மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதியின் விசாலிப்புத் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது;

(ஆ) பின்வரும் நடவடிக்கைமுறையின் அடிப்படையின் மீதான மின்கடத்துகைக் கொள்ளளவைப் பெறுதல் வேண்டும்:-

(i) அமைச்சர், அமைச்சரவையின் அங்கீகாரத் துடன், தேசியப் பொருளாதாரத்தின் நலன் கருதி, தேசிய மின்கடத்துகை வலையமைப் புச் சேவை வழங்குநரினால் கட்டியெழுப் பப்படுவதற்குக் குறித்தசில மின்கடத்துகைச் சொத்துக்களைக் குறித்தளிக்கும்படி தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு அறிவிக்க லாம்.

(ii) அமைச்சர், அமைச்சரவையின் அங்கீகாரத் துடன், பகிரங்கத் தனியார் பங்காண்மை முறைமையைப் பயன்படுத்திப் பெற வேண்டிய குறித்தசில மின்கடத்துகைச் சொத்துக்களைக் குறித்தளிக்கலாம். தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், வெளிப்

படையான மற்றும் போட்டியுள்ள முறையில் அத்தகைய மின்கடத்துகைச் சொத்துக்களைப் பெறுவதற்கான முன்மொழிவுகளைக் கோருதல் வேண்டும். அத்தகைய பெறுகைக் கான குறிப்பிட்ட நடவடிக்கைமுறைகளும் அவற்றுக்குத் தேவையான படிவங்களும் அரசியலமைப்பின் 156ஆ(1) ஆம் உறுப் புரையின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட தேசியப் பெறுகை ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக் கப்பட்டவாறாகவிருத்தலும் வேண்டும்.

(iii) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், தெரிவு செய்யப்பட்ட திறத்தவருக்கு அளிப்புக்கடிதமொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஒழுங்குபடுத்துநர், தேசிய முறைமைத் தொழிற் படுத்துநரின் எவையேனும் விதப்புரைகளைப் பெற்றதன்மீது, மின்சாரத்தை அல்லது மின்சாரத்தைப் பிறப்பிக்கும் கொள்ளளவைக் கொள்வனவு செய்வதற்காக விதந்துரைக்கப் பட்ட விலை நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு ஒத்ததாகவுள்ளதென்றும் அத்தகைய கொள்வனவின் நியதிநிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழினுட்ப மற்றும் சிக்கனமான நிலை அளபுருக்களினுள் உள்ளனவென்றும் ஒழுங்குபடுத்துநர் திருப்திப்படுமிடத்து, அதன் மிக்க முற்கூட்டிய வசதிக்கேற்ப அதன் அங்கீகாரத்தை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர், பேரவையின் மதியுரையின்மீது, வர்த்தமானி யில் வெளியிடப்படும் கட்டளைமூலம், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருடன் நியமப்படுத்தப்பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படக்கூடிய எவையேனும் புதுப்பிக்கத்தக்க மின்வலு தொழினுட்பவியல் அடிப்படையிலான மின்சக்திப் பொறித் தொகுதிகளின் அதிபட்சக் கொள்ளளவைக் குறித்துரைக்கலாம்:

ஆயின், ஒன்றுதிரண்ட அடிப்படையில் நியம மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளைப் பயன்படுத்தி அணித்தா யுள்ளவோர் அமைவிடத்திலிருந்து பெறப்படவேண்டிய அத்தகைய புதுப்பிக்கத்தக்க மின்வலுப் பொறித்தொகுதிகளின் அதிகபட்சக்

கொள்ளளவு 10 மெகாவோட்டுக்களை விஞ்சுதலாகாது; புதிய கொள்ளளவின் போட்டியுள்ள பெறுகைக்கான நடவடிக்கை முறைகளை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் நிலைநாட்டப் பட்டவுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையின்மூலம் இது மேலும் குறைக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், இலங்கையின் ஆள்புலத்தினுள்ளும் இலங்கை நீர்ப்பரப்புகளினுள்ளும் அமைந்துள்ள மின்சார ஏற்றுமதிகளை உட்படுத்தக்கூடிய ஏதேனும் மின்சாரக் கருத்திட்டம், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மட்டுமே பொறுப்பேற்கப் படுதல் வேண்டும்.

கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதிகளும் ஒப்படைக்கப்பட்ட மின்கடத்துகை இணைப்புக்களும்

**12.** (1) இப்பாகத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எவரேனுமாள் ஒரு கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியையும் ஒப்படைக்கப்பட்ட மின்கடத்துகை இணைப்புக்களையும் நிர்மாணிக்கலாம், பேணலாம் அல்லது தொழிற்படுத்தலாம்:

ஆயின்,-

(அ) இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பினூடாக ஒரு கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியிலிருந்து மின்சாரத்தை வழங்குதல், ஒரு மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவரின் மின்பிறப்பாக்க நிலையம்போன்று அதேமுறையில் ஒழுங்குபடுத்தப் படுதல் வேண்டும்;

(ஆ) மின்சக்திப் பிறப்பாக்கத்துக்காகவும் மின்கடத்துகைக் காகவும் ஒழுங்குபடுத்துநரினால் வழங்கப்பட்ட காப்பு ஒழுங்குவிதிகள், கட்டுப்பட்ட எல்லா மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதிகள் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும். ஏதேனும் கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதி, 28 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்பட்ட தொடக்கநிலைக் கொள்ளளவை விஞ்சுமிடத்து, அத்தகைய பொறித்தொகுதிகள் ஒரு மின்பிறப்பாக்கல் உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதியும் ஒப்படைக்கப்பட்ட மின்கடத்தல் இணைப்புக்களும் இலங்கையின் தேசிய மின் கட்டமைப்புடன் தொடுக்கப்பட்டிருப்பின், அத்தகைய கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதிகள், விடயத்துக்கேற்ப, ஒரு கட்டுப்பட்ட மின்பிறப்பாக்க அல்லது மின்கடத்துகை உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இலங்கையின் தேசிய மின்கட்டமைப்புக்குத் தொடுக்கப்பட்ட அத்தகைய கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதிகள், மின்கட்டமைப்புக் கோவைக்கும் ஒழுங்குபடுத்து நரினாலும் தேசிய மின்கடத்தல் வலையமைப்புச் சேவை வழங்குநரினாலும் விதிக்கப்பட்ட மின் கட்டமைப்புக் கோவைக்கும் வேறு தொழினுட்ப நிலை அளபுருக்களுக்கும் காப்பு வழிமுறைகளுக்கும் இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒரு கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியை நிர்மாணித்து அத்தகைய பொறித்தொகுதியைப் பேணித் தொழிற்படுத்துகின்ற ஒவ்வோராளும், திறந்த அணுகுகையும் அது தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட விதிப்பனவுகளின் கொடுப்பனவும் தொடர்பாக விதித்துரைக்கப்படவேண்டிய வாறான வழிகாட்டுநெறிகளுக்கிணங்க அத்தகைய பொறித் தொகுதியிலிருந்து பாவனைச் சேரிடத்துக்கு மின்சாரத்தைக் கொண்டுசெல்லும் நோக்கத்துக்காகத் திறந்த அணுகுகைக்கான உரிமையைத் துய்த்தல் வேண்டும்:

ஆயின், அத்தகைய திறந்த அணுகுகை, போதிய மின் கடத்துகை மற்றும் மின்விநியோகிப்புக் கொள்ளளவு கிடைக்கக்கூடியமைக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டு மென்பதுடன் இது தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநரினாலும் மற்றும் இயைபான மின் விநியோகிப்பு உரிமம்பெற்றவரினாலும் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்புக் கொள்ளளவு கிடைக்கக்கூடியமை தொடர்பான ஏதேனும் பிணக்கு ஒழுங்குபடுத்துநரினால் தீர்க்கப்படுதல் வேண்டும்.

திறந்த அணுகுகை

**13.** (1) அமைச்சரானவர், ஒழுங்குபடுத்துநர், தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் மற்றும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் என்போருடனான கலந்தாலோசனையுடன், இச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தேதியிலிருந்து திறந்த அணுகுகையின் ஏற்புடைமையைத் தொழிற்படுத்துதல் வேண்டும். அத்தகைய திறந்த அணுகுகை, கட்டம்கட்டமான முறையில் தொழிற்பாடுடையதாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அடுத்துறும் கட்டங்களில் திறந்த அணுகுகையின் அளவு, விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய முறையில் இடம்பெறுதலும், விதித்துரைக்கப் படக்கூடியவாறான தனிவரிகளின் கொடுப்பனவும் வேறு தொழிற்பாடுசார் வரையறைகளும் உட்பட அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும். திறந்த அணுகுகை விதிப்பனவுகளும் அவற்றின்மீது செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் மிகைக்கட்டணமும், பாகம் VIII இன் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய பணத்தொகையில் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

(2) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் மின்வழங்குகை இடப்பரப்பினுள் தனிவரியை எதிர்கொள்வதற்கு (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பெறப்பட்ட மிகைக்கட்டணம் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின்–

(அ) அத்தகைய மிகைக்கட்டணமும் தனிவரிகளும் தேசியக் காப்புவரிக் கொள்கையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் படிப்படியாகக் குறைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எவ்வாள் தனது சொந்தப் பாவனைக்காக மின்சாரத்தை ஒரு சேரிடத்துக்குக் கொண்டுசெல்வ தற்காகக் கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதியொன்றைத் தாபித்துள்ளாரோ அவ்வாளுக்குத் திறந்த அணுகுகை வழங்கப்படின், அத்தகைய மிகைக்கட்டணம் அறவிடப்படுதலாகாது.

## பாகம் V

### தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர்

*தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்துக்காக விண்ணப்பிப் பதற்கான தகவுடைமை*

**14.** (1) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட எந்தக் கம்பெனியின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகளை இலங்கை அரசாங்கம் வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி தவிர்ந்த ஆளெவரும் இச்சட்டத்தின் நியதிகளின்படி தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடைய வராதலாகாது.

(2) பதினோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கிணங்க மின்கடத்துகை இணைப்பொன்றை நிர்மாணிப்பதற்காகத் தேசிய முறைமைத் தொழிற்படுத்து நரினால் அளிப்புக் கடிதம் வழங்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள், மேலதிக மின்கடத்துகை உரிமமொன் றுக்காகவும் ஏற்புடையற்பாலதான மின்கட்டமைப்புக் கோவைக்கும் வேறு தொழினுட்ப நியமங்களுக்கும் நிலை அளபுருக்களுக்கும் இணங்க நிர்மாணத்தை மேற்கொண்டு நடாத்துவதற்கான அங்கீகாரத்துக்காகவும் ஒழுங்குபடுத்து நருக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அத்தகைய மேலதிக மின்கடத்துகை உரிமம் பெற்றோருக்கு அவர்களினால் கட்டியெழுப்பப்பட்ட அத்தகைய மின்கடத்துகைச் சொத்துக்களின் சொத்தாண்மையை வைத்திருப்பதற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மின்கட்டமைப்புக் கோவைக்கிணங்கவும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் தீர்மானிக்கப்பட்டவாறு மேன்மிகையான மின்கடத்துகை மிகைக்கடத்துகைக் கொள்ளளவு கிடைக்கக்கூடிய மைக்கமையவும் ஏதேனும் மின்பிறப்பாக்க நிலையத்துக்கு அல்லது பாவனையாளருக்கு ஓரங்காட்டா மின்கடத்துகைத் தொடுப்பை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும். அத்த

கைய மின்கடத்துகைச் சொத்துக்களின் தொழிற்பாடு, 10 ஆம் பிரிவின் (12) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருடன் செய்துகொள்ளப்பட்ட மின்கடத்துகைச் சேவை உடன்படிக்கையின் நியதிகளின்படி தேசிய முறைமை தொழிற்படுத்துநரினால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

(3) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமை இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மேலதிக மின்கடத்துகை உரிமம் வழங்கப் பட்டுள்ளவரான ஆளொருவருக்கு ஏற்புடையதாதலாகாதெனக் குறிப்பிடப்படுகின்றது.

தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநரின் பொறுப்புடைமைகள் முதலியன

**15.** (1) (இச்சட்டத்தில் “தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று, நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு இலங்கை மின்சாரச்சபையினால் சொந்தமாக வைத்திருக்கப் பட்ட மின்கடத்துகைச் சொத்துக்களின் சொத்தாண்மைக்கும் பேணு கைக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

(2) தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் மற்றும் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மேலதிக மின்கடத்துகை உரிமம்பெற்றவர்கள், இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பின் பௌதிக உட்கட்டமைப்பினது அபிவிருத்தி, விசாலிப்பு மற்றும் பேணுகையுடன் சம்பந்தப்பட்ட இலங்கை மின்சாரச்சபையின் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கும் உள்நாட்டு, பிராந்திய அல்லது சர்வதேசச் சந்தையிலுள்ள வேறு தகவுடைய உருவகங் களுக்கும் பேரளவிலான மின்சாரத்தைக் கடத்துவதற்காகவும் பொறுப்பாதல் வேண்டும்:

ஆயின், தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் மின்பிறப்பாக்கம், மின்விநியோகிப்பு, மின்வழங்குகை

அல்லது மின்வியாபாரஞ்செய்தல் என்பன தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதலோ அல்லது வேறுவகையாக அவற்றில் ஈடுபடுதலோ ஆகாது.

(3) பின்வருவனவற்றுடன் சம்பந்தப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று 18 ஆம் பிரிவின் நியதிகளின்படி இலங்கை மின்சாரச் சபையினால் நிறைவேற்றப்பட்டவையுமான பணிகளின் கைமாற்றம், பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை மின்சாரச்சபையின் பணிகள் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநருக்கு உரித்தாக்கப்பட்டதன் விளைவாகவும் இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் தேவைப்பட்ட தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்தைப் பெற்றுக்கொண்டபின்னரும் செய்யப் படுதல் வேண்டும்:-

(அ) இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பின் பௌதிக உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், விசாலித்தல் மற்றும் பேணுதல் அத்துடன் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கமைய இலங்கைபூராகவும் வினைத்திறனான, ஒருங்கிணைக்கப்பட்ட, நம்பகத் தன்மையினதான மற்றும் சிக்கனமான ஒன்றிணைக் கப்பட்ட மின்கடத்துகை முறைமையை உறுதிப் படுத்துதல்;

(ஆ) மின்கடத்துகை முறைமையுடன் தொடுக்கப்பட்ட மின்விநியோகிப்பு உரிமம் பெற்றோருக்கும் உயர் மின்னமுத்தப் பாவனையாளர்களுக்கும் பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தைத் தொடுத்தலும் கடத்துதலும்.

(4) தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் -

(அ) தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்தின் நியதிகளுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தேசிய முறைமைத் தொழிற்

படுத்துநருடன் செய்துகொள்ளப்பட்ட மின்கடத்துகைச் சேவை உடன்படிக்கைக்கும் இணங்கத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் அறிவுறுத்தல் களின்கீழ் மின்சாரம் கடத்தப்படுவதனைப் பொறுப் பேற்றல் வேண்டும்;

(ஆ) மின்கடத்துகைக் கொள்ளளவுத் தேவைப்பாடுகளை அடையாளங்காண்பதற்கும் நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுவதனை வசதிப்படுத்துவதற்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு உள்ளீடுகளை வழங்குதல் வேண்டும்;

(இ) மின்கடத்துகைச் சொத்துக்களில் முதலீடுசெய்தலும், தேசியப் பொருளாதாரத்தின் நலனுக்காகவிருக்கு மிடத்து, புதிய மின்கடத்துகை கொள்ளளவும் மற்றும் மின்பெறுகைக்கான தனியார்துறை முதலீட்டைப் பெறுவதில் தேசிய முறைமை தொழிற்படுத்துநரை வசதிப்படுத்துதலும் வேண்டுமென்பதுடன் மின்பெறு கையானது 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பொறுப்பேற்கப்படுதலும் வேண்டும்;

(ஈ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் கலந்தா லோசனையுடன் தனிப்பட்ட முதலீட்டாளர்களினால் கட்டியெழுப்பப்பட்ட அத்தகைய மின்கடத்துகைச் சொத்துக்களின் பயன்பாட்டுப் பரீட்சிப்புகளை நேரடியாகப் பார்ப்பதற்கும், மின்கட்டமைப்புக் கோவையும் வேறெல்லா ஏற்புடையற்பாலனவான தொழினுட்ப நியமங்களும் அல்லது நிலை அளபுருக்களும் இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனச் சான்றுப்படுத்துகின்ற ஓர் இணங்கியொழுகுகைச் சான்றிதழை அதன்பின்னர் வழங்குவதற்கும் பொறுப்பேற்றல் வேண்டும். இணங்கியொழுகுகைச் சான்றிதழ் வழங்கப்படுவதன்மேல், தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர், ஓரங்காட்டாமை என்ற அடிப்படையில் இலங்கையின் தேசிய மின்கட்டமைப்புக்குத் தனிப்பட்ட முதலீட்டாளர்

களினால் கட்டியெழுப்பப்பட்ட அத்தகைய மின்கடத்துகைச் சொத்துக்களின்மூலம் இடைத் தொடர்பை இயலச்செய்தல் வேண்டும்;

(உ) முழுநாடுபூராகவும் வினைத்திறனான, ஒருங்கிணைக் கப்பட்ட, நம்பகத்தன்மையினதான மற்றும் சிக்கனமான ஒன்றிணைக்கப்பட்ட மின்கடத்துகை முறைமையை அபிவிருத்தி செய்தலும், விசாலித்தலும் பேணுதலும் வேண்டும்;

(ஊ) மின்பிறப்பாக்க உரிமம்பெற்றோரிடமிருந்தும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கும், வேறு தகவுடைய பாவனையாளர்களுக்கும், ஒழுங்குபடுத்து நரின் அங்கீகாரத்துடன், விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையில் பேரள விலான வடிவத்தில் மின்சாரத்தைத் தொடுத்தலும் கடத்துதலும் வேண்டுமென்பதுடன் பிராந்தியச் சந்தைகளின் மின்கடத்துகை வலையமைப்புடன் இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பைத் தொடுத் தலும் வேண்டும்; அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான மின்கடத்துகை விதிப்பனவுகளை அல்லது வேறெவையேனும் விதிப்பனவுகளை அறவிடுதலும் வேண்டும்;

(எ) ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்பட்டவாறு திறந்த அணுகுகை விதிப்பனவுகளின் கொடுப்பனவுக்கமைய, விதித்துரைக்கப்படவேண்டியவாறாகத் திறந்த அணுகுகையை வழங்குவதற்கான முந்நிபந்தனை களுக்கு இணங்கியொழுகுவதன்மேல் இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பினது தகவுடைய எல்லாப் பாவனையாளர்களுக்கும் மின்கடத்துகைச் சேவைகளின் திறந்த அணுகுகையை வழங்குதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய திறந்த அணுகுகைக்கான அங்கீகாரம் நியாயமற்ற முறையில் அளிக்கப்படா திருத்தலாகாது;

(ஏ) மின்கட்டமைப்புக் கோவையையும் இலங்கையின் தேசிய மின்கட்டமைப்புத் தொடர்பான வேறு தொழினுட்ப மற்றும் தொழிற்பாடுசார் கோவைகளையும் நியமங்களையும் வரைவதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும், பேணுவதற்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருடன் இணைதல் வேண்டும்:

ஆயின், மின்கட்டமைப்புக் கோவை, கிரமமானவொரு முறையில் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டுமென்பது டன் ஒழுங்குபடுத்துநரினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்;

(ஐ) மின்கட்டமைப்புக் கோவையினதும் முறையாக அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தினதும் நியதிகளின்படி வலையமைப்பை விசாலிப்பதற்கான தேவை எழுகின்றபோதெல்லாம், ஒழுங்குபடுத்துநரின் கலந்தாலோசனையுடன் அவ்விசாலிப்பை வசதிப் படுத்துதல் வேண்டும்;

(ஒ) மின்கடத்துகைக் காப்புவரிகளையும் வேறு விதிப்பனவு களையும் அறவிடுதல் தொடர்பான முன்மொழிவு களை ஒழுங்குபடுத்துநருக்குக் காலத்துக்குக்காலம் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஓ) மின்கடத்துகை உரிமத்தின் நியதிகளின்படி கொண்டு நடாத்தப்பட்ட மின்கடத்துகைத் தொழிலுக்காகத் தனிவேறான கணக்குகளைப் பேணுதல் வேண்டும்.

*மின்கடத்துகை இணைப்புக் களும் மின்கட்டமைப்பு உபநிலை யங்களும்*

**16.** பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கமைய, தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர், முறையாக அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டத்தின் நியதிகளின்படி இலங்கையின் ஆள்புலத்தினுள்ளும் இலங்கையின் நீர்ப்பரப்பு களினுள்ளும் மின்கடத்துகை இணைப்புக்களையும், மின்கட்டமைப்பு உபநிலையங்களையும் வேறு இணைந்த

மின்கடத்துகைப் பொறித்தொகுதிகளையும் சாதனங்களையும் நிர்மாணிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் VI

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட கம்பெனிகளைக் கூட்டிணைத்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட கம்பெனிகளைக் கூட்டிணைத்தலும் இலங்கை மின்சாரச் சபையின் மீளக் கட்டமைக்கப் பட்ட செயற்பாடுகளை அதன் கண் உரித்தாக்குதலும்*

**17.** (1) இரண்டாயிரத்தேழாமாண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி, அட்டவணை I றில் விபரிக்கப்பட்ட மின்சாரத்தொழிலின் கட்டமைப்பினது நியதிகளின்படி, தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான வரையறுக்கப்பட்ட கம்பெனிகள் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய ஒவ்வொரு வரையறுக்கப்பட்ட கம்பெனியினதும் அமைப்பகவிதிகள் பொருளளவில் விதித்துரைக்கப்படவேண்டியவாறான படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு கூட்டிணைக்கப்பட்ட அத்தகைய வரையறுக்கப்பட்ட கம்பெனி ஒவ்வொன்றினதும் அமைப்பகவிதிகள் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக 18 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கைமாற்றல் திட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வரையறுக்கப்பட்ட கம்பெனி ஒவ்வொன்றிலும், சட்ட நடைமுறையின்மூலம் உரித்தாக்கப்படவேண்டிய செயற்பாடு களையும் விபரமாகக் குறித்துரைத்தலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியன்று, இப்பிரிவின் ஏற்பாடுகளினது நடைமுறையின் பயனைக்கொண்டு, மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு மற்றும் மின்வழங்குகை தொடர்பாக இலங்கை மின்சாரச் சபையின் மீளக்கட்டமைக்கப் பட்ட செயற்பாடுகள், மற்றும் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு அத்துடன் மின்வழங்குகைபற்றி இலங்கை மின்சாரச்சபையின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும், அவற்றின் முறையான கடமைகளுடனும் பணிகளுடனும்

சேர்த்து, 18 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கைமாற்றல் திட்டத்திற்றரப்பட்டுள்ள செய்திட்டத்துக்கிணங்க, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட வரையறுக் கப்பட்ட பொறுப்புக் கம்பெனிகளுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) இன் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளபின்னர், கைமாற்றல் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மீதமாகவுள்ள கம்பெனிகள் கூட்டிணைக்கப்பட வேண்டியமை தேவையாகவுள்ளதென்பது வெளிப்படையாக விருப்பின், தேவைப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினவான அடுத்துறுத்தாகவுள்ள கம்பெனிகள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் கூட்டிணைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய மீதமாகவுள்ள கம்பெனிகள் தொடர்பாக ஏற்றமாற்றங் களுடன் ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்.

கைமாற்றல் திட்டத்தைத் தயாரித்தல்

**18.** (1) அமைச்சர், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினதும் திறைசேரிச் செயலாளரினதும் கலந்தா லோசனையுடனும் அவசியமெனக் கருதப்படுமிடத்தும், இயைபான அக்கறைகொண்டுள்ளோருடன், (இதனகத்துப் பின்னர் “கைமாற்றல் திட்டம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கையில் மின்சாரத்தொழிலின் நிலைபெயர்வுக்காகவும் கைமாற்றத்துக்காகவும் மீள்ஒழுங்குபடுத்துகைக்காகவும் ஒரு கைமாற்றல் திட்டத்தைத் தயாரிக்கும்படி 38 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மின்சக்தித்துறைச் சீர்திருத்தச் செயலகத்தைத் தேவைப்படுத்துதல் வேண்டும். இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப் பட்டவாறான கைமாற்றல் திட்டமும் மின்சாரத் தொழிலின் கட்டமைப்புத் தொடர்பான அட்டவணை I றும் மின் பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு மற்றும் மின்வழங்குகை தொடர்பாக இலங்கை மின்சாரச் சபையின் செயற்பாடுகளைத் தொகுதியற்றனவாக்குவதற்கான விபரமான திட்டங்கள், முன்மொழிவுகள் மற்றும் மூலோபாயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம் அமைச்சரின் கொள்கைப் பணிப்புகளுக்கமைய கைமாற்றல் திட்டத்தைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(அ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப் பட்ட தேதியை உடனடுத்துப்பின்வரும் நாளன்று வர்த்தமானியில் அதன்பின்னர் வெளியிடப்பட வேண்டிய முதனிலைக் கைமாற்றல் திட்டம்; அது, மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு மற்றும் மின்வழங்குகை என்பவற்றை மீளக் கட்டமைத்தல் தொடர்பான செயற்பாடுகளின் உரித்தாக்குகை பற்றிய எல்லா விபரங்களையும் அத்துடன் அடுத்துறும் கம்பெனிகள் தொழிற்பாடு களைத் தொடங்குவதற்கு ஆரம்பத்தில் தேவைப்படும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் உரித்தாக்கு வதற்கான நிதிசார் திட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இறுதிக் கைமாற்றல் திட்டமொன்று; அது, நியமிக்கப் பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குப் பிந்தாமல் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட்டு அதன்பின்னர் உடனடியாக வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். இறுதிக் கைமாற்றல் திட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர், மின்சாரத்தொழிலின் மீளக்கட்டமைத்தலைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்பட்ட எஞ்சியுள்ள எல்லாக் கருமங்களினதும் நடைமுறைப்படுத்தல் செய்முறையைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கைமாற்றல் திட்டம் -

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் இலங்கை மின்சாரச் சபையினால் நிறைவேற்றப்படும் கடமை களையும் பணிகளையும் அடையாளங்காணுதல் வேண்டும்;

(ஆ) இலங்கை மின்சாரச் சபையின் ஏலவேயுள்ள நிதிசார் பொறுப்புக்கள் சம்பந்தமாக, வழங்குநர் பொறுப்புக் களை உள்ளடக்கவேண்டிய சொல்லப்பட்ட பொறுப் புக்களின் ஒரு பாகம், இலங்கை மின்சாரச்சபையின் நீரியல் மின்சக்திப் பிறப்பாக்கச் சொத்துக்கள் எந்த அடுத்துறும் கம்பெனிக்குக் குறித்தளிக்கப்படுமோ அந்த அடுத்துறும் கம்பெனிக்குக் குறித்தொதுக்கப் படுதல் வேண்டுமென்று குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன் அக்கம்பெனியானது அதன் பங்குகளில் நூற்றுவீதம் இலங்கை அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் கம்பெனியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட பொறுப்புக்களின் மீதிப்பாகம், கைமாற்றல் திட்டத்தில் குறித்துரைக்கப்படவேண்டிய வாறான அத்தகைய விகிதங்களில் ஏனைய அடுத்துறும் கம்பெனிகளிடையே குறித்தொதுக்கவும் படும்;

(இ) இலங்கை மின்சாரச் சபையின் அத்தகைய கடமைகளையும், பணிகளையும், 17 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அடுத்துறும் கம்பெனிகளுக்குப் பின்வரும் கடமைகளையும் பணிகளையும் அதன் ஊழியர்களையும் குறித்தொதுக்கி அடுத்துப்பின்னர் உரித்தாக்குவதனை இயலச்செய்வதற்குப் பின்வரும் வகுதிகளாகத் தனிவேறாக்குதல் வேண்டும்:-

(i) நீரியல், வெப்ப மற்றும் புதுப்பிக்கப்படற் பாலதான மின்வலு மூலங்களின் அடிப்படை யின்மீதான மின்பிறப்பாக்கம்;

(ii) மின்கடத்துகைச் சேவைகளும், இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பின் பேணுகையும்;

(iii) மின்சாரத்துக்கான கோரிக்கைபற்றி எதிர்வு கூறுதலும் திட்டமிடுதலும் பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தைப் பெறுதலும் விற்பனைசெய்தலும், சிக்கனமானமுறையில் மின்சாரத்தை அனுப்புதலும், தொழிற்பாடும்

பேணுகையும் உட்பட, முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் முகாமையும் மின்கடத்துகை வலையமைப்பு விசாலிப்புத் திட்டமிடுதல் உட்பட, இலங்கையின் தேசிய மின்கட்டமைப்புத் தொழிற்பாடும்; அத்துடன்

(iv) மின் விநியோகிப்பு அல்லது மின் வழங்குகை;

(ஈ) ஊழியர்களின் ஓய்வூதியங்கள் மற்றும் ஊழியர்களின் சகாய நிதியம், ஆதரிப்புச் சேவைகள் மற்றும் ஏலவேயுள்ள மனிதவளங்களைப் பகிர்ந்தளித்தல் என்பனவற்றின் முகாமை உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், 17 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மீதமாகவுள்ள கம்பெனிகளுக்கு உரித்தாக்கப்பட்டு அவற்றினால் நிறைவேற்றப்பட வேண்டியவையும், (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கடமைகளுடனும் பணிகளுடனும் நேரடியாகச் சம்பந்தப்படாதவையுமான இலங்கை மின்சாரச் சபையின் அத்தகைய கடமைகளையும், பணிகளையும், செயற்பாடுகளையும் அடையாளங் காணுதல் வேண்டும்;

(உ) பின்வருவனவற்றையும் பின்வருவோரையும் அதன் தனிப் பங்குதாரர் இலங்கை அரசாங்கமாக இருக்கவேண்டிய 17 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டவொரு கம்பெனிக்கு அல்லது கம்பெனிகளுக்குக் குறித்தொதுக்குதல் வேண்டும்:-

(i) இலங்கை மின்சாரச் சபையின் குறித்தளிக்கப் படாத மீதமாகவுள்ள எல்லாச் சொத்துக்களும், பொறுப்புக்களும், கடமைகளும், பணிகளும் மற்றும் எஞ்சியுள்ள பணியாட்டொகுதியினரும்:

ஆயின், மீதமாகவுள்ள கம்பெனிகளின் நிருவாகச் செலவுகளை அறவிடுவதற்கு ஏனைய அடுத்துறும் கம்பெனிகளிடமிருந்து அடுத்துறும் கம்பெனிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய அறவீட்டு வீதத்தை ஒழுங்குபடுத்துநர் தீர்மானிக்கலாமென்பதுடன் அத்தகைய

அறவீட்டைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தலும் வேண்டும்;

(ii) கட்டுக்காப்பாளர் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பாளர் என்றமுறையில் இலங்கை மின்சாரச் சபையின் சகாயநிதியத்தினதும் ஓய்வூதிய நிதியத்தினதும் பணிகளும் அத்தகைய சகாய நிதியத்தையும் ஓய்வூதிய நிதியத்தையும் முகாமைசெய்தலும்:

ஆயின், சகாய நிதியம், ஓய்வூதிய நிதியம் ஆகிய இரண்டும் அத்தகைய நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்ட தனிவேறானவொரு கம்பெனிக்குக் கைமாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட சகாய நிதியத்தினதும் ஓய்வூதிய நிதியத்தினதும் நன்மைகள், நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்றுள்ள ஊழியர்களுக்கும் இலங்கை மின்சாரச் சபையின் முன்னைநாள் ஊழியர்களுக்கும் மட்டுமே ஏற்புடையனவாதலும் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய நிதியங்களை முகாமைசெய்வதற்குக் குறித்தளிக்கப்பட்ட கம்பெனிக்கான ஆளுகைக் கட்டமைப்பு விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிதியங்களின் முதலீட்டு முடிபுகள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்றுள்ள ஊழியர்கள் மற்றும் இலங்கை மின்சாரச்சபையின் முன்னைநாள் ஊழியர்களிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்குதலும் வேண்டும்;

(ஊ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை மின்சாரச் சபையில் பதவிவகிக்கின்ற இலங்கை மின்சாரச் சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் -

(i) இலங்கை மின்சாரச் சபையினால் முறையாக அடையாளங்காணப்படுதல் வேண்டும்;

(ii) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்கு அவற்றின் உத்தேசிக்கப்பட்ட குறித்தளிப்புப்பற்றி இலங்கை மின்சாரச் சபையினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iii) அத்தகைய முறையான அடுத்துறும் கம்பெனி களுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு அவர்கள் விருப்புத் தெரிவிக்கின்றனரா அல்லது இல்லையாவென உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் இலங்கை மின்சாரச் சபைக்கு அறிவிக்கும்படி தேவைப்படுத்தப் படுதல் வேண்டும்;

அத்துடன் அவர்கள், நியமிக்கப்பட்ட தேதியை அடுத்துப் பின்வரும் தேதியிலிருந்து பயனுறுவதாக, இலங்கை மின்சாரச் சபையுடனான அவர்களின் தொழில் ஒப்பந்தத்தின்கீழ் செலுத்தப்பட்ட அதே சம்பளத்துடன் முதனிலைக் கைமாற்றல் திட்டத்தின்கீழ் அத்தகைய அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுதல் வேண்டும். ஊழியரொருவர் ஓர் அடுத்துறும் கம்பெனிக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு விருப்புத்தெரிவிக்காதவிடத்து, அத்தகைய ஊழியர் தன்னிச்சை யான இளைப்பாற்றுத் திட்டமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய திட்டத்தின் நியதிநிபந்தனைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தலும் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை மின்சாரச்சபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர் 17 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓர் அடுத்துறும் கம்பெனிக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு விருப்புத்தெரிவிக்கும் பட்சத்தில், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர்-

(அ) ஓய்வூதிய உரித்துடைமையையும் ஏனைய இளைப் பாற்று நன்மைகளையும் கணக்கிடும் நோக்கத்துக்காக மட்டும், 17 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அடுத்துறும் கம்பெனிகளில் அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சேவைக் காலப்பகுதி

முடிவுறும்வரை, இலங்கை மின்சாரச் சபையினால் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து இலங்கை மின்சாரச் சபையில் பதவியில் தொடர்ந் துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஓர் அடுத்துறும் கம்பெனியில் அத்தகைய எவரேனும் அலுவலரின் அல்லது சேவையாளரின் சேவைக்காலப் பகுதி, இலங்கை மின்சாரச் சபையில் அவரது முன்னைய சேவைக்காலப்பகுதியுடன் சேர்க்கப்படும் போது இருபது ஆண்டுகளாக அல்லது அதற்கு மேற்படவிருப்பின், அடுத்துறும் கம்பெனியொன்றில் அவரது சேவைக்காலப்பகுதி முடிவடைகையில், இலங்கை மின்சாரச் சபையின் ஓய்வூதிய நிதியத்தினது விதிகளுக்கிணங்க அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஏற்புடையற்பாலனவாகக்கூடிய ஓய்வூதிய மற்றும் இளைப்பாற்று நன்மைகளின் வழங்குகைக்காகத் தகவுடையவராதலும் வேண்டும்;

(ஆ) இலங்கை மின்சாரச் சபை சகாய நிதியத்தின் விதிகள் அல்லது ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அவர்கள் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக அத்தகைய அடுத்துறுநர் கம்பெனியுடன் சேர்த்து சகாய நிதியத்துக்கு அத்தகைய உதவுதொகைகளைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும்:

ஆயின், எவரேனும் ஊழியரினால் கையொப்பமிடப் பட்ட எவையேனும் கடப்பாடுசார் சேவை முறிகள், அத்தகைய ஊழியர் எந்த அடுத்துறுநர் கம்பெனிக்குக் குறித்தளிக்கப்படுகின்றாரோ அந்த அடுத்துறுநர் கம்பெனிக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

(5) (அ) முறையான அடுத்துறும் கம்பெனிக்கு உத்தேசிக்கப் பட்ட குறித்தளிப்புப் பற்றி இலங்கை மின்சாரச் சபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவருக்கு எத்தேதியன்று அறிவிக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து இலங்கை மின்சாரச் சபையின் சேவையிலிருந்து தன்னிச்சையாகப் பதவிநீங்குவதற்கு விருப்புத்தெரிவிக்கின்ற இலங்கை மின்சாரச் சபையின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், மற்றும் அவர் இலங்கை மின்சாரச் சபையில் பதினெட்டாண்டுச் சேவையைப் பூர்த்திசெய்திருப்பின், இலங்கை மின்சாரச்

சபையின் ஓய்வூதிய நிதியத்தின் விதிகளுக்கிணங்க அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஏற்புடையற்பாலன வாகக்கூடிய ஓய்வூதிய மற்றும் வேறு இளைப்பாற்று நன்மைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ஆ) (i) ஏதேனும் அடுத்துறும் கம்பெனியின் சேவையில் இணைவதற்கு விருப்புத் தெரிவிக்கும் இலங்கை மின்சாரச் சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் இலங்கை மின்சாரச் சபையின் சகாய நிதிய மற்றும் ஓய்வூதிய நிதிய உறுப்பினர்களாகத் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன் அதன்கீழான எல்லா நன்மைகளுக்கும் உரித்துடையவர் களாதலும் வேண்டும்.

(ii) இலங்கை மின்சாரச்சபையின் அடுத்துறுநர் கம்பெனிகளும் நியமிக்கப்பட்ட தேதியை அடுத்துப்பின்வரும் தேதியன்று அடுத்துறுநர் கம்பெனியின் ஊழியர்களாக வந்துள்ள அலுவலர்களும், சேவையாளர்களும், விடயத்துக் கேற்ப, சகாய நிதியத்தினதும் ஓய்வூதிய நிதியத்தினதும் விதிகளினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் செலுத்துவதற்கு அவர்கள் தேவைப்படுத்தப்பட்டவாறாகச் சகாய நிதியத்துக்கும் ஓய்வூதிய நிதியத்துக்கும் அத்தகைய உதவுதொகைகளைச் செலுத்துதல் வேண்டும்.

## பாகம் VII

### உரிமமளித்தல்

உரிமமளிக்கப்படாத மின் பிறப்பாக்கமும் மின் விநியோகிப்பும் தவறொன்றாதல்

**19.** (1) ஆளொருவர், இச்சட்டத்தின் நியதிகளின்படி அவருக்கு அளிக்கப்பட்ட உரிமமொன்றின் நியதிகளின்படி பின்வருமாறு செய்வதற்கு அத்தகைய ஆள் அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அல்லது மின்வழங்குகை, புறநீங்கலாக ஓர் உரிமம்பெற்றவரின் தனிப்பட்ட பாவனைக்காக இருந்தாலொழிய, அல்லது 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக் கப்பட்ட ஆளொருவராக அவர் இருந்தாலொழிய, பின்வருமாறு செய்தலாகாது:-

(அ) மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்தலாகாது;

(ஆ) மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர் ஒருவரிடமிருந்து எவரேனும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கு அல்லது மின்கடத்துகை வலையமைப்புடன் தொடுக்கப் பட்ட வேறெவரேனும் தகவுடைய பாவனையாளருக்கு அல்லது உள்நாட்டு, பிராந்திய அல்லது சர்வதேசச் சந்தையிலுள்ள ஏதேனும் உருவகத்துக்கும் அதிலி ருந்தும் பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தைக் கடத்துதலாகாது;

(இ) 10 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் கடமைகளைப் புரிதலாகாது;

(ஈ) எவையேனும் வளவுகளுக்கு அல்லது எவரேனும் பாவனையாளருக்கு அல்லது வியாபாரிக்கு மின்சாரத் தொடுப்பைக் கொடுக்கும் நோக்கத்துக்காக மின்சாரத்தை விநியோகித்தலும் வழங்குதலும் அல்லது விநியோகித்தலும் ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் பின்வரும் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின்கீழன்றி, அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பொன்றின் அதிகாரத்தின்கீழன்றி வேறுவகையாக-

(அ) எவரேனும் பாவனையாளருக்கு அல்லது எவையேனும் வளவுகளுக்கு மின்தொடுப்பொன்றைக் கொடுக்கின்ற நோக்கத்துக்காக மின்சாரத்தைப் பிறப்பிக்கின்ற, கடத்துகின்ற அல்லது விநியோகிக்கின்ற; அல்லது

(ஆ) மின்சாரத்தை ஏற்றுமதிசெய்கின்ற அல்லது இறக்குமதி செய்கின்ற,

ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன் நீதிவா னொருவர்முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது மூன்று இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஓராண்டை விஞ்சாததுமானவொரு

காலத்துக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்காக ஆளொருவருக்கெதிராகக் குற்றவழக்கு தொடுக்கப்படுமிடத்து, நீதிமன்றம், அவ்வுட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எந்தச் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துவதிலிருந்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அந்தச் செயற்பாட்டுக்காக அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக உரிமமொன்றை அத்தகைய ஆள் பெற்றுக்கொள்ளும்வரை உடனடியாகப் பயனுறும்வகையில் அதனைக் கொண்டு நடாத்துவதனைத் தவிர்க்கும்படி குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்கு மேலும் கட்டளையிடுதல் வேண்டும்.

(4) ஒழுங்குபடுத்துநரின் எழுத்திலான வலுவளிப்புடன்தவிர, இப்பிரிவின்கீழான தவறொன்று தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

*உரிமமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கான தகவுடைமை*

**20.** (1) ஒரு மின்பிறப்பாக்கல் உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்கு எவரேனுமாள் தகவுடையவராதல் வேண்டும்.

(2) ஒரு மின்விநியோகிப்பு உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குப் பின்வருவன தகவுடையனவாதல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதல் சட்டத்தின்கீழ் அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று;

(ஆ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்று.

(3) (அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட எந்த வரையறுக் கப்பட்ட கம்பெனியில் அரசாங்கம் அதன் பங்குகளுள் நூறு சதவீதத்தை வைத்திருக்கின்றதோ அந்தப் பகிரங்கக் கம்பெனி மட்டும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையதாதல் வேண்டும்;

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட எந்தப் பகிரங்கக் கம்பெனியில் அரசாங்கம் அதன் பங்குகளுள் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டவற்றை வைத்திருக்கின்றதோ அந்தப் பகிரங்கக் கம்பெனி மட்டும் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையதாதல் வேண்டும்.

(4) பின்வருவன தொடர்பாக இலங்கை மின்சாரச் சபையின் எல்லாப் பணிகளும், அதாவது -

(அ) மின்பிறப்பாக்க அட்டவணைப்படுத்துகை, ஈடுபடுத் துகை மற்றும் மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதிகளின் சிக்கனமாக அனுப்புகை, எதிர்கால மின்சாரக் கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கான திட்டமிடுகை, முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தைத் தொழிற் படுத்துதலும் பேணுதலும், மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றோரிடமிருந்து பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தைப் பெறுதல் மற்றும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்குப் பேரளவிலான வடிவத்தில் அத்தகைய பெறப்பட்ட மின்சாரத்தை விற்றல் என்பன நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாகத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பைக் கொண் டுள்ளதும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்குப் பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தைக்

கடப்பதற்குமான பௌதிக உட்கட்டமைப்பைப் பேணுதல், 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாகத் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(5) பத்தாம் பிரிவின் (11) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியையும் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவையும் பின்பற்றி மின்கடத்துகைச் சொத்தொன்றைக் கட்டியெழுப்புவதற்கான உரிமையை (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைக்கமைய கொள்ளுகின்ற எவரேனும் ஆளுக்கு மேலதிக மின்கடத்துகை உரிமங்கள் அளிக்கப்படலாம்.

(6) தனியொரு கம்பெனியின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருக்கின்ற ஆளொருவருக்குப் பின்வரும் உரிமங்களுள் எவையேனும் இரண்டின் இணைப்பொன்று வழங்கப்படுதலாகாது:-

(அ) தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமமும் ஒரு மின்பிறப்பாக்க உரிமமும்; அல்லது

(ஆ) தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமமும் ஒரு மின்விநியோகிப்பு உரிமமும்;

(இ) தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமமும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமமும்;

(ஈ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமமும் ஒரு மின்விநியோகிப்பு உரிமமும்;

(உ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமமும் ஒரு மின்பிறப்பாக்கல் உரிமமும்; அல்லது

(ஊ) ஒரு மின்பிறப்பாக்கல் உரிமமும் ஒரு மின்விநியோகிப்பு உரிமமும்.

ஓர் உரிமத்துக்கான விண்ணப்பமும் உரிமம் அளிக்கப் படுதலும்

**21.** (1) மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக, கடத்துவதற்காக, விநியோகிப்பதற்காக அல்லது வழங்குவதற்காக ஓர் உரிமத்தை அளிப்பதற்கான அல்லது அத்தகைய உரிமங்களுள் ஏதேனு மொன்றை நீடிப்பதற்கான விண்ணப்பமொன்று, விதித்துரைக் கப்படவேண்டியவாறான அத்தகைய படிவத்தில் எழுத்தில் ஒழுங்குபடுத்துநருக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய தகவலுடனும் ஆவணங்களுடனும் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்தனுப் பப்படுதலும் வேண்டும்.

(2) விண்ணப்பத்தைப் பெற்றதன்மீது, ஒழுங்குபடுத்துநர், முறையான விண்ணப்பத்துடன் வெளிக்காட்டப்பட்ட தகவலின் அடிப்படையில் விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்கு வதற்குத் தடையெதுவும் இல்லாததாகக் காணப்படுகின்றதென ஒழுங்குபடுத்துநர் அபிப்பிராயப்பட்டால், ஒழுங்குபடுத்துநர், அமைச்சரின் ஒருப்பாட்டுடன், உரிமம் அல்லது அதன் நீடிப்பு வழங்கப்படுவதனால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களுக்கு அறிவிப்பதற்கென உட்கருதப்பட்ட கருத்திட்டத்தின் விபரங்களுடன், உரிமத்தை அல்லது அதன் நீடிப்பை வழங்குவதற்கான அதன் உட்கருத்துப்பற்றி ஒழுங்குபடுத்துநரின் அலுவலகமுறையான வலைத்தளத்தில், அல்லது வர்த்தமானியில் அல்லது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஓர் உள்நாட்டுச் செய்தித்தாளில் அறிவித்தலொன்றை வெளியிடு தலுட்பட, விண்ணப்பிக்கப்பட்ட அத்தகைய உரிமத்தை அல்லது அதன் நீடிப்பை அளிப்பதற்கு அவசியமான எல்லா நடவடிக்கை களையும் எடுப்பதற்கு முற்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான ஒவ்வோர் அறிவித்தலும் பின்வருவனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்:-

(அ) ஒழுங்குபடுத்துநர், உரிமத்தை அல்லது நீடிப்பை விண்ணப்பகாரருக்கு அளிப்பதற்கு உத்தேசிக்கின்றது என்றும் உரிமமானது எந்நோக்கத்துக்காக விண்ணப் பிக்கப்படுகின்றதோ அந்நோக்கமும்;

(ஆ) அத்தகைய உரிமத்தை அல்லது நீடிப்பை அளிப்பதற்கு உட்கருதுகின்றமைக்கான காரணங்கள்; அத்துடன்

(இ) அத்தகைய உட்கருதப்பட்ட கருத்திட்டத்தின் செயற்பாடுகள் அல்லது அத்தகைய உட்கருதப்பட்ட கருத்திட்டத்தின் அமைவிடம் தொடர்பாக ஆட்களின் கரிசனைகளைக் குறிப்பிட்டும் அத்தகைய உரிமம் அளிக்கப்படுவதற்கான ஆட்சேபனையைத் தெரிவித்தும் எழுத்திலான முறையீடுகள் எக்காலப்பகுதியினுள் ஒழுங்குபடுத்துநருக்குச் செய்யப்படலாமோ அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குக் குறைவாகவிராத அக்காலப்பகுதி.

(4) குறிப்பிட்ட உரிமத்தை அளிப்பதற்கெதிராக எழுத்திலானவொரு முறையீட்டைப் பெற்றதன்மீது ஒழுங்குபடுத்துநர் அவ்விடயம்பற்றி விசாரணைசெய்வதற்குச் சட்டம் மற்றும் பொறியியல் என்ற துறைகளில் திறமையையும் பத்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தையும் கொண்டவர்களான இரண்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ள தீர்ப்பளிக்கும் குழாமொன்றை நியமித்தல் வேண்டும். (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட ஆட்கள் தமது முறையீடுகளைச் செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியளித்த பின்னரும் அத்தகைய விசாரணைகளைச் செய்தபின்னரும் அமைவிடத்தைச் சென்றுபார்த்தபின்னரும் தீர்ப்பளிக்கும் குழாம் அதன் விதப்புரைபற்றி எழுத்தில் ஒழுங்குபடுத்துநருக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) ஒழுங்குபடுத்துநர், (4) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்ப்பளிக்கும் குழாத்தினால் செய்யப்பட்ட விதப்புரைக்கு இசைய, அது தொடர்பிலான அதன் தீர்மானத்தைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அது, விதப்புரை பெறப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களினுள் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(6) (அ) ஒழுங்குபடுத்துநரின் தீர்மானமானது முறையீட்டைத் தள்ளுபடிசெய்வதற்கானதாகவிருப்பின், ஒழுங்குபடுத்துநர் அதன்பின்னர் விண்ணப்பிக்கப்பட்ட உரிமத்தை வழங்குவதற்கு

முற்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமம், உரிமத்தின் முறையான ஒவ்வொரு வகுதி தொடர்பிலும், விதித்துரைக்கப் படவேண்டியவாறான முறையான படிவத்திலிருத்தலும் வேண் டும்.

(ஆ) உரிமங்களின் ஒவ்வொரு வகுதிக்கும் ஏற்புடையற் பாலனவான நியதிநிபந்தனைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பகாரருக்கு வழங்கப்பட்ட உரிமம், அளிக்கப்படுகின்ற இயைபான உரிமத்திற்கு ஏற்புடையற் பாலனவான நியதிநிபந்தனைகளைக் குறித்துரைக்கின்ற அட்டவணையொன்றையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(7) இப்பாகத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும் விதித்துரைக்கப்படவேண்டியவாறாகப் பின்வருவன வற்றுக்கு அமைந்ததாதலும் அத்தகைய ஒவ்வோர் உரிமம் பெற்றவருக்கும் ஏற்புடையதாகவிருத்தலும் வேண்டும்:-

(அ) உரிமங்களின் நிபந்தனைகள்;

(ஆ) உரிமங்களின் அந்தந்த வகுதிகளின் தத்துவங்களும் கடமைகளும்;

(இ) அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறு உரிமம்பெற்றவர்களினால் பொறுப்பேற்கப்பட்ட நிர்மாண மற்றும் பேணுகைச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் விடுவிப்புகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான ஏற்பாடுகள்;

(ஈ) அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டவாறு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்கள் இணங்கி யொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற மின்சார வழங்கலுக்கு ஏற்புடையற்பாலனவான நியமங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகள்; அத்துடன்

(உ) அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்டவாறு மின்சார நுகர்வை அளவீடுசெய்வதற்கு ஏற்புடையற்பாலதான நடவடிக்கைமுறை.

உரிமங்களைக் குறித்தளித்தல்

**22.** (1) உரிமமொன்று, ஒன்றில் குறித்தளிப்பை அதிகாரமளிக்கின்ற ஏதேனும் நிபந்தனையுடன் அல்லது அதுவின்றி அவ்வாறு குறித்தளிக்கப்படுவதற்கு இயன்றதாகவிருத்தல் வேண்டும்.

(2) உரிமமொன்று ஒழுங்குபடுத்துநரின் முற்சம்மதத்துடன்தவிர, குறித்தளிக்கப்படுவதற்கு இயன்றதாகவிருத்தலாகாது.

(3) இருபத்தோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தை அங்கீகரிப்பதாவென்பதை முடிபுசெய்வதில், ஒழுங்குபடுத்துநர், குறித்தளிப்புப்பெறுநருக்கு நேரொத்ததாகவுள்ள உரிமமொன்றை அல்லது நேரொத்தாகவுள்ள உரிமமொன்றின் பாகத்தை வழங்குவதாவென்பதை அது முடிபுசெய்யும்போது அது ஏற்புடையனவாக்கக்கூடிய அதே கட்டளைக்கற்களை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்.

(4) பின்வருவனவற்றுக்குக் குறித்தளிப்புப்பெறுநர் உடன்படுவதற்கமைய, (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படியான அங்கீகாரம் அளிக்கப்படலாம்:-

(அ) பாவனையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக, ஒழுங்குபடுத்துநர் அவசியமெனக் கருதுகின்றவாறாக உரிமத்தின் நிபந்தனைகளினது அத்தகைய திரிபுபடுத்துகை அல்லது அத்தகைய மேலதிக நிபந்தனைகளின் விதிப்பு; அத்துடன்

(ஆ) ஒழுங்குபடுத்துநர் அவசியமெனக் கருதுகின்றவாறாக நிபந்தனைகளின் அத்தகைய இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினவான திரிபு படுத்துகைகள்.

(5) குறித்தளிப்புப்பெறுநர் குறித்தசில குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கமைய, குறித்தளிப்புக்கு அதிகாரமளிக்கின்ற நிபந்தனைகளை உரிமமொன்று உள்ளடக்கலாம்.

(6) ஓர் உரிமத்தின் குறித்தளிப்பு அல்லது கருதப்பட்ட குறித்தளிப்பு பின்வரும் சந்தர்ப்பங்களில் வறிதாதல் வேண்டும்:-

(அ) உரிமமானது குறித்தளிக்கப்படுவதற்கு இயலாததாக விருப்பின்;

(ஆ) குறித்தளிப்பு அல்லது கருதப்பட்ட குறித்தளிப்பு உரிமத்தின் நிபந்தனையொன்றின் மீறுகையாக விருப்பின்; அல்லது

(இ) குறித்தளிப்புக்கு அல்லது கருதப்பட்ட குறித்தளிப்புக்கு முன்னர், (2) ஆம் உட்பிரிவின்கீழான சம்மதம் எந்த நிபந்தனைக்கமைய அளிக்கப்பட்டதோ அந்த நிபந்தனையின் மீறுகையொன்று இருந்திருப்பின்.

உரிமங்களையும் வலுவுறுத்தற் கட்டளைகளையும் திரிபு படுத்துதல் அல்லது இல்லா தொழித்தல்

**23.** (1) ஒழுங்குபடுத்துநர், தேசிய நலன் கருதி ஏதேனும் உரிமத்தைத் திரிபுபடுத்துவது அவசியமானதெனக் காணப்படின், அமைச்சரின் ஒருப்பாட்டுடன், விதித்துரைக்கப்பட வேண்டிய வாறான பொதுவான ஏற்புடைமையின் சூழ்நிலைகளிலும் உரிமங்களின் வெவ்வேறு வகுதிகள் தொடர்பாக விதித்துரைக் கப்படவேண்டியவாறான முறையிலும் படிவத்திலும் உரிமம் பெற்றவரின் உடன்பாட்டுடனோ அல்லது உரிமம்பெற்றவரின் உடன்பாடின்றியோ அளிக்கப்படுகின்ற குறிப்பிட்ட உரிமத்தின் நிபந்தனைகளைத் திரிபுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுக்க லாம்.

(2) மூன்றாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறாக வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றுக்கான பதிலிறுப்பாக ஒழுங்குபடுத்துநர் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் முறையீட்டைக் கவனத்துட்கொண்டதன்பின்னரும் அமைச்சரின் ஒருப்பாட்டுடனும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஒரு மின்பிறப்பாக்கல் உரிமத்தை அல்லது மின்விநியோகிப்பு உரிமத்தை அல்லது தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்தை அத்தகைய உரிமங்களின் இல்லா தொழிப்புப்பற்றிய நியதிகளுக்கிணங்க, இல்லாதொழிக்க லாம்.

(3) இரண்டாம் உப்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் உரிமத்தை இல்லாதொழிக்குமுன்னர், ஒழுங்குபடுத்துநர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலமும் அத்தகைய இல்லாதொழிப்பினால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களின் கவனத்துக்கு அதனைக் கொண்டுவருவதற்குத் தோதானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு வழிவகைகள்மூலமும், அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட உரிமத்தை அது இல்லா தொழிப்பதற்கு உத்தேசிக்கின்றதெனவும் அவ்வாறு செய்வதற்கான காரணங்களையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய இல்லாதொழிப்புக்கெதிராக எக்காலப்பகுதியினுள் முறையீடுகள் அதற்குச் செய்யப்படலாமோ அக்காலப்பகுதியைக் குறித்துரைத்தலும் வேண்டும். ஓர் உரிமத்தை இல்லாதொழிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(4) (அ) ஒரு மின்பிறப்பாக்கல், மின்கடத்துகை அல்லது மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர், அத்தகைய உரிமம் பெற்றவருக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றின் ஏதேனும் நிபந்தனையை அல்லது ஏதேனும் நியதிச்சட்டமுறையான தேவைப்பாட்டை மீறுகின்றார் அல்லது மீறக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளாரென ஒழுங்குபடுத்துநர் திருப்திப்படின், ஒழுங்குபடுத்துநர், உரிமம்பெற்றவரினால் அத்தகைய நிபந்தனை அல்லது தேவைப்பாடு இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஏற்பாட்டைக் கொண்டுள்ள வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(ஆ) வலுவுறுத்தற் கட்டளையொன்று–

(i) அது எந்த உரிமம்பெற்றவர் தொடர்பானதோ அந்த உரிமம்பெற்றவர் கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய காரியங்களைச் செய்யும்படி அல்லது செய்யாது தவிர்க்கும்படி அவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;

(ii) கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்; அல்லது

(iii) ஒழுங்குபடுத்துநரினால் எந்நேரத்திலும் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது திரிபுபடுத்தப்படலாம், ஆனால் எப்பட்சத்திலும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் முடிவில் பயனில்லாதொழிதல் வேண்டும்.

(5) (அ) நான்காம் உட்பிரிவின்கீழ் வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஆக்குமுன்னர், ஒழுங்குபடுத்துநர்–

(i) அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு ஒழுங்குபடுத்துநர் உத்தேசிக்கின்றது எனக் குறிப்பிட்டு, வலுவுறுத்தற் கட்டளையினால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களின் கவனத்துக்குக் கருமத்தைக் கொண்டுவருவதற்கு விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அறிவித்தலின் பிரதியொன்றையும் உத்தேசிக்கப்பட்ட கட்டளையின் பிரதியொன்றையும் உரிமம்பெற்றவருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலொன்று பின்வருவனவற்றை எடுத்துக்கூறுதல் வேண்டும்:–

(i) உத்தேசிக்கப்பட்ட கட்டளை, உரிமத்தின் எந்த இயைபான நிபந்தனைகளுக்கு அல்லது நியதிச் சட்டமுறையான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு உட்கருதப்படுகின்றதோ உரிமத்தின் அந்த இயைபான நிபந்தனைகள் அல்லது நியதிச்சட்டமுறையான தேவைப்பாடுகள்;

(ii) ஒழுங்குபடுத்துநரின் அபிப்பிராயத்தில் அந்நிபந் தனையின் அல்லது தேவைப்பாட்டின் மீறுகை யொன்றாக அமைகின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்;

(iii) ஒழுங்குபடுத்துநரின் அபிப்பிராயத்தில் உத்தே சிக்கப்பட்ட கட்டளையை ஆக்குவதனை நியாயப் படுத்துகின்ற வேறெவையேனும் நிகழ்வுகள்;

(iv) உத்தேசிக்கப்பட்ட கட்டளையின் விளைவுகள்; அத்துடன்

(v) அறிவித்தல் தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குக் குறைவாகவிராத எந்தக் காலப் பகுதியினுள் உரிமம்பெற்றவர் உத்தேசிக்கப்பட்ட கட்டளைக்கான முறையீடுகளை அல்லது ஆட்சேபனைகளைச் செய்யலாமோ அந்தக் காலப் பகுதி.

(இ) நான்காம் உட்பிரிவின்கீழ் வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஆக்குமுன்னர் ஒழுங்குபடுத்துநர், (ஆ) என்னும் பந்தியின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட எவையேனும் முறையீடுகளையும் ஆட்சேபனைகளையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) ஒழுங்குபடுத்துநர் பின்வருவனபற்றித் திருப்திப்படின், வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஒழுங்குபடுத்துநர் ஆக்குத லாகாது:-

(i) சம்பந்தப்பட்ட நிபந்தனையுடன் அல்லது தேவைப் பாட்டுடன் இணங்கியொழுகுகையை உறுதிப் படுத்துவதற்கு உரிமம்பெற்றவர் எடுக்க வேண்டு மென ஒழுங்குபடுத்துநர் கருதுகின்றவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் உரிமம்பெற்றவர் எடுப்பதற்கு உடன்பட்டுள்ளார் மற்றும் எடுத்துக்கொண்டிருக்கின்றார்; அல்லது

(ii) மீறுகைகள் அல்லது அஞ்சப்பட்ட மீறுகைகள் அற்பதன்மையினவானவை.

(உ) வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஆக்கியபின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, ஒழுங்குபடுத்துநர்-

(i) கட்டளையானது எந்த உரிமம்பெற்றவர் தொடர்பானதோ அந்த உரிமம்பெற்றவருக்குக் கட்டளையின் பிரதியொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) கட்டளையினால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங் கொண்ட ஆட்களின் கவனத்துக்கு அதனைக் கொண்டுவருவதற்கு விதித்துரைக்கப்பட வேண்டிய வாறான அத்தகைய முறையில் அதனை வெளியிடுதல் வேண்டும்.

(ஊ) வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஆக்குமுன்னர் ஒழுங்குபடுத்துநர்-

(i) உத்தேசிக்கப்பட்ட இல்லாதொழிப்புக் கட்டளை யினால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களின் கவனத்துக்கு அதனைக் கொண்டு வருவதற்கு விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்;

(ii) உத்தேசிக்கப்பட்ட இல்லாதொழிப்புக் கட்டளையின் பிரதியொன்றை உரிமம்பெற்றவருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(iii) அறிவித்தலுக்கான பதிலிறுப்பாகச் செய்யப்பட்ட எவையேனும் முறையீடுகளையும் ஆட்சேபனை களையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(எ) பந்தி (ஊ) இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒவ்வொன்றும்-

(i) ஒழுங்குபடுத்துநர், அறிவித்தலிற் குறித்துரைக் கப்பட்ட கட்டளையை இல்லாதொழிப்பதற்கு உத்தேசிக்கின்றதென்றும் இல்லாதொழிப்பின் விளைவையும் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(ii) உத்தேசிக்கப்பட்ட இல்லாதொழிப்புக் கட்டளைக் கான முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் எக்காலப்பகுதியினுள் ஒழுங்குபடுத்துநருக்குச் செய்யப்படவேண்டுமோ அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குப் பிந்தாத அக்காலப்பகுதியைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(ஏ) பந்தி (ஊ) இன்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்த லொன்றுக்கான பதிலிறுப்பாகச் செய்யப்பட்ட எவையேனும் முறையீடுகளையும் ஆட்சேபனைகளையும் கவனத்துட் கொண்டபின்னர் ஒழுங்குபடுத்துநர் அவ்வறிவித்தல் எந்த வலுவுறுத்தற் கட்டளை தொடர்பானதோ அந்த வலுவுறுத்தற் கட்டளையை இல்லாதொழிக்காதிருப்பதற்கு முடிபுசெய்யின், உரிமம்பெற்றவருக்கும் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கும் அதன் முடிபுபற்றிய அறிவித்தலை அது கொடுத்தல் வேண்டும்.

(6) (அ) வலுவுறுத்தற் கட்டளையொன்று எந்த உரிமம்பெற்றவர் தொடர்பானதோ அந்த உரிமம்பெற்றவர் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(ஆ) வலுவுறுத்தற் கட்டளையின் மீறுகையொன்றினால் பாதிக்கப்படக்கூடிய எவரேனுமாளுக்கு உரிமம்பெற்றவர் கடமையொன்றையும் கொண்டுள்ளார் என்பதுடன் அத்தகைய மீறுகையின் விளைவாக ஏதேனும் இழப்பை அல்லது சேதத்தை உறுகின்ற அத்தகைய எவரேனுமாள், அத்தகைய இழப்புக்கான அல்லது சேதத்துக்கான சேதவீடுகளாக, தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிமன்றத்தில் உரிமம்பெற்றவருக்கெதிராக வழக்கொன்றைத் தொடுக்கலாம்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் உரிமம்பெற்றவர் ஒருவருக்கெதிராகக் கொணரப்பட்ட வழக்குநடவடிக்கைகளில், வலுவுறுத்தற் கட்டளையின் மீறுகையைத் தவிர்ப்பதற்கு உரிமம்பெற்றவர் நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தார் மற்றும் உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்தாரென எண்பிப்பது உரிமம்பெற்றவருக்கு ஓர் எதிர்வாதமாதல் வேண்டும்.

(7) (அ) எந்த உரிமம்பெற்றவருக்கு வலுவுறுத்தற் கட்டளை யொன்று ஏற்புடையதாகின்றதோ அந்த உரிமம்பெற்றவர் ஒருவர் அத்தகைய வலுவுறுத்தற் கட்டளைக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் இணங்கியொழுகுவதற்குத் தவறினால், அத்தகைய உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர்முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும். குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டபின்னர் அத்தகைய மீறுகை தொடர்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஐந்து இலட்சம் ரூபாவானவொரு மேலதிகக் குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) ஒழுங்குபடுத்துநர், வலுவுறுத்தற் கட்டளையொன்றை ஆக்குவதில், வலுவுறுத்தற் கட்டளை எந்த உரிமம்பெற்றவர் தொடர்பானதோ அந்த உரிமம்பெற்றவரினால், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட மீறுகையினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டுமெனப் பணிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(இ) இப்பிரிவின்கீழ் விதிக்கப்படக்கூடிய குற்றப்பணம் மற்றும் நட்டஈடு என்றவகையான அறவீடுகள், இணங்கியொழுகாமைக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் உறக்கூடிய வேறேதேனும் பொறுப்புக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டும்; அவற்றைக் குறைப்பனவாகவல்ல.

(ஈ) ஒழுங்குபடுத்துநர், வலுவுறுத்தற் கட்டளையொன்றுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறியமைக்காக ஓர் உரிமம் பெற்றவருக்கெதிராகக் குற்றவழக்கொன்றை அது தொடுத்துள்ள தென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய உரிமம் பெற்றவரினால் அத்தகைய வலுவுறுத்தற் கட்டளை இணங்கி யொழுகப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒரு தடையுத் தரவுக்காக அல்லது வேறு பரிகாரத்துக்காகத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்ட நீதிமன்றமொன்றுக்கு விண்ணப்பிக் கலாம்.

(8) (அ)(i) ஒழுங்குபடுத்துநரினால் ஆக்கப்பட்ட வலுவுறுத்தற் கட்டளையொன்றுக்கு அமைந்தவராகவுள்ள; அல்லது

(ii) கடனிறுக்கவகையறவு நிகழ்வுக்கு அமைந்தவராகவுள்ள,

உரிமம்பெற்றவர் ஒருவர், உரிமத்தின்கீழ் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய உரிமம்பெற்றவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளைத் தகுந்தமுறையில் கொண்டுநடாத்தவில்லையென்றும், பாவனையாளர்களுக்கான மின்சார வழங்குகை, வினைத்திறனான, உறுதியான மற்றும் காப்பான முறையில் கொடுக்கப்படுவதில்லை அல்லது கொடுக்கப்படக்கூடிய சாத்தியமில்லையென்றும் ஒழுங்குபடுத்துநர் திருப்திப்படுமிடத்து, ஒழுங்குபடுத்துநர், அமைச்சரின் ஒருப்பாட்டுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், உரிமம்பெற்றவரின் பொறுப்புமுயற்சியினது முழுமையின் அல்லது அதன் ஒரு பாகத்தின் முகாமையையும் கட்டுப்பாட்டையும் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட வேறெவரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு உரித்தாக்கலாமென்பதுடன் அத்தகைய அதிகாரி அல்லது ஆள் அத்தகைய பொறுப்புமுயற்சியைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின்கீழ் ஒரு பொறுப்புமுயற்சியின் முகாமை மற்றும் கட்டுப்பாடு எந்த ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு உரித்தாக்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது அதிகாரி, உரிமம்பெற்றவரின் பொறுப்புமுயற்சியினது முகாமையையும் கட்டுப்பாட்டையும் அது தொடர்ந்து கொண்டுநடாத்துகின்றது என்ற ஏதுவின்மீது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஒரு மோசடியான முந்துரிமையாக அமைகின்ற நடத்தைக்கு ஆளாக்கப்படுதலாகாது.

(இ) உத்தேசிக்கப்பட்ட கட்டளைபற்றி இயைபான உரிமம் பெற்றவருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுக்காமலும் கேட்கப்படுவதற்கு உரிமம்பெற்றவருக்கு நியாயமானவொரு வாய்ப்பை அளிக்காமலும் இப்பிரிவின்கீழான கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது.

(ஈ) இப்பிரிவின் கீழானவொரு கட்டளை வலுவிலிருக்கும் அத்தகைய காலப்பகுதியின்போது-

(i) உரிமம்பெற்றவர், ஒழுங்குபடுத்துநரின் சம்மதமின்றித் தன்னிச்சையாக அல்லது வலுக்கட்டாயமாக ஒடுக்கப் படுதலாகாது அல்லது தொடர்ந்து ஒடுக்கப்படுவதாக இருத்தலாகாது;

(ii) ஒழுங்குபடுத்துநருக்குப் பத்து நாட்களுக்குமுன்னர் எழுத்திலான அறிவித்தலின்றி, அந்த உரிமம் பெற்றவரின் ஆதனத்தின்மீது ஒரு தீர்ப்பை அல்லது பிணைப்பொறுப்பை வலுவுறுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு எவரேனுமாளினால் நடவடிக்கை கள் எவையும் எடுக்கப்படுதலாகாது; அத்துடன்

(iii) பொறுப்புமுயற்சி அல்லது அதன் பாகம் தொடர்பாக உரிமம்பெற்றவர் உரிமத்தின் கீழான அவரது உரிமைகளுள் எவற்றையும் பிரயோகித்தலாகாது.

(உ) இப்பிரிவில் ''கடனிறுக்கவகையறவு நிகழ்வு'' என்பது,-

(i) ஒன்றுசேர்க்கை அல்லது மீள்நிர்மாண நோக்கங் களுக்காகவன்றி, ஓர் உரிமம்பெற்றவரை ஒடுக்கு வதற்கான தீர்மானமொன்றை நிறைவேற்றுதல்;

(ii) உரிமம்பெற்றவர் ஒருவர், உரிமம்பெற்றவரின் கடன்கொடுநர்களுடன் இணக்கமொன்றைச் செய்து கொள்ளுதல்;

(iii) உரிமம்பெற்றவரினால் தனிசுகளின் கொடுப்பனவு இடைநிறுத்தப்படுதல் அல்லது உரிமம்பெற்றவரின் தனிசுகளைச் செலுத்துவதற்கு உரிமம்பெற்றவர் இயலாதிருத்தல் அல்லது உரிமம்பெற்றவரை வங்கி முறிந்தவராக அல்லது கடனிறுக்கவகையற்றவராக வெளிப்படுத்துதல்; அல்லது

(iv) உரிமம்பெற்றவரை ஒடுக்குவதற்கென மனுவொன்றைக் கோப்பிடுதல்,

என்று பொருளாகும்.

(9) இப்பிரிவின் நியதிகளின்படி உரிமமொன்று இல்லா தொழிக்கப்படுவதன்மேல், ஒழுங்குபடுத்துநர், அமைச்சரின் கலந்தாலோசனையுடன், எந்த உரிமம்பெற்றவரின் உரிமம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அந்த உரிமம்பெற்றவரின் தொழிலின் முகாமையையும் கட்டுப்பாட்டையும், ஒத்தவொரு செயற்பாட்டில் ஈடுபடுவதற்குச் செல்லுபடியான உரிமமொன்றை வைத்திருக்கின்ற ஏதேனும் உருவகத்துக்கு உரித்தாக்குவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கலாம். அத்தகைய உரித்தாக்குகை எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய நிறைவேற்றப் படவேண்டுமோ அந்த நியதிநிபந்தனைகள் விதித்துரைக்கப் பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

*மின்பிறப் பாக்கல் உரிமம் பெற்றோருக் கான மேலதிக நிபந்தனைகள்*

**24.** மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர் ஒருவர் பின்வருவன வற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) மின்பிறப்பாக்கல் நிலையங்களையும், பிணைக்கும் இணைப்புக்களையும், உபநிலையங்களையும், ஒப்படைக் கப்பட்ட மின்கடத்துகை இணைப்புக்களையும் அவற்றோடு தொடுக்கப்பட்ட வேறெவையேனும் இணைந்த சாதனங்களையும் தாபித்தல், தொழிற் படுத்துதல் மற்றும் பேணுதல்;

(ஆ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரும் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநரும் அவசியமானவையென அல்லது உசிதமானவையெனக் கருதுகின்றவாறாக மின்பிறப்பாக்கல் முறைமை தொடர்பான அத்தகைய தொழினுட்ப அல்லது தொழிற்பாடுசார் கோவைகளை, நியமங்களை அல்லது நிலை அளபுருக்களை நடைமுறைப்படுத்துதலும் பேணுதலும்;

(இ) ஆட்களையும், பொறித்தொகுதிகளையும், சாதனங் களையும் ஊறுபாட்டிலிருந்தும் சேதத்திலிருந்தும் பாதுகாப்பதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்;

(ஈ) மின்னிணைப்புக்களையும், கம்பி வடங்களையும், மின்பொறித்தொகுதிகளையும் எரிபொருட் கையாளுகை மற்றும் இணைந்த சாதனங்களையும் அபிவிருத்தி செய்தலும் பேணுதலும்;

(உ) 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வேறெவரேனும் உரிமம்பெற்றவருக்கு அல்லது பாவனையாளருக்கு மின்சாரத்தை விற்பனை செய்தல்;

(ஊ) அதன் மின்பிறப்பாக்க நிலையங்கள் தொடர்பாக ஒழுங்குபடுத்துநருக்குத் தொழினுட்ப விபரங்களைச் சமர்ப்பித்தல்; அத்துடன்

(எ) அத்தகைய உரிமம்பெற்றவரினால் மின்பிறப்பாக்கப் பட்ட மின்சாரத்தைக் கடத்துவதற்காகத் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்கு நருடனும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமம்பெற்றவருடனும் ஒருங்கிணைதல்.

ஒரு மின்விநியோகிப்பு உரிமம் பெற்றவருக்கான மேலதிக நிபந்தனைகள்

**25.** (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி மின்வழங்குகை தேவைப்படுகின்ற எவரேனுமாளை, அத்தகைய வழங்குகை தொடர்பில் பின்வருவனவற்றை ஏற்றுக்கொள்ளும்படி ஒரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் தேவைப்படுத்தலாம்:-

(அ) குறைந்தபட்சக் காலப்பகுதியொன்றுக்காகவும் குறைந்த பட்சப் பாவனைத் தேவைப்பாடுகளுக்கமையவும் அத்தகைய மின் வழங்குகையைத் தொடர்ந்து பெற்று அதற்காகப் பணஞ்செலுத்தும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்ற எவையேனும் நியதிகள்;

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப் பட்டவாறாக இருக்கவேண்டிய, இச்சட்டத்தின் கீழ்

ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு அல்லது மின்வழங்குகைக் கோவைக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய உரிமம்பெற்றவரை இயலச்செய்கின்ற நோக்கத்துக்காக விதிப்பதற்குத் தேவைப்படுத் தப்படக்கூடியவாறான எவையேனும் மட்டுப்பாடுகள்; அத்துடன்

(இ) எல்லாச் சூழ்நிலைகளிலும் அவ்வாளை ஏற்றுக்கொள் ளும்படி தேவைப்படுத்துவது நியாயமானதாக வுள்ளதும், எவ்வாறாயினும் எழுகின்றதும், அத்தகைய ஆளினால் உறப்பட்டதுமான ஏதேனும் பொருளாதார, விளைவாந்தன்மையினதான அல்லது வேறு நேரடியற்ற இழப்புக்காக அத்தகைய உரிமம்பெற்றவரின் ஏதேனும் பொறுப்பை மட்டுப்படுத்துகின்ற எவையேனும் நியதிகள்.

(2) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் ஒருவர், அவரது மின்வழங்குகை இடப்பரப்பில், உரிமம்பெற்றவரின் ஆகுசெலவில் வினைத்திறனான, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் பொருளாதார ரீதியில் ஒப்பேறக்கூடிய மின்விநியோகிப்பு முறைமையொன்றை அபிவிருத்திசெய்தலும், பேணுதலும் இச்சட்டத்தின் நியதிகளின்படி மின்வழங்குதலும், அத்தகைய இடப்பரப்பிலுள்ள வளவுகளின் சொந்தக்காரர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள், மின்விநியோகிப்பு இணைப்பின் மிகக்கிட்டிய தொடுப்புப் புள்ளியிலிருந்து அத்தகைய வளவுகளின் மீதுள்ள மானிப் பெட்டிக்குச் சேவைத் தொடுப்பு விதிப்பனவுகளைச் செலுத்துவதன்மூலம் மின்வழங்குகைத் தொடுப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களை இயலச்செய்யும்வகையில், மின்விநியோகிப்பு இணைப்புக்களையும் வேறு இணைந்த தொடுக்கும் வசதிகளையும் நிறுவுவதற்கான மூலதன ஆகுசெலவைச் செலுத்துவதற்கு அத்தகைய சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைத் தேவைப்படுத்தாமல் அவ்வாறு செய்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) (அ) 11 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கமைய, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரொருவர்,

ஓரங்காட்டாமை என்ற அடிப்படையில், கூரைமேல் சூரியவலு மின்பிறப்பாக்கியுட்பட, உள்ளடக்கப்பட்ட மின்பிறப்பாக்கியொன்றின் தொடுப்பை அதன் மின்விநியோகிப்பு வலையமைப்புக்கு அனுமதித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய வலையமைப்பின் இடைத்தொடுப்பு, விதித்துரைக்கப்படக்கூடியவாறான தொழினுட்ப மற்றும் காப்புத் தேவைப்பாடுகளுக்கும் வேறு நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகுவதற்கு அமைந்ததாதல் வேண்டும்.

(4) பதின்மூன்றாம் பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியிலிருந்து ஒழுங்குபடுத்துநர் திறந்த அணுகுகையை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(5) (அ) எந்த ஆளின் வளவுகள் ஒரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் மின்வழங்குகை இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த எவரேனும் ஆளுக்கு வேறெவரேனும் மின்பிறப்பாக்க உரிமம்பெற்றவரிடமிருந்து அல்லது வேறு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரிடமிருந்து மின்வழங்குகையொன்று தேவைப்படுமிடத்து, அத்தகைய ஆள், அறிவித்தல்மூலம், அத்தகைய ஆளின் வளவுகள் எந்த மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் மின்வழங்குகை இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அந்த மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரை, 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஒழுங்குபடுத்துநரினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க அத்தகைய மின்வழங்குகைக்கான அணுகுகையைத் திறக்கும்படி தேவைப்படுத்தலாமென்பதுடன் அத்தகைய ஆளின் வளவுகள் எந்த மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் மின்வழங்குகை இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அத்தகைய மின்வழங்குகை தொடர்பில் அந்த மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் கடமைகள் ஓரங்காட்டாத திறந்த அணுகுகையை வழங்குகின்ற பொதுவான கொண்டு செல்லியின் கடமைகளாக இருத்தலும் வேண்டும்.

(ஆ) ஒரு பாவனையாளரை அல்லது வகுப்பினரான பாவனையாளர்களை, அவரது அல்லது அவர்களது மின்வழங்குகை இடப்பரப்பின் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் தவிர்ந்த

ஆளொருவரிடமிருந்து மின்வழங்குகையொன்றைப் பெறுவதற்கு ஒழுங்குபடுத்துநர் அனுமதிக்குமிடத்து, அத்தகைய பாவனையாளர், மின்வழங்குகைக்கான அவரது கடப்பாட்டிலிருந்து எழுகின்ற அத்தகைய மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் நிர்ணயிக்கப்பட்ட ஆகுசெலவை எதிர்கொள்வதற்கு, ஒழுங்குபடுத்துநரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறு, 13 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான திறந்த அணுகுகை விதிப்பனவுகளைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது உரிமமளிக்கப்பட்ட தேதியிலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ அதிலிருந்து ஆறு மாதங்களினுள் ஒழுங்குபடுத்துநரினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கப் பாவனையாளர்களின் இன்னல்களை விளிப்பதற்கும் அவற்றை நிவர்த்திசெய்வதற்கான தளமொன்றை வழங்குவதற்குமான அரங்கொன்றைத் தாபித்தல் வேண்டும்.

செலவினத்தை அற விடுவதற்கான தத்துவம்

**26.** (1) மின்வழங்கலொன்று தேவையாகவுள்ள எவரேனுமாளுக்கு மின்சாரத்தைத் தொடுத்து வழங்கும் நோக்கத்துக்காக ஏதேனும் மின்சார இணைப்பு அல்லது மின்சாரப் பொறித்தொகுதி மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் வழங்கப்படுமிடத்து, 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சம்பந்தப்பட்ட ஆளுக்கு இணைப்பை அல்லது பொறித்தொகுதியை அல்லது மின்சாரத்தின் தொடுப்பையும் வழங்குகையையும் வழங்குவதில் நியாயமாக உறப்பட்ட எவையேனும் செலவுகள், மின்விநியோகிப்பு உரிமத்தின் நிபந்தனைகளினால் அனுமதிக்கப் படுகின்றவாறான அத்தகைய அளவுக்கு அத்தகைய ஆளினால் கொடுத்துத்தீர்க்கப்படுவதனை உரிமம்பெற்றவர் தேவைப்படுத்தலாம்.

(2) எவரேனுமாளுக்கு மின்வழங்கல் தேவையாகவுள்ளவிடத்தும் ஆனால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் உறப்பட்ட செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதிய வழிவகைகள் இராதவிடத்தும், நியமக் காப்புவரி உடன்படிக்கையின் நியதிகளின்படி, காப்புவரியுடனும்

மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் அறவிடப்பட்ட வேறெவையேனும் விதிப்பனவுகளுடனும் சேர்த்து நியாயமான மாதாந்தத் தவணைப்பணங்களில் அத்தகைய செலவுகளை அறவிடும் அடிப்படையில், சம்பந்தப்பட்ட வளவுகளுக்கு மின்சாரத்தைத் தொடுத்து வழங்கும்படி அத்தகைய ஆள் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரைக் கோரலாம்.

(3) சம்பந்தப்பட்ட வளவுகளுக்கு மின்சாரத்தின் இணைப்பை அல்லது பொறித்தொகுதியை அல்லது தொடுப்பையும் வழங்குகையையும் வழங்குமுன்னர், உரிமம்பெற்றவரினால் உறப்பட்ட செலவுகளை மொத்தமாகக் கொடுத்துத்தீர்ப்பதற்கு (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான ஆளொருவருக்குப் போதிய வழிவகைகள் இல்லையென மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் திருப்திப்படுமிடத்து, வளவுகளுக்கான மின்சாரத்தின் இணைப்பு அல்லது பொறித் தொகுதி அல்லது தொடுப்பும் வழங்குகையும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் கவனிக்கப்படுமுன்னர், அத்தகைய ஆளினால் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவருக்கு எம்முறையில் செலவுகள் கொடுத்துத்தீர்க்கப்படுமோ அம்முறை தொடர்பாக மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவருடன் அவர் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆளொரு வருக்குப் போதிய வழிவகைகள் இல்லையென, (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத் திருப்திப்படும் நோக்கத்துக்காக மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் தேவைப்பட்ட தகவல், விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய வழிகாட்டுநெறி களின் அடிப்படையின்மீதாதல் வேண்டும்.

(5) ஒரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரிடமிருந்து மின்வழங்குகை தேவையாகவுள்ள ஆளொருவரை, ஒழுங்குபடுத்து நர், அவ்வழங்குகையைக் கொடுக்கும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் மின் இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியை வழங்குவதில் நியாயமாக உறப்பட்ட

எவையேனும் செலவுகள் தொடர்பில், பின்வருவனவற்றைக் கவனத்துக்கெடுத்து, எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமாக விருக்கக்கூடியவாறான அத்தகைய தொகையை உரிமம் பெற்றவருக்குச் செலுத்தும்படி பணிக்கலாம்:-

(அ) மின்விநியோகிப்பு இணைப்பை இடுவதற்கும் தொடுப்பை ஏற்படுத்துவதற்குமிடையேயான காலப் பகுதி;

(ஆ) அத்தகைய செலவுகள் தொடர்பில் வேறெவரேனும் ஆள் உரிமம்பெற்றவருக்கு முன்னர்செய்துள்ள ஏதேனும் கொடுப்பனவு; அத்துடன்

(இ) உரிமம்பெற்றவரின் செலவுகளை உரிமம்பெற்றவர் எந்த அளவுக்கு ஏலவே அறவிட்டுள்ளாரோ அந்த அளவு.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் ஒழுங்குபடுத்துநரினால் விடுக்கப்பட்ட பணிப்புக்கள், ஏதேனும் மின்இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியை வழங்குவதில் நியாயமாக உறப்பட்ட செலவுகள் தொடர்பில் தொகையொன்றை அறவிட்டுள்ள மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரை, அவ்வாறு அறவிடப்பட்ட ஏதேனும் தொகையை அல்லது அதன் பாகத்தை, அத்தகைய செலவுகளுக்கு முன்னர் உதவுதொகைசெலுத்திய எவரேனும் ஆளுக்கு மீளளிப்புச்செய்வதற்குத் தோதாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்வதில் பயன்படுத்தும்படி தேவைப்படுத்தலாம்.

(7) இப்பிரிவில், ‘‘ஒரு மின்இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியை வழங்குவதில் நியாயமாக உறப்பட்ட எவையேனும் செலவுகள்’’ பற்றிய ஏதேனும் குறிப்பீடு, அவ்விணைப்பை அல்லது பொறித்தொகுதியைப் பேணுவதில் அவ்வாறு உறப்படக்கூடிய சாத்தியங்கொண்ட எவையேனும் செலவுகள், மின்வழங்குகைக்காக உரிமம்பெற்றவரினால் செய்யப்பட்ட விதிப்பனவுகளின் பாகமாக மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் அறவிடப்படற்பாலனவாகவிராத அளவுவரை, அத்தகைய செலவுகளின் மூலதானமாக்கப்பட்ட பெறுமதிக்கான ஒரு குறிப்பீட்டையும் உள்ளடக்கும்.

*பிணைப் பொறுப்பைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவம்*

**27.** (1) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரொருவர், எழுத்திலான அறிவித்தல்மூலம், மின்தொடுப்பும் மின்வழங்குகையும் தேவையாகவுள்ள எவரேனுமாளை, உரிமம்பெற்றவருக்கு வருமதியாக வரக்கூடிய எல்லாப் பணத்தையும் கொடுப்பனவுசெய்வதற்கான நியாயமான பிணைப்பொறுப்பை வழங்கும்படி தேவைப்படுத்தலாம்:-

(அ) மின்வழங்குகை தொடர்பில்; அல்லது

(ஆ) அத்தகைய மின்வழங்குகைக்காக ஏதேனும் மின் இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதி வழங்கப்படுவது தேவையாகவுள்ளவிடத்து, அத்தகைய இணைப்பு அல்லது பொறித்தொகுதியின் வழங்குகை தொடர்பில்;

அத்துடன் அவ்வாள் அத்தகைய பிணைப்பொறுப்பை வழங்கத் தவறினால், மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர், தவறுதல் தொடர்ந்திருக்கும்வரை வழங்குகையைக் கொடுக்கமறுக்கலாம் அல்லது இணைப்பை அல்லது பொறித்தொகுதியை வழங்க மறுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுகின்றவாறான அத்தகைய பிணைப்பொறுப்பை எவரேனுமாள் வழங்கியிராதவிடத்து, அல்லது அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பு போதியதற்றதாக வந்துள்ளவிடத்து-

(அ) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர், அறிவித்தல்மூலம், அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டபின்னர் ஏழு நாட்களினுள், மின்வழங்குகை தொடர்பில் உரிமம்பெற்றவருக்கு வருமதியாக வரக்கூடிய எல்லாப் பணங்களையும் கொடுப்பனவுசெய்வதற்கான நியாயமான பிணைப் பொறுப்பை வழங்கும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன்

(ஆ) அவ்வாள் அத்தகைய பிணைப்பொறுப்பை வழங்கத் தவறினால், தவறுதல் தொடர்ந்திருக்கும்வரை, விடயத்துக்கேற்ப, தொடுப்பைச் செய்வதற்கு மறுக்கலாம் அல்லது மின்வழங்குகையை நிறுத்திவிடலாம்.

(3) இப்பிரிவினைப் பின்பற்றிப் பிணைப்பொறுப்பு என்றவகையாக ஏதேனும் பணத்தொகை ஒரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவருக்கு வழங்கப்படுமிடத்து, உரிமம்பெற்றவர், ஒழுங்குபடுத்துநரின் அங்கீகாரத்துடன், உரிமம்பெற்றவரினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில், அது எக்காலப்பகுதிக்கு உரிமம்பெற்றவரின் கைகளில் உள்ளதோ அக்காலப்பகுதிக்காக அத்தகைய பணத்தொகையின்மீதான வட்டியைச் செலுத்துதல் வேண்டும்.

நியதிச்சட்ட முறையான விலக்களிப்புக் கள்

**28.** (1) எவரேனுமாள் அல்லது வகுதியினரான ஆட்கள் மின்பிறப்பாக்கத்திலும் மின்விநியோகிப்பிலும் ஈடுபடுமிடத்தும், அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தின் கொள்ளளவு அல்லது தொகையானது ஒழுங்குபடுத்துநர் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் கலந்தாலோசனையுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைக்கின்றவாறான அத்தகைய தொகைக்குக் குறைவாகவிருக்குமிடத்தும், அத்தகைய ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள், சட்ட நடைமுறையின்மூலம், அதற்கான உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து நியதிச்சட்டமுறையாக விலக்களிக்கப் பட்டுள்ளனரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய நியதிச்சட்டமுறையான விலக்களிப்பைத் துய்க்கின்ற ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொகையை மீறுகின்றார் அல்லது மீறுகின்றனரென ஒழுங்குபடுத்துநரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படின், ஒழுங்குபடுத்துநர் அத்தகைய மின்பிறப்பாக்கம் மற்றும் மின்விநியோகிப்புடன் சம்பந்தப்பட்ட எல்லாச் செயற்பாடுகளையும் இல்லாதொழிக்கும்படி அத்தகைய ஆளுக்கு அல்லது வகுதியினரான ஆட்களுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காகப் பயன் படுத்தப்பட்ட எல்லாச் சாதனங்களையும் உடனடியாகத் துண்டித்தலும் வேண்டும்.

## பாகம் VIII

### காப்புவரிகள்

காப்புவரிகள்

**29.** (1) தேசியக் காப்புவரிக் கொள்கை, (3) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காப்புவரிகளைத் தீர்மானிப்பதில் ஒழுங்குபடுத்துநரினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய கோட்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) காப்புவரிகளைத் தீர்மானிப்பதில் ஒழுங்குபடுத்துநர், ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகங்களின் முதலீட்டின்மீது நியாயமான திரும்பல் உள்ளடங்கிய நிதிசார் நிலைபெறுதகுதன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) பின்வருவன, தேசியக் காப்புவரிக் கொள்கைக்கிணங்க ஒழுங்குபடுத்துநரினால் விதித்துரைக்கப்படவேண்டியவாறாகத் தீர்மானிப்பதற்குத் தேவைப்படுத்தப்படவேண்டிய காப்புவரிகளாகவிருத்தல் வேண்டும்:-

(அ) 11 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்கத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு மின்சாரத்தை வழங்குகின்ற மின்பிறப்பாக்குநர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான நியம மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்படவேண்டியதும் ஒவ்வோர் ஆறுமாதங்களும் நாளதுவரையாக்கப்பட்டதுமான உள்ளூட்டுக் காப்புவரி;

(ஆ) 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்கப் பெறுகைசெய்யப்பட்ட, புதிய மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றோரிடமிருந்தான மின்சக்திக் கொள்வனவுக் காப்புவரி;

(இ) 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக இலங்கை மின்சாரச் சபையின் அடுத்துறும் கம்பெனிகளுக்கு வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றோரிட

மிருந்தான மின்சக்திக் கொள்வனவுக் காப்புவரி; இது அத்தகைய அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித் தொதுக்கப்பட்ட இலங்கை மின்சாரச் சபையின் தனிசினது பாகத்தின் தனிசுச் சேவை ஆகுசெலவை உள்ளடக்குதல் வேண்டும்;

(ஈ) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்குத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் பேரளவிலான விற்பனைக் காப்புவரி;

(உ) மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு உரிமம் பெற்றோருக்குச் செலுத்தப்படற்பாலனவான மின்கடத்துகைக் காப்புவரியும் திறந்த அணுகுகை விதிப்பனவுகளும்;

(ஊ) மின்விநியோகிப்பு வலையமைப்புடன் தொடுக்கப்பட்ட பாவனையாளர்களுக்காக மின்விநியோகிப்பு மற்றும் மின்வழங்குகை விதிப்பனவுகளைக் கொண்டுள்ள முடிவுப் பாவனையாளர் காப்புவரியும், மின்கடத்துகை வலையமைப்புடன் தொடுக்கப்பட்ட பாவனையாளர் களுக்காக ஏற்புடையற்பாலதான மின்வழங்குகைக் காப்புவரியும்; அத்துடன்

(எ) மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு உரிமம் பெற்றோரினால் அறவிடப்படவேண்டிய அனுமதிக்கப் பட்ட அரசிறை.

(4) இப்பிரிவு, தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் அறவிடப்படவேண்டிய ‘‘காப்புவரிகள்’’ மற்றும் ‘‘ஏனைய விதிப்பனவுகள்’’ என்பவற்றுக்குப் பின்வருவனவற்றுக்காக ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) அவ்வாறு தேவைப்படும்போது, (இதனகத்துப்பின்னர் ‘‘பேரளவிலான கொள்வனவுக் காப்புவரி’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிராந்தியச் சந்தையின் மின்பிறப்பாக்குநர்கள் அல்லது மின்வழங்குநர் களிடமிருந்து மின்சாரத்தை இறக்குமதிசெய்தலுட்பட,

மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர்களிடமிருந்து பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தைப் பெறுவதற்காகவும்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் ''பேரளவிலான விற்பனைக் காப்புவரி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களுக்கு அல்லது ஏற்றுமதிச் சந்தையிலுள்ள எவரேனும் பாவனையாளர்களுக்கு அல்லது வியாபாரிகளுக்கு அல்லது வாடிக்கையாளர்களுக்குப் பேரளவிலான வடிவத்தில் மின்சாரத்தை விற்பனைசெய்வதற்காகவும்:

ஆயின், பாகம் IX இன் நியதிகளின்படி ஏற்பாடுசெய்யப்பட்டமுறையில் மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை தாபிக்கப்படுவதுடனும் 1 ஆம் பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியிலிருந்து அது நடைமுறைப்படுத்தப்படுவதுடனும் இவ்வுட்பிரிவின் பந்திகள் (அ) மற்றும் (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட காப்புவரிகள் கட்டம்கட்டமான முறையில் தொழிற்படாதொழிதல் வேண்டும்.

(5) தேசியக் காப்புவரிக் கொள்கையின்கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின்மீதான நியாயமான திரும்பல் உட்பட தகவுடைய நியாயமான ஆகுசெலவுகளை அறவிடுவதற்கு இயைபான உரிமம்பெற்றவர்களுக்கு அனுமதியளிக்கின்ற தேசியக் காப்புவரிக் கொள்கைக்கிணங்க ஆகுசெலவைப் பிரதிபலிக்கின்ற பொறிமுறையொன்றுக்கிணங்க எல்லாக் காப்புவரிகளும் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(6) (இதனகத்துப்பின்னர் ''மின்விநியோகிப்பு மற்றும் மின்வழங்குகைக் காப்புவரிகள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மின்சாரத்தை விநியோகிப்பதற்காக மற்றும் வழங்குவதற்காக அல்லது மின்சாரத்தை விநியோகிப்பதற்காக அல்லது வழங்குவதற்காக ஒரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் அறவிடப்பட்ட முடிவுப் பாவனையாளர் காப்புவரி பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பாவனையாளர் சேவைகளுட்பட மின்விநியோகிப்பு வலையமைப்பைப் பேணுவதற்கும் தொழிற்படுத்து வதற்குமான நியாயமான ஆகுசெலவைக் கவனத்துட் கொண்டதன்மேல் தேசியக் காப்புவரிக் கொள்கையின் அடிப்படையின் மீது, ஒழுங்குபடுத்துநரினால் நிர்ணயிக்கப்பட்ட மின்விநியோகிப்புக் காப்புவரி; அத்துடன்

(ஆ) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களினால் செலுத்தப்பட்ட பேரளவிலான கொள்வனவுக் காப்புவரியையும் மின்கடத்துகைக் காப்புவரியையும் அறவிடுவதற்கு ஒழுங்குபடுத்துநரினால் நிர்ணயிக்கப் பட்ட மின்வழங்குகைக் காப்புவரி:

ஆயின், பாகம் IX இன் நியதிகளின்படி மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை தாபிக்கப்படுவதுடனும் 1 ஆம் பிரிவின் நியதிகளின்படி அது தொழிற்படுத்தப்படுவதுடனும் மின் வழங்குகைக் காப்புவரி, சந்தையிலிருந்து மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோரின் மின்சக்திப் பெறுகை ஆகுசெலவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஐயத்தைக் தவிர்ப்பதற்காகப் பின்வருமாறு குறிப்பிடப் படுகின்றது:-

(அ) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோரினால் அறவிடப் பட்ட முடிவுப் பாவனையாளர் காப்புவரிகள் தனிவேறான இரு காப்புவரிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதாவது, ‘‘மின்விநியோகிப்புக் காப்புவரியும்’’ ‘‘மின்வழங்குகைக் காப்புவரியும்’’;

(ஆ) ஓர் எதிர்காலத் தேதியில் திறந்த அணுகுகை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், மின்வழங்குகைக் காப்புவரியானது, திறந்த அணுகுகைக்கு விருப்புத் தெரிவிக்கின்ற பாவனையாளர்களுக்கு ஏற்புடையற் பாலதாக இல்லாதொழிதலும் வேண்டும்; ஏனெனில் திறந்த அணுகுகை விதிப்பனவுகள், திறந்த

அணுகுகைக்காக விருப்புத்தெரிவிக்கின்ற மின்பிறப் பாக்க உரிமம்பெற்றோருக்கும் தகவுடைய வியாபாரி களுக்கும் அல்லது வாடிக்கையாளர்களுக்கும் இடையேயான வர்த்தக உடன்படிக்கைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர், திறந்த அணுகுகை விதிப்பனவுகளின் பாகமாகத் திறந்த அணுகுகையைப் பயன்படுத்துகின்ற அத்தகைய பாவனையாளர்களிடமிருந்து மின்விநியோகிப்புக் காப்புவரியை அறவிடுவதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

(8) மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு உரிமம்பெற் றோரினால் அறவிடப்படவேண்டிய திறந்த அணுகுகை விதிப்பனவுகள், திறந்த அணுகுகை விதிப்பனவுகளைத் தீர்மானிப்பதற்கு ஏற்புடையற்பாலதான தேசியக் காப்புவரிக் கொள்கையின் இயைபான ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒழுங்குபடுத்துநரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(9) விடயத்துக்கேற்ப, பேரளவிலான கொள்வனவுக் காப்புவரி, பேரளவிலான விற்பனைக் காப்புவரி, மின்கடத்துகைக் காப்புவரி, திறந்த அணுகுகை விதிப்பனவுகள் மற்றும் மின்விநியோகிப்புக் காப்புவரி அத்துடன் மின்வழங்குகைக் காப்புவரிகள் தேசியக் காப்புவரிக் கொள்கைக்கிணங்க விதித்துரைக்கப்பட வேண்டிய வாறான உரிமம்பெற்றோரினால் செய்யப்பட்ட காப்புவரிக் கோப்பிடுகைகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்-

(அ) இயைபான உரிமம்பெற்றவரின் உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லாச் செயற்பாடுகளையும் வினைத்திறனானவோர் அடிப்படையில் நிறைவேற்று வதில் உறப்பட்ட நியாயமான எல்லா ஆகுசெலவு களையும் அறவிடுவதற்கு அத்தகைய உரிமம்பெற்றவரை அனுமதித்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொதுமக்களின் பரந்த விழிப்புணர்ச்சியைப் உறுதிப் படுத்துகின்றதும் ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்

படகூடியவாறானதுமான அத்தகைய முறையில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(10) விடயத்துக்கேற்ப, தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் அல்லது ஒரு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் என்போரின் உரிமங்கள், விடயத்துக்கேற்ப, பேரளவிலான காப்புவரிக்கான அல்லது பேரளவிலான விற்பனைக் காப்புவரிக்கான மற்றும் வேறு விதிப்பனவுகளுக்கான அல்லது மின்கடத்துகைக் காப்புவரிக்கான மற்றும் வேறு விதிப்பனவுகளுக்கான அல்லது திறந்த அணுகுகை விதிப்பனவுகளுக்கான மற்றும் வேறு விதிப்பனவுகளுக்கான, அத்துடன் மின்விநியோகிப்புக் காப்புவரிக்கான மற்றும் மின்வழங்குகைக் காப்புவரிக்கான மற்றும் வேறு விதிப்பனவுகளுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும். அத்தகைய எல்லாக் காப்புவரிகளும் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான முறையில் ஒழுங்குபடுத்துநரினால் பரிசீலனைக்கமைந்தனவாதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றுக்காக ஏற்பாடுசெய்தலும் வேண்டும்:-

(அ) மின்கடத்துகைக் காப்புவரி மற்றும் மின்விநியோகிப்புக் காப்புவரிகள், திறந்த அணுகுகை விதிப்பனவுகள் அத்துடன் வேறு விதிப்பனவுகளின் பரிசீலனைக்கான வருடாந்த நேரஅட்டவணை;

(ஆ) பேரளவிலான விற்பனைக் காப்புவரி, பேரளவிலான கொள்வனவுக் காப்புவரி மற்றும் மின்வழங்குகைக் காப்புவரியின் பரிசீலனைக்கான காலாண்டு நேர அட்டவணை; அத்துடன்

(இ) பாவனையாளர்களும் வேறு அக்கறைகொண்டுள்ள திறத்தவர்களும் பரிசீலனை நோக்கங்களுக்காக நடவடிக்கைமுறையில் பங்குபற்றக்கூடிய முறை.

(11) இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒழுங்குபடுத்துநர் -

(அ) குறித்தசில பாவனையாளர்களுக்கு மானியமளிப்பதற்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மின்விநியோகிப்புக் கம்பெனிகளுக்கு ஏதேனும் மானியத்தின் ஆகுசெலவைப் பொறுப்பதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதிகளின் போதுமாந்தன்மைபற்றித் திருப்திப்படுவதன்மேல்; அத்துடன்

(ஆ) தேசியக் காப்புவரிக் கொள்கையின் நியதிகளின்படி அத்தகைய வகுதியினரான பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படற்பாலதான ஏதேனும் தனிவரியைக் கவனத்துட்கொண்டு,

அத்தகைய மானியங்களைப் பிரதிபலிக்கின்றவையும் இயைபான உரிமம்பெற்றவர்களினால் அறவிடப்படவேண்டியவையுமான காப்புவரிகளையும் விதிப்பனவுகளையும் நிர்ணயிக்கலாம்.

## பாகம் IX

## மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை

*மொத்த விற்பனை மின்சாரச் சந்தையைத் தாபித்தல்*

**30.** (1) அமைச்சர், 1 ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதன்கண் குறிப்பிடப்படக்கூடிய எவையேனும் நிபந்தனைகளுக்கமைய, மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை எத்தேதியிலிருந்து தொழிற்பாடுகளைத் தொடங்க வேண்டுமோ அத்தேதியைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) மொத்த விற்பனை மின்சாரச் சந்தையானது போட்டியுள்ளவொரு சந்தையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் தொழிற்பாட்டில் கடைப்பிடிக்கப்படவேண்டிய தொழிற்பாட்டு நடவடிக்கைமுறைகள் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தலும் வேண்டும்.

(3) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் மொத்த விற்பனை மின்சாரச் சந்தையின் தொழிற்பாட்டுக்காக (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்று ஆக்கப்படுவதற்குமுன்னர், மொத்தவிற்பனை மின்சாரச் சந்தையின் வினைத்திறனான தொழிற்பாட்டை வசதிப்படுத்துவதற்கு அவசியமான தொழிற்பாட்டு, தொழினுட்ப, வர்த்தக மற்றும் பொருளாதார நிலை அளபுருக்களையும் சந்தைக் கண்காணிப்புச் செய்முறைகளையும் அடையாளங்கண்டு குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள், நியதிநிபந்தனைகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் விதிகள் ஆக்கப்பட்டுள்ளனவென்று அமைச்சர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) அமைச்சர், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி, மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை தாபிக்கப்படுமுன்னர் மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றோருடன் மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கு அனுமதியளிக்கலாம்.

## பாகம் X

### பாவனையாளர் பாதுகாப்பு

போட்டிச் செயல் முறைகள் தொடர்பான கொள்கை வழிகாட்டு நெறிகள்

**31.** போட்டிக்கெதிரான செயல்முறைகள், தனியுரிமைகள், கூட்டுச்சதி மற்றும் அதிகாரங்கொண்ட பதவியின் துஷ்ப்பிரயோகங்கள், அத்துடன் மின்சாரத்தொழிலில் போட்டியைப் பாதிக்கின்ற விளைவான ஒன்றிணைவு நிலைமைகள் என்பவற்றைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்மீது, அமைச்சர், ஒழுங்குபடுத்துநரின் கலந்தாலோசனையுடன் கொள்கை வழிகாட்டுநெறிகளை வழங்குதல் வேண்டும்.

மின்வழங்கலுக்கான நியமம்

**32.** (1) காப்புவரி வாடிக்கையாளர்களுக்கு மின்வழங்கல் மற்றும் மின்வழங்கற் சேவைகளை ஏற்பாடுசெய்தல் சம்பந்தமாக மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களினால் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட நியமங்களை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படலாம்.

(2) இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒழுங்குவிதிகள், செயல்முறைக்குகந்த அளவுவரை, மின்விநியோகிப்பு உரிமம் பெற்றவர்களுடனும் உத்தேசிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களின் பிரதி நிதித்துவக் குழுக்களுடனுமான கலந்தாலோசனையின்பின்னர் ஆக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியமத்தை எதிர்கொள்வதற்கு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரொருவர் தவறியமை காரணமாக எவரேனுமாள் விதித்துரைக்கப்பட்ட விவரணத்தினதான ஏதேனும் இழப்பை அல்லது சேதத்தை உறுமிடத்து, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர், அத்தகைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக் கப்படுகின்றவாறு, அத்தகைய முறையில் கணக்கிடப்பட்டதான அத்தகைய தொகையினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட நியமமொன்றை எதிர்கொள்வதற்கு மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் ஒருவரினாலான தவறுதலொன்று தொடர்பில் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எவரேனுமாளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு, அத்தகைய தவறுதலாக அமைகின்ற செயல் அல்லது செய்யாமை தொடர்பில் அத்தகைய ஆளுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள வேறேதேனும் பரிகாரத்துக்குப் பங்கமில்லா திருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை வலுவுறுத்துவதிலிருந்து எழுகின்ற ஏதேனும் பிணக்கு, ஒரு விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் அல்லது காப்புவரி வாடிக்கையாளரினால் அல்லது வேறேதேனும் பாதிக்கப்பட்ட திறத்தவரினால் ஒழுங்குபடுத்துநருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம் என்பதுடன் 46 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒழுங்குபடுத்துநர் அத்தகைய பிணக்கைத் தீர்மானிக்கலாம்.

**33.** ஒழுங்குபடுத்துநர், மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களுடனும் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட ஆட்களுடன் அல்லது ஆட்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களுடனும் கலந்தாலோசித்தபின்னர், காலத்துக்குக்காலம்– ஒட்டுமொத்தச் செயல்நிறைவேற்றத்தின் நியமங்களும் மின்சாரத்தின் வினைத் திறனான பாவனையும்

(அ) அதன் அபிப்பிராயத்தில் அத்தகைய மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களினால் எய்தப்படவேண்டிய, மின்வழங்கல் மற்றும் மின்வழங்கற் சேவைகளின் தரம் மற்றும் பாவனையாளர்களினால் மின்சாரத்தின் வினைத்திறனான பாவனையின் மேம்பாடு சம்பந்தமாக ஒட்டுமொத்தச் செயல்நிறைவேற்றத்தின் அத்தகைய நியமங்களைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட நியமங்கள், தோதானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் வெளியிடப்படுவதற்காக ஒழுங்கேற்பாடுசெய்யலாம்.

**34.** (1) ஒழுங்குபடுத்துநர், காலத்துக்குக் காலம், பின்வருவன தொடர்பிலான தகவல்களைச் சேகரித்தல் வேண்டும்:- செயல்நிறைவேற்ற மட்டங்கள் தொடர்பிலான தகவல்கள்

(அ) 32 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களினால் செலுத்தப்பட்ட நட்டஈடு ஏதேனுமிருப்பின்;

(ஆ) மின்சாரத்தையும் மின்வழங்கற் சேவைகளையும் ஏற்பாடுசெய்தல் சம்பந்தமாக அத்தகைய உரிமம்பெற்றவர்களினால் எய்தப்பட்ட ஒட்டுமொத்தச் செயல்நிறைவேற்றத்தின் மட்டங்கள்; அத்துடன்

(இ) பாவனையாளர்களினால் மின்சாரத்தின் வினைத்திறனான பாவனையின் மேம்பாடு சம்பந்தமாக அத்தகைய உரிமம்பெற்றவர்களினால் எய்தப்பட்ட செயல்நிறைவேற்ற மட்டங்கள்.

(2) ஒழுங்குபடுத்துநரினால் விடுக்கப்பட்ட பணிப்பொன்றில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக ஒவ்வோராண்டிலும் அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர், ஒவ்வொரு விநியோகிப்பு உரிமம்பெற்றவரும் பின்வருவனவுட்பட, நியமங்கள் தொடர்பாக அது தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவல்களை ஒழுங்குபடுத்துநருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்–

(அ) 32 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு நியமம் தொடர்பிலும் நட்டஈடு செலுத்தப்பட்ட விடயங்களின் எண்ணிக்கையும் செலுத்தப்பட்ட நட்டஈட்டின் கூட்டுமொத்தத் தொகையும் அல்லது பெறுமதியும்; அத்துடன்

(ஆ) 33 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு நியமம் தொடர்பிலும், ஒழுங்குபடுத்துநரினால் தேவைப் படுத்தப்படக்கூடியவாறாக உரிமம்பெற்றவரினால் எய்தப்பட்ட செயல்நிறைவேற்ற மட்டம் தொடர்பிலான அத்தகைய தகவல்கள்.

(3) இரண்டாம் உட்பிரிவினால் மின்விநியோகிப்பு உரிமம்பெற்ற வரொருவரினால் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எதனையும் செய்வதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்ற அந்த உரிமம்பெற்றவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்தகைய குற்றத்தீர்ப்புக் குப்பின்னர் அத்தகைய தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பதாயிரம் ரூபாவான மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்; இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துநரின் நிதியத்தினுள் இது செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஒழுங்குபடுத்துநர் ஆகக்குறைந்தது ஒவ்வோராண்டிலும் ஒரு தடவையேனும், மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களின் வாடிக்கையாளர் களுக்கு

அல்லது எதிர்கால வாடிக்கையாளர்களுக்குக் கொடுப்பதற்கு உசிதமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறு, இப்பிரிவின்கீழ் அதனால் சேகரிக்கப்பட்ட அல்லது அதற்குக் கொடுத்துதவப்பட்ட அத்தகைய தகவல்களை, தோதானதென அது கருதுகின்றவாறாக அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் வெளியிடுவதற்காக ஒழுங்கேற்பாடு செய்தல் வேண்டும்.

## பாகம் XI

## நிதி

வருடாந்த அறவீடு

***35.*** (1) நிதி மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தல் என்னும் விடயங்கள் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர்களின் அங்கீகாரத்துடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதான வருடாந்த அறவீடொன்று ஒவ்வோர் உரிமம்பெற்றவரிடமிருந்தும் விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஆண்டுக்கான வருடாந்த அறவீட்டைத் தீர்மானிப்பதில், ஒழுங்குபடுத்துநர் பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:-

(அ) அவ்வாண்டுக்காக ஒழுங்குபடுத்துநரின் மதிப்பிடப்பட்ட செலவினம்; அத்துடன்

(ஆ) முன்னைய ஆண்டிலிருந்தான ஏதேனும் அறவிடப்படாத செலவினம்.

(3) ஏதேனுமாண்டுக்காக ஓர் உரிமம்பெற்றவருக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அறவீடு, அவ்வாண்டின் யூன் முப்பதாம் தேதிக்குமுன்னர் ஒழுங்குபடுத்துநருக்கு உரிமம்பெற்றவரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஆண்டுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அறவீட்டை அவ்வாண்டின் யூன் முப்பதாம் நாளுக்குமுன்னர் செலுத்துவதற்கு உரிமம்பெற்றவர் தவறுகின்றவிடத்து, அறவீடானது

தவணைதவறியதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துநரின் தவிசாளர், உரிமம்பெற்றவரிடமிருந்து வருமதியான அறவீட்டுத் தொகையைச் சான்றுப்படுத்துகின்ற சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும்.

(5) சான்றிதழிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமம்பெற்றவரின் தொழில் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் கொண்டுநடாத்தப்படுகின்றதோ அந்த நீதிமன்றத்தின்முன்னர் (4) ஆம் உட்பிரிவின்கீழ் தவிசாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று காண்பிக்கப்படுவதன்மேல் நீதிமன்றமானது, உரிமம்பெற்றவருக்கு உரிய கேட்பொன்றை அளித்ததன்மேல், சான்றிதழிற் குறித்துரைக்கப்பட்ட தொகையை அறவிடுவதற்கு அவசியமான அத்தகைய உரிமம்பெற்றவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனங்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் கைப்பற்றி விற்பனைசெய்யும்படி பிசுக்காலுக்கு அதிகாரமளிக்கின்ற நிறைவேற்றெழுத்தாணையொன்றைப் பிசுக்காலுக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 226 முதல் பிரிவு 297 வரையானவற்றின் ஏற்பாடுகள் அத்தகைய கைப்பற்றுகையினதும் விற்பனையினதும் நிறைவேற்றுகைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(6) தவிசாளர் (4) ஆம் உட்பிரிவின்கீழான சான்றிதழொன்றை வழங்குமிடத்து, சான்றிதழிற் குறித்துரைக்கப்பட்ட தொகை உரிமம்பெற்றவரினால் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதெனச் சான்றிதழிற் குறித்துரைக்கப்பட்ட உரிமம்பெற்றவருக்கு எழுத்தில் தவிசாளர் அறிவித்தல் வேண்டும், ஆனால் அத்தகைய அறிவித்தல் பெறப்படாமை இப்பிரிவின்கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்குநடவடிக்கைகளைச் செல்லுபடியற்றனவாக்குதலாகாது.

(7) இப்பிரிவிலுள்ளதெதுவும், தவணைதவறுகையிலுள்ள ஏதேனும் அறவீட்டுத்தொகையை வேறேதேனும் முறையில் அறவிடுவதற்கு ஒழுங்குபடுத்துநரின் உரிமையைப் பாதித்தலோ அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

## பாகம் XII

### நானாவிதமானவை

மேந்தலை மற்றும் நிலத்தின் கீழான மின் இணைப்பு களுக்கு உரிமம் தேவைப்படும்

**36.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளொருவர் இச்சட்டத்தின் நியதிகளின்படி அதற்கெனப் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிமமொன்றுக்கிணங்கவன்றி, நிலத்தின்மேல் அல்லது நிலத்தின்கீழ் மின்இணைப்பொன்றை நிறுவுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) முப்பத்திமூன்று கிலோவோற்றுக்களை விஞ்சாத அல்லது ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறேதேனும் உயர்வான மின்வலியளவு கொண்ட பெயரளவிலான மின்வலியளவைக் கொண்டுள்ள ஒரு மின்இணைப்புக்கு அல்லது நிலத்தின்கீழான கம்பி வடத்துக்கு; அத்துடன்

(ஆ) மின்னிணைப்பொன்றின் நிறுவுகைக்குப் பொறுப் பாகவுள்ள ஆளினால் இருப்பாட்சிகொள்ளப்படுகின்ற அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள வளவுகளினுள் உள்ளவாறான அல்லது உள்ளதாக விருக்கும் மின்இணைப்பின் அத்தகைய பாகத்துக்கு.

(3) இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஓர் உரிமம்-

(அ) தோதானவையென ஒழுங்குபடுத்துநருக்குத் தோன்றக் கூடியவாறான (மின்இணைப்பின் சொத்தாண்மையும் தொழிற்பாடும் பற்றிய நிபந்தனைகள் உட்பட) அத்தகைய நிபந்தனைகளை உள்ளடக்கலாம்;

(ஆ) உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியின் முடிவுக்குப்பின்னர் எந்நேரத்திலும் ஒழுங்குபடுத்துநரினால் வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்; அத்துடன்

(இ) (ஆ) என்னும் பந்திக்கமைய, உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது அதனால் அல்லது அதன்கீழ் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(4) ஒழுங்குபடுத்துநர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மின் இணைப்பொன்று "உயர் மின்வலியளவு இணைப்பு" ஒன்றாகப் பெயர்குறிக்கப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

மின்சக்திப் பிறப்பாக்கம் மற்றும் மின்கடத்துகைக் கருத்திட்டங்களுக்காக ஆதனத்தைக் கொள்ளுதல்

**37.** (1) சனாதிபதி, அமைச்சரினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின்மீது, ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஒரு மின்சக்திப் பிறப்பாக்கக் கருத்திட்டத்துக்காக அல்லது ஒரு மின்கடத்துகைக் கருத்திட்டத்துக்காகத் தேவைப்படுகின்றதென்றும், அத்தகைய கருத்திட்டம் பொதுமக்களின் பொதுவான நல்வாழ்வுக்கும் நன்மைக்கும் சேவையாற்றுமென்றும் அபிப்பிராயப்படுமிடத்து, சனாதிபதி, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவற்ற ஆதனம் அத்தகைய நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதென வெளிப்படுத்தலாமென்பதுடன் அவ்வாதனமானது அதற்கிணங்க (295 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு அத்தகைய கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கின்ற ஆளுக்கு அல்லது ஆட்களுக்குக் கைமாற்றவும்படலாம்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பதாமாண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 முதல் பிரிவு 8 வரையானவற்றின் ஏற்பாடுகள் (இரண்டுமுட்பட), (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆதனத்தின் கொள்ளுதலொன்றுக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத் தொகை, அவ்வாதனம் எவ்வாளுக்கு அல்லது ஆட்களுக்குக் கைமாற்றப்படுகின்றதோ அவ்வாளினால் அல்லது ஆட்களினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் XIII

## பொது

மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகத்தைத் தாபித்தல்

**38.** (1) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகச் சீர்திருத்தச் செய்முறையை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சருக்கு உதவும் நோக்கத்துக்காக மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம் என வழைக்கப்பட்டு அறியப்படும் செயலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகத்தின் உறுப்பினர்களாக இருப்பதற்கு, நேர்மையும், பின்வரும் துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் பத்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவமும் உடைய மூன்றாட்களுக்கு மேற்படாதோரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்:-

(i) பொது நிருவாகம்;

(ii) மனிதவள முகாமைத்துவம்;

(iii) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி மீள்கட்டமைத்தல்;

(iv) சட்டம்;

(v) பொறியியல்;

(vi) பகிரங்கத் தனியார் பங்காண்மை; அல்லது

(vii) நிதி.

(ஆ) மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்குப் பின்வரும் துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் அனுபவமுடைய ஆளொருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்:-

(i) பொது நிருவாகம்;

(ii) மனிதவள முகாமைத்துவம்;

(iii) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி மீள்கட்டமைத்தல்;

(iv) சட்டம்;

(v) பொறியியல்;

(vi) பகிரங்கத் தனியார் பங்காண்மை; அல்லது

(vii) நிதி.

(3) மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகமானது, இச்சட்டத்தில் எடுத்துக்கூறப்பட்ட சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்துகையைப் பணித்து மேற்பார்வைசெய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இச்சட்டத்தில் எதிர்நோக்கப்பட்டவாறு சீர்திருத்தச் செய்முறையை நடைமுறைப்படுத்துகையில், அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் எல்லா நேரங்களிலும் அமைய, மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகத்தின்மீது மேற்பார்வை பிரயோகித்தல் வேண்டும்.

(4) மின்சக்தித்துறைச் சீர்திருத்தச் செயலகம் பின்வருமாறு செய்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் 17 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட புதிய

கம்பெனிகள் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத் தொழிற்பாடுகளைத் தொடங்குவதனை உறுதிப் படுத்துவதிலும் அமைச்சருக்கு உதவுதல்;

(ஆ) மின்சக்தித்தொழிலுக்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கென, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படவேண்டிய ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதனை முன்னுரிமைப் படுத்துவதிலும் வசதிப்படுத்துவதிலும் அமைச்சருக்கு உதவுதல்;

(இ) சீர்திருத்தச் செய்முறையை இறுதியாக்குவதற்குத் தேவைப்பட்ட முதனிலைக் கைமாற்றல் திட்டத்தினதும் இறுதிக் கைமாற்றல் திட்டத்தினதும் தயாரிப்பைத் துரிதமானவொருமுறையில் வசதிப்படுத்துதல்;

(ஈ) 18 ஆம் பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட கைமாற்றல் திட்டத்தில் அடையாளங்காணப்பட்டவாறு இலங்கை மின்சாரச் சபையின் செயற்பாடுகளை உரிமைதுறப்பதற்கான செய்முறையைப் பூர்த்தி செய்தலுட்பட இலங்கை மின்சாரச்சபையின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மீளக்கட்ட மைப்பதற்கு ஏற்புடையதாக்கப்படவேண்டிய முறைமையியலை அடையாளங்காண்கின்ற எல்லாமடக்கிய மற்றும் வினைத்திறனான நிதிசார் மீளக்கட்டமைத்தல் செய்முறை ஒன்று வகுத் தமைக்கப்படுவதனை ஒருங்கிணைத்தல்; அத்துடன்

(உ) போட்டியுள்ள, வெளிப்படையான மற்றும் வகைகூற வேண்டிய நடவடிக்கைமுறைகளைப் பயன்படுத்தி சீர்திருத்தப்பட்ட மின்சக்தித் துறையைத் தொழிற் படுத்துவதிலும் புதிய மின்பிறப்பாக்கல் கொள்ளளவைப் பெறுவதிலும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரின் ஆற்றல் கட்டியெழுப்புதலைத் தொடக்கிவைத்தல்.

(5) மின்சக்தித்துறைச் சீர்திருத்தச் செயலகம் தொடர்பான ஏற்பாடுகள், சட்டமூலமானது பாராளுமன்றச் சட்டமொன்றாகவரும் தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதி முடிவுறுவதன்மீது தொழிற்படாதொழிதல் வேண்டும்:

ஆயின், அமைச்சர், சொல்லப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதி முடிவுறுவதற்கு முப்பதுநாட்களுக்குமுன்னர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம், நீடிப்புக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கமைய, ஒரு தடவையில் ஓராண்டுக்கு மின்சக்தித்துறைச் சீர்திருத்தச் செயலகத்தின் பணியாற்றுகையை அவ்வாறு நீடிக்கலாம்:

ஆயின், மேலும், மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகம் அவ்வாறு நீடிக்கப்படக்கூடிய ஒன்றுதிரண்ட காலப்பகுதி, சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமாக வருகின்றதோ அத்தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதிக் கப்பால் நீடித்தலாகாது.

*இலங்கை மின்சாரச் சபை, அதன் உடைமையிலுள்ள எல்லாத் தரவுகளையும் தகவல்களையும் மின்சக்தித் துறைச் சீர்திருத்தச் செயலகத்துக்கு வழங்குவதற்குத் தேவைப் படுத்தப்படுதல்*

**39.** (1) இலங்கை மின்சாரச் சபையின் பணிப்பாளர் சபையானது இச்சட்டத்தின் நியதிகளின்படி நிறைவேற்றப்படும் மீளக்கட்டமைத்தல் செயற்பாடுகளில் மின்சக்தித்துறைச் சீர்திருத்தச் செலயகத்துடன் ஒத்துழைத்தல் வேண்டும். இலங்கை மின்சாரச் சபையின் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபையின் சார்பில், பின்வருவனவற்றை மின்சக்தித்துறைச் சீர்திருத்தச் செயலகத்துக்குக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கை மின்சாரச் சபையின் உடைமையிலுள்ளவையும் எத்தகைய வடிவத்திலானவையுமான எல்லாத் தரவுகளையும் ஆவணங்களையும் சொல்லப்பட்ட சபையினால் நிறைவேற்றப்படும் எல்லாச் செயற்பாடுகளும் தொடர்பான தகவல்களுட்பட வேறெவையேனும் முக்கியமான தகவல்களையும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் அடுத்துறுநர் கம்பெனிகளுக்கு, காணி, கட்டிடம், பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதியும் வேறு அசைவுள்ள

சொத்துக்களும் உட்பட எல்லாச் சொத்துக்களினதும் முதனிலைக் குறித்தொதுக்கலையும் அத்தகைய சொத்துக்களின் முதனிலைப் பெறுமதிமதீப்பீட்டையும்:

ஆயின், 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட மீதமான கம்பெனியின் பிரதான நிறைவேற்றலுவலர், இறுதிக் கைமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய இறுதிச்சொத்துக் குறித்தொதுக்கலுக்கும் இறுதிச் சொத்துப் பெறுமதிமதிப்பீட்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்;

(இ) இலங்கை மின்சாரச்சபையின் நிதிநிலைமை தொடர்பான தகவலையும்;

(ஈ) நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் மீதமான கம்பெனியுட்பட அடுத்துறும் கம்பெனிகளுக்கு முதனிலைப் பணியாட்டொகுதியினர் குறித் தொதுக்குதலையும்:

ஆயின், 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட மீதமான கம்பெனியின் பிரதான நிறைவேற்றலுவலர், இறுதிக் கைமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய இறுதிக் குறித்தொதுக்கலுக்கும் அதுதொடர்பாகப் பணியாட்டொகுதியினரின் இன்னல்களை விளித்துரைத்தலுக்கும் பொறுப்பாதல் வேண்டும்;

(உ) இலங்கை மின்சாரச் சபையின் முடிவுறாதுள்ள எல்லா வழக்காடல்களும் தொடர்பான தகவல்களையும்;

(ஊ) 18 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட கைமாற்றல் திட்டத்தை இறுதியாக்கும் நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றவையும் இலங்கை மின்சாரச்சபை செய்துகொண்டுள்ளவையுமான எல்லா ஒப்பந்தஞ்சார் ஈடுபாடுகளும் பற்றிய தகவல்களையும்:

ஆயின், மின்சாரத்துறைச் சீர்திருத்தச் செயலகம் இலங்கை மின்சாரச் சபையிலிருந்து பெறப்பட்ட எல்லாத் தகவல்களும் தொடர்பில் அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தகவல்களை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்துதலும் வேண்டும்:

ஆயின், மேலும், இலங்கை மின்சாரச் சபையின் பொது முகாமையாளர், நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் அடுத்துறும் கம்பெனிகளுக்கு இலங்கை மின்சாரச் சபையின் ஒப்பந்தஞ்சார் ஈடுபாடுகளின் குறித்தொதுக்கலை வழங்குவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

*2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்*

**40.** இரண்டாயிரத்து இருபத்திமூன்றாமாண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ''இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தவறுகள்'' என்ற தலைப்பின்கீழ் பாகம் III றின் அத்தியாயம் I றின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவை தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

*மின்சாரத்தை உறத்தல் தவறொன்றாதல் வேண்டும்*

**41.** (1)(அ) ஒரு மின்கடத்துகை அல்லது மின்விநியோக உரிமம்பெற்றவரொருவரினால் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நெறியிலுள்ளதும்; அத்துடன்

(ஆ) ஒரு மின்விநியோக உரிமம்பெற்றவரொரு வருடன் அல்லது வேறு மின்கடத்துகை உரிமம்பெற்றவரொருவருடன் செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தைப் பின்பற்றாது வேறுவகையில்,

ஏதேனும் மின்சாரத்தை எடுக்கின்ற, பயன்படுத்துகின்ற அல்லது உறக்கின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின்முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும் அத்தகைய தவறாக அமைகின்ற செயலின் அல்லது தவறுகையின் விளைவாக உரிமம்பெற்றவருக்கு விளைவிக்கப்பட்ட இழப்பின் அல்லது சேதத்தின் பெறுமதியாகவுள்ள பணத்தொகையிலானவொரு மேலதிகக் குற்றப்பணத்திற்கும் அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். மேலதிகக் குற்றப்பண மொன்றாக அறவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை நீதிமன்றத் துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது உரிமம்பெற்றவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறைப் புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தவறுக்காக ஏற்பாடுசெய்யப்படுகின்றவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள், பிரதான தவறாளராகவோ அல்லது உடந்தையாளராகவோ அதே தவறைப் புரிந்தமைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய இழப்பின் அல்லது சேதத்தின் பெறுமதி அத்தகைய ஆட்களிடையே பங்கிடப்படலாம் என்பதுடன் அவ்வாறு பங்கிடப்பட்ட தொகை குற்றப்பணமொன்றாக அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரின்மீதும் விதிக்கப்படுதலும் வேண்டும்.

(4) உரிமம்பெற்றவரினால் வழங்கப்படும் சான்றிதழொன்று முரணான சான்று இல்லாதபோது அத்தகைய இழப்பின் அல்லது சேதத்தின் பெறுமதிக்கான எண்பிப்பாகப் பெறப்படுதல் வேண்டும். ஏதேனும் உடன்படிக்கை இல்லாதபோது, உரிமம்பெற்றவரொருவர், வழங்கப்பட்ட மின்சாரத்துக்காக,

உரிமத்தில் ஏற்பாடுசெய்யப்படும் விதிப்பனவுமுறைக்கிணங்கப் பாவனையாளர் ஒருவருக்கு வழங்கப்படும் மின்சாரமாக அது இருந்தது என்றாற்போன்று தவறாளர்களுக்கு விதிப்பனவு செய்யலாம்.

*மின்சாரத்தின் முறையற்ற பயன்பாடு தவறொன்றாதல் வேண்டும்*

**42.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி-

(அ) ஓர் உரிமம்பெற்றவரின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராகவிராது, மானிக்கு, காட்டிக்கு அல்லது வேறு உபகரணத்துக்கு அல்லது அதிலிருந்து உரிமம்பெற்றவரினால் எந்த மின்இணைப்பினூடாக மின்சாரம் வழங்கப்படுகின்றதோ அல்லது வழங்கப் படக்கூடுமோ அந்த ஏதேனும் மின்இணைப்பைத் தொடுக்கின்ற அல்லது துண்டிக்கின்ற;

(ஆ) ஓர் உரிமம்பெற்றவரின் சம்மதமின்றி ஓர் உரிமம் பெற்றவருக்குச் சொந்தமான ஏதேனும் மின் இணைப்புடன், உபகரணத்துடன் அல்லது வேலைகளுடன் தொடுப்பொன்றைத் தாபிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் மின்இணைப்பை இடுகின்ற அல்லது இடச்செய்விக்கின்ற அல்லது ஏதேனும் மின்இணைப்பை, சாதனத்தை, உபகரணத்தை அல்லது வேலைகளைத் தொடுக்கின்ற; அல்லது

(இ) வேண்டுமென்று அல்லது அசட்டையாக -

(i) மின்சாரத்தின் அளவை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் மானியின்மீது பதிவுசெய்யப்பட்டவாறாக மின்விநியோக உரிமம்பெற்ற ஒருவரினால் எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவை மாற்றுகின்ற; அல்லது

(ii) ஏதேனும் மானியின்மூலம் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை உரியமுறையில் பதிவு செய்வதிலிருந்து அம்மானியைத் தடுக்கின்ற,

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர்முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்துக்கு மற்றும் அத்தகைய தவறாக அமைகின்ற செயலின் அல்லது தவறுகையின் விளைவாக உரிமம் பெற்றவருக்கு ஏற்படும் இழப்பின் அல்லது சேதத்தின் பெறுமதியாகவுள்ள பணத்தொகையிலான மேலதிகமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அறவிடப்படும் அத்தகைய மேலதிகக் குற்றப்பணம், ஏதேனும் பணத்தொகை அத்தகைய உரிமம்பெற்றவரினால் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது உரிமம்பெற்றவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழான தவறொன்றுக்கு எவரேனும் ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுகின்றவிடத்து -

(i) மானியானது குற்றவழக்குத்தொடுக்கப்படுகின்ற ஆளின் கட்டுக்காப்பில் அல்லது அவரது கட்டுப் பாட்டின்கீழ் இருந்தது என்ற; அத்துடன்

(ii) அத்தகைய மானியின்மீது பதிவுசெய்யப்பட்ட மின்சாரத்தின் அளவின் பதிவை மாற்றுவதனை விளைவித்து அதன்மூலம் அத்தகைய பாவனையை உரியமுறையில் பதிவுசெய்வதிலிருந்து மானியைத் தடுத்து மானியுடன் கையிடப்பட்டுள்ளது என்ற தெளிவான எண்பிப்பு உள்ளது என்ற,

பயன்பட மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால் வழங்கப்படும் ஒரு சான்றிதழ், சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் அடங்கியுள்ள கருமங்களின் முதற்றோற்ற வளவிலான எண்பிப்பாக இருத்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறைப் புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றா

ரென்பதுடன் மூலத்தவறுக்கு ஏற்பாடுசெய்யப்படுகின்றவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். பிரதான தவறாளராகவோ அல்லது உடந்தையாளராகவோ அதே தவறைப் புரிந்துள்ளமைக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய இழப்பின் அல்லது சேதத்தின் பெறுமதி அத்தகைய ஆட்களிடையே பங்கிடப்படலாம் என்பதுடன் அவ்வாறு பங்கிடப்பட்ட தொகை, குற்றப்பண மொன்றாக அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரின்மீதும் விதிக் கப்படுதலும் வேண்டும்.

(4) உரிமம்பெற்றவரினால் வழங்கப்படும் சான்றிதழொன்று, முரணாக சான்று இல்லாதபோது அத்தகைய இழப்பின் அல்லது சேதத்தின் பெறுமதிக்கான எண்பிப்பாகப் பெறப்படுதல் வேண்டும். ஏதேனும் உடன்படிக்கை இல்லாதபோது, உரிமம்பெற்றவர், உரிமத்தில் ஏற்பாடுசெய்யப்படும் ஏதேனும் விதிப்பனவுமுறைக்கிணங்க எவரேனும் பாவனையாளருக்கு வழங்கப்படும் மின்வலுவுக்காக விதிப்பனவு செய்யலாம்.

(5) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டபின்னர் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப் பணமொன்று விதிக்கப்படுதல் வேண்டும்.

(6) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படு கின்றவிடத்து, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்ட ஆளின் வளவுகளுக்கான மின்சார வழங்கலை நிறுத்தலாம் என்பதுடன் தவறானது எந்த மானி தொடர்பில் புரியப்பட்டதோ அந்த மானியையும் அகற்றலாம்; அத்துடன் அதன்பின்னர், ஒழுங்குபடுத்துநர் அதனை கையாண்டுதீர்ப்பதற்கு உரிமம்பெற்றவருக்கு அதிகாரமளிக்கும் வரை அதனைக் காப்பான கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம். எவ்வாறாயினும் செலுத்தப்படாத வருமதிகள் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரினால்

அறிவிடப்படுகின்ற பட்சத்தில், மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர், நியாயமான காலப்பகுதியொன்றினுள் நிறுத்தப்பட்ட மின்சார வழங்குகையை மீளளித்தல் வேண்டும்.

(7) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான தவறொன்று அச்சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாக இருத்தல் வேண்டும்.

பொதுவான தண்டம்

**43.** (1) இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் ஏதேனும் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிவான் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தவறுக்குக் குறித்துரைக்கப்படும் ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கு மேலதிகமாக அல்லது அதற்குப் பதிலாக அத்தவறு புரியப்படுவதில் சம்பந்தப்பட்ட ஏதேனும் நிறுவுகை அல்லது வேறு உபகரணம், கட்டளையொன்றிற் குறித் துரைக்கப்படும் ஒரு தேதிக்கு முன்னர் கழற்றப்படுதலும் அகற்றப்படுதலும் வேண்டுமெனப் பணிக்கின்ற அத்தகைய கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) ஒழுங்குபடுத்துநரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் அலுவலர் ஒருவர், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக நீதிவான் நீதிமன்றமொன்றில் வழக்குநடவடிக்கையைத் தொடுக்கலாம்.

(4) ஒழுங்குபடுத்துநரின் எழுத்திலான வலுவளிப்புடன் தவிர இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

ஆட்கள் குழுக்களினாலான தவறுகள்

**44.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது,-

(அ) அவ்வாட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும்; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழுவானது பங்காண்மையொன்றாகவிருப்பின், அப்பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய பங்காண்மையின் பங்காளர் ஒருவர் அத்தகைய தவறானது அத்தகைய ஆளின் அறிவின்றிப் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அவசியமாகவிருந்த உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் அத்தகைய ஆள் பயன்படுத்தினாரென அத்தகைய ஆள் எண்பித்தால் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

உட்பிரவேசம், சோதனை மற்றும் தேடுதலுக்கான தத்துவங்கள்

**45.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான செயற்பாடொன்று எவையேனும் வளவுகளின்மீது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றதென நம்புவதற்கு ஒழுங்குபடுத்துநருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, ஒழுங்குபடுத்துநர் அல்லது ஒழுங்குபடுத்துநரின் சார்பில் செயலாற்றுகின்ற எவரேனும் அலுவலர், நீதிவானொருவரிடமிருந்து ஆணைப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டதன்மீதும் மற்றும் தேவைப்படின் அதனைக் காண்பிப்பதன்மீதும்-

(அ) ஏதேனும் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகம் அதன் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற வளவுகளினுள் அல்லது வேறெவையேனும் சம்பந்தப்பட்ட வளவுகளினுள் நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும்

உட்பிரவேசிக்கலாம், அவற்றைச் சோதனையிடலாம் மற்றும் தேடலாம்; அத்துடன்

(ஆ) அந்த ஒழுங்குபடுத்தப்பட்ட உருவகத்தின் எவையேனும் இயைபான பதிவேடுகளை அல்லது ஆவணங்களைச் சோதனையிடலாம், அவற்றின் பிரதிகளை எடுக்கலாம் அல்லது அவற்றைக் கைப்பற்றித் தடுத்துவைக்கலாம்.

(2) ஒழுங்குபடுத்துநர் அல்லது ஒழுங்குபடுத்துநரின் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரொருவர் இப்பிரிவின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்

**46.** (1) மின்சாரத்தின் வழங்குகை அல்லது பாவனை சம்பந்தமான ஏதேனும் பிணக்கு-

(அ) ஓர் உரிமம்பெற்றவருக்கும் ஒரு காப்புவரி வாடிக்கையாளருக்கும்;

(ஆ) ஓர் உரிமம்பெற்றவருக்கும் இன்னோர் உரிமம் பெற்றவருக்கும்;

(இ) ஓர் உரிமம்பெற்றவருக்கும் வேறெவரேனும் பாதிக்கப்பட்ட திறத்தவருக்கும்;

(ஈ) மின்மானிகளின் பாவனைக்கும்; அல்லது

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி காப்புவரிகளின் கொடுப்பனவுக்கும்,

இடையே அல்லது அதுதொடர்பாக எழுகின்றவிடத்தும், அத்தகைய திறத்தவர்கள் அதனைத் தீர்த்துவைப்பதற்கு இயலாதிருந்துள்ளவிடத்தும், இன்னலுற்ற எவரேனுமாள், பிணக்கிலுள்ள கருமம் ஒழுங்குபடுத்துநரினால் கேட்டுத் தீர்மானிக்கப்பட வேண்டுமெனக் கோரி எழுத்திலான கோரிக்கையொன்றை ஒழுங்குபடுத்துநருக்கு உடனடியாக அனுப்பிவைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கோரிக்கையொன்றைப் பெற்றதன்மேல், ஒழுங்குபடுத்துநர், பிணக்கானது ஒன்றில் நீதிமன்றங்களினால் அல்லது நடுத்தீர்ப்பினூடாகத் தீர்மானிக்கப்படுவது கூடுதலாகத் தோதானதாகவுள்ளதெனத் தீர்மானித்தாலொழிய, ஒழுங்குபடுத்துநர் மத்தியஸ்தஞ்செய்து அப்பிணக்கைத் தீர்த்துவைத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பிணக்கை மத்தியஸ்தஞ்செய்து தீர்த்துவைப்பதில், ஒழுங்குபடுத்துநர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதுமிடத்து, ஒழுங்குபடுத்துநரினால் நியமிக்கப்பட்ட மூன்றாட்களைக்கொண்ட மத்தியஸ்தர்கள் குழாமொன்றுக்குத் தீர்த்துவைக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்; அவர்களுள் ஒருவர், அத்தகைய குழாத்தின் தவிசாளராகப் பணியாற்றவேண்டிய ஒன்றில் ஒழுங்குபடுத்துநரின் உறுப்பின ரொருவராக அல்லது ஒழுங்குபடுத்துநரின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராக அல்லது ஒரு பகிரங்க அலுவலராக விருத்தல் வேண்டும். மத்தியஸ்தர்கள் குழாம் அதற்கு ஆற்றுப் படுத்தப்பட்ட பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கும் பிணக்குக்கான திறத்தவர்களிடையே தீர்வொன்றைச் செய்வதற்கும் ஒழுங்கு படுத்துநரினால் குறித்துரைக்கப்படவேண்டிய காலத்தினுள் அதன் கலந்தாராய்வுகளை நிறைவுசெய்வதற்கும் ஒவ்வொரு முயற்சியை யும் எடுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஏதேனும் பிணக்கைத் தீர்மானிப்பதில் பின்பற்றப்படவேண்டிய செயல்முறையும் நடவடிக்கைமுறையும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் ஒழுங்குபடுத்துநரினாலான தீர்மான மொன்று–

(அ) ஒழுங்குபடுத்துநர் தோதானதெனக் கருதுகின்ற வாறாக ஒழுங்குபடுத்துநரினால் உறப்பட்ட செலவுதொகைகள் அல்லது செலவுகள் தொடர்பிலான பணத்தொகையொன்றை இரு திறத்தவர்களுள் ஒரு திறத்தவர் செலுத்துவதனைத் தேவைப்படுத்துகின்ற ஏற்பாடுகளுட்பட, அத்தகைய இடைநேர்விளைவான, குறைநிரப்புவனவான மற்றும் விளைவாந்தன்மை யினவான ஏற்பாடுகளை உள்ளடக்கலாம்; அத்துடன்

(ஆ) இறுதியானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒழுங்குபடுத்து நரினால் உறப்பட்ட செலவுதொகைகள் அல்லது செலவுகள்பற்றிய அத்தகைய ஏற்பாடுகளை அது உள்ளடக்கும் அளவுவரை, அது பணக்கொடுப் பனவுக்காக அந்நீதிமன்றத்தினால் பதியப்பட்ட ஒரு தீர்வை என்றாற்போன்று, வலுவுறுத்தப்படற்பால தாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான தீர்மானத்தில் ஒழுங்குபடுத்துநர், செலவுதொகைகள் மற்றும் செலவுகள்பற்றிய ஏதேனும் ஏற்பாட்டை உள்ளடக்குமிடத்து, ஒழுங்குபடுத்துநர், திறத்தவர்களின் நடத்தையையும் மற்றும் வழிவகைகளையும் வேறெவையேனும் இயைபான சூழ்நிலைகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

*பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் ஏற்புடைய தாதலாகாது*

**47.** (1) இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, இச்சட்டத்தினால் அல்லது இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் தொடர்பாக, அச்சட்டத்தினால் அவ்வதிகார சபைக்கு அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகித்தலாகாது.

(2) ஒழுங்குபடுத்துநர், அவ்வாறு செய்வதற்கான தேவை எழுகின்ற இடங்களில் எல்லாம் மற்றும் பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக இச்சட்டத்திலும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்திலும் குறிப்பிட்ட ஏற்பாடுகள் இல்லாதபோதும், அதற்கு இயைபாகவுள்ளவாறாக 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் அத்தகையவற்றைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், ஒழுங்குபடுத்துநரினால் அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகைக்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*சிரமங்களை அகற்றுதல்*

**48.** (1) இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, ஒழுங்குவிதி அல்லது விதி அல்லது அறிவிப்பின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் ஏதேனும் சிரமம் ஏற்படின், குறித்த ஏதேனும் சிரமத்தை ஒழிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறானவையும் அல்லது உசிதமாகக்கூடியவாறானவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராதவையுமான அத்தகைய நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்கலாம்.

(2) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஏதேனும் சிரமத்தை அகற்றும் நோக்கத்துக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறித்துரைக்கலாம்.

**49.** (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் விதிகள் ஆக்கப்படலாம். விதிகள்

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன் கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்குவருதலும் வேண்டும்.

**50.** (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு மென்பதுடன் 1 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை கள்தவிர, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். கட்டளைகள்

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், அத்தகைய வெளியீட்டி லிருந்து தொண்ணூறு நாட்களினுள் பாராளுமன்றத் தீர்மான மொன்றின்மூலம், அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை, தீர்மானத் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் அதன்கீழ் முறையாக செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**51.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட் டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத்தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்றுமாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொரணப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XIV

### நீக்கங்களும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்

**52.** (1) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக, 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டம் நீக்கப்பட்டதாதல் வேண்டும். 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்- *நீக்கங்களும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்*

(அ) நீக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையுமான எல்லா ஒழுங்குவிதிகளும், அத்தகைய ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு, அத்தகைய ஒழுங்குவிதிகளை மாற்றீடு செய்வதற்கு இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் தொடர்ந்தும் நடைமுறையிலிருத்தல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ள இலங்கை மின்சாரச் சபையின் ஊக்குவிப்புத்திட்டங்கள், நடத்தைக் கோவைகள் மற்றும் ஒழுக்காற்றுக் கோவைகள், அத்தகைய ஊக்குவிப்புத் திட்டங்கள், நடத்தைக்கோவைகள் மற்றும் ஒழுக்காற்றுக் கோவைகள் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, அடுத்துறும் கம்பெனிகளின் சேவையில் தொடர்வதற்கு விருப்புத் தெரிவித்துள்ள இலங்கை மின்சாரச்சபை ஊழியர்களின் பதவியுயர்வுகளும் நடத்தையும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் தொடர்பாக எழுகின்ற ஏதேனும் கருமம் அல்லது கேள்வி தொடர்பில், ஊக்குவிப்புத்திட்டங்கள், நடத்தைக் கோவைகள் மற்றும் ஒழுக்காற்றுக் கோவைகள், அத்தகைய ஊழியர்களின் பதவியுயர்வுகளையும் நடத்தையையும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கு அடுத்துறும் கம்பெனிகளினால் கடைப்பிடிக்கப்படும்வரை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்;

(இ) நியமிக்கப்பட்ட தேதிக்குபின்னர், எந்த மின்சாரத் தொழிலில் அல்லது அதுசம்பந்தமாக இச்சட்டத்தில் ஏற்பாடுகள் அல்லது பயனுள்ள ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லையோ அந்த மின்சாரத் தொழிலில் அல்லது அதுசம்பந்தமாக எழுகின்ற ஏதேனும் கருமம் அல்லது பிரச்சினை எஞ்சியுள்ளவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் அத்தகையவை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் தொடர்ந்தும் நடைமுறையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காக இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படும்வரை, அத்தகைய ஏதேனும் கருமம் அல்லது பிரச்சினை தொடர்பில் மட்டுமே, வேறெதுவும் தொடர்பிலல்ல, நடைமுறையில் தொடர்ந்திருத்தலும் ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்;

(ஈ) இலங்கை மின்சாரச்சபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையும் எத்தன்மையினவையுமான எல்லா வழக்குகளும் அல்லது வழக்குநடவடிக்கைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அந்தந்த அடுத்துறுநர் கம்பெனியினால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்துநடாத்தவும் படலாம்;

(உ) நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் இலங்கை மின்சாரச் சபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகச் செய்யப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின் எல்லாத் தீர்ப்புக்களும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், அத்தகைய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் தொடர்ந்து வலுவிலுள்ளனவாகக் கருதப்படுதலும் இச்சட்டத்தின் நியதிகளின்படி அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்;

(ஊ) தற்போது நடைமுறையிலுள்ள ஏதேனும் அறிவிப்பில், ஒப்பந்தத்தில், சாதனத்தில், பதிவேட்டில், பங்குச் சான்றிதழில், ஆவணத்தில், உறுதியில், முறியில், உடன்படிக்கையில், உத்தரவாதத்தில், அற்றோணித் தத்துவத்தில், சட்டப் பிரதிநிதித்துவத்தின் அளிப்பில் அல்லது எத்தன்மையினதுமான வேறு ஏதேனும் சாதனத்தில் உள்ள இலங்கை மின்சாரச்சபைக்கான ஏதேனும் குறிப்பீடு செல்லுபடியானதாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி அதற்கிணங்கத் தொடர்ந்து வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டம் நீக்கப்பட்டதாதல் வேண்டும். 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும்,-

(அ) 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப் பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையுமான எல்லா உரிமங்களும் கருதப்பட்ட உரிமங்களும், அத்தகைய உரிமங்கள் பின்வரும் செயற்பாடுகளுள் ஏதேனுமொன்றுக்கு அதிகாரமளிக்கும் அளவுவரை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும், அத்தகைய தேதியிலிருந்து ஒன்பது மாதகாலப் பகுதிக்குச் செல்லுபடியானவையாகவும் பயனுள்ளவையாகவும் தொடர்ந்திருத்தல் வேண்டும்:-

(i) மின்பிறப்பாக்கத்துக்காக வழங்கப்பட்ட எல்லா மின்பிறப்பாக்கல் உரிமங்களும் கருதப்பட்ட மின்பிறப்பாக்கல் உரிமங்களும்;

(ii) (இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பு எனவும் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய மின்கடத்துகை வலையமைப்பின் தொழிற்பாட்டுக்காகவும், பேணுகைக்காகவும் எதிர்காலத் திட்டமிடுகைக் காகவும் அபிவிருத்திக்காகவும் இச்சட்டத்தின் 15 ஆம் மற்றும் 16 ஆம் பிரிவுகளின்கீழ் நிரற் படுத்தப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளனவாகக் கருதப்பட்ட தேசிய மின்கடத்துகை வலை யமைப்புச் சேவைவழங்குநர் உரிமம்;

(iii) பாவனையாளர்களுக்கு அத்துடன் அல்லது இலங்கை மின்சாரச்சபையின் விநியோகிப்புப் பிரிவுகளின் அதிகாரமளிக்கப்பட்ட இடப்

பரப்புகளின் எவையேனும் வளவுகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்காக அத்துடன் அல்லது மின்சாரத்தை வழங்குவதற்காக அளிக்கப்பட்ட மின்விநியோகிப்பு உரிமங்கள்;

(iv) மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களுக்கும் வேறெவரேனும் வாடிக்கையாளர்களுக்கும் பேரளவிலான மின்சாரத்தைப் பெறுவதற் காகவும் விற்பனைசெய்வதற்காகவும் 10 ஆம் பிரிவின்கீழ் நிரற்படுத்தப்பட்ட செயற்பாடு களைக் கொண்டுநடாத்துவதற்கு வழங்கப் பட்டுள்ளதாகக் கருதப்பட்ட தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமம்;

(v) பாவனையாளர்களுக்கு அல்லது லங்கா மின்சாரக் கம்பெனி (பிறைவேட்) லிமிட்டெட் டின் அதிகாரமளிக்கப்பட்ட இடப்பரப்பிலுள்ள எவையேனும் வளவுகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்காக அத்துடன் அல்லது வழங்குவதற்காக லங்கா மின்சாரக் கம்பெனி (பிறைவேட்) லிமிடெட்டுக்கு வழங்கப்பட்ட மின்விநியோகிப்பு உரிமம்:

ஆயின், *(2)* ஆம் உட்பிரிவின் *(அ)* என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒன்பது மாதக் காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் ஆறு மாதங்களுக்குக் குறையாமல், எல்லா உரிமம் பெற்றோரும் கருதப்பட்ட உரிமம் பெற்றோரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உரிமங்களைப் பெற்றுக் கொள்வ தற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்குத் தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்;

ஆயின், மேலும், இலங்கை மின்சாரச் சபை தவிர்ந்த உருவகங்களுக்கு வழங்கப்பட்ட எல்லா மின்பிறப்பாக்கல் உரிமங்களும் லங்கா மின்சாரக் கம்பெனி (பிறைவேட்)

லிமிடெட்டுக்கு வழங்கப்பட்ட விநியோகிப்பு உரிமமும் அத்தகைய உரிமங்களின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும். இலங்கை மின்சாரச் சபை, தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் மற்றும் விநியோகிப்புக் கம்பெனிகளினால் தற்போது பொறுப்பேற்கப்பட்ட மின்பிறப்பாக்கச் செயற்பாடுகளைக் கையேற்பதற்கு அமைக்கப்பட வேண்டிய அடுத்துறுநர் கம்பெனிகள், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒன்பது மாத காலப்பகுதியொன்றிற்கும் ஆறு மாதங்களுக்கு முன்னரும் இச்சட்டத்தின்கீழ் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் பொறுப்பேற்பதற்கு உரிமமளிக்கப் பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும். இவ்வுருவகங்கள் இச்சட்டத்தின்கீழ் புதிய உரிமங்களுக்காக விண்ணப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நீக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ள வையுமான எல்லா ஒழுங்குவிதிகளும், அத்தகைய தேதியிலிருந்து பயனுறுவதாகத் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு, இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரை தொடர்ந்திருப்பன வாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) காணிப்பதிவாளர், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச்சபைச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் நடைமுறையிலிருப்பதன் பயனைக்கொண்டு மின்சாரப் பொறுப்புமுயற்சித் திணைக்களத்திலிருந்தும்

உள்ளூரதிகாரசபைகளிலிருந்தும் இலங்கை மின்சாரச்சபைக்குக் கைமாற்றப்பட்டுள்ள எல்லாக் காணிகளையும், இலங்கை மின்சாரச் சபையின் பொது முகாமையாளரின் உடைமை யினுள்ளும் கட்டுப்பாட்டினுள்ளும் இருக்கின்றவாறாக அத்தகைய கைமாற்றம் தொடர்பிலான தகவலினதும் ஆவணமுறையான எண்பிப்பினதும் அடிப்படையில், இலங்கை மின்சாரச்சபையின் பொது முகாமையாளரின் கைப்பட வழங்கப்பட்ட அத்தகைய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், இலங்கை மின்சாரச் சபை, ஒரு சான்றிதழுக்கு இணைக்கப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட எல்லாக் காணிகளினதும் (எல்லைக்கோடு களுடனும் எல்லைகளுடனும்) சொந்தக்காரராக உள்ளதெனச் சான்றுப்படுத்தி பதிவுசெய்வதற்குத் தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதாமாண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகளினது நடைமுறையின் பயனைக்கொண்டு, மின்சாரப் பொறுப்புமுயற்சிகள் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையினால் சொந்தமாக வைத்திருக்கப் பட்டு உடைமைகொள்ளப்பட்ட, எல்லாச் சொத்துக்களும் காணிகளுமுட்பட்ட எல்லா மின்சாரப் பொறுப்புமுயற்சிகளையும் கையேற்ற தேதியிலிருந்து சான்றிதழுக்கு இணைக்கப்பட்ட அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரராகவும் இருப்பாட்சியாளராகவும் இலங்கை மின்சாரச்சபை வந்ததென்ற மற்றும் எல்லா மின்சாரப் பொறுப்புமுயற்சிகளையும் இலங்கை மின்சாரச் சபை கையேற்ற நாளிலிருந்து சபையானது எவையேனும் வில்லங்கங்களின்றி இலங்கை மின்சாரச்சபின் ஆதனமாக அக்காணிகளினதும் சொத்துக்களினதும் எல்லா நன்மைகளையும் துய்த்ததென்ற பொருள்பட இலங்கை மின்சாரச் சபையின் பொது முகாமையாளரின் கைப்பட சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கத்துக்காக “காணிப் பதிவாளர்” என்ற பதம், (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவரும் அத்தகைய காணிகள்

அமைந்துள்ள மாவட்டங்களின்மீது அல்லது பிரிவுகளின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ளவருமான காணிப்பதிவாளர் என்று பொருளாகும்.

**53.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய- பொருள்கோடல்

"மேலதிக மின்கடத்துகை உரிமம்பெற்றோர்" என்பது, 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மேலதிக மின்கடத்துகை உரிமங்கள் வழங்கப்படும் கம்பெனிகள் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழான உரிமத்தினால் அல்லது விலக்களிப்பினால் அதிகார மளிக்கப்பட்ட என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட இடப்பரப்பு" என்பது, மின்சாரத்தைக் கடத்துவதற்கு அல்லது விநியோகித்து வழங்குவதற்கு உரிமமொன்றினால் அதிகாரமளிக்கப் பட்ட ஓராள் தொடர்பாக உரிமத்தில் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பு என்று பொருளாகும்;

"பேரளவிலான விற்பனைகள்" என்பது, மின்சாரத்தின் விற்பனை தொடர்பாக, மின்விநியோகிப்பு உரிமம் பெற்றவர்களுக்கும், இயைபான உரிமத்தில் அடையாளங் காணப்படக்கூடியவாறாக, மின்கடத்துகை வலை யமைப்புடன் தொடுக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் மின்சாரத்தின் பேரளவிலான விற்பனை என்று பொருளாகும்;

"பேரளவிலான வழங்குகைக் கணக்கு" என்பது, மின்சாரத்தின் பேரளவிலான விற்பனைகளையும் மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றோரிடமிருந்து மின்சாரத்தின் கொள்வனவையும் பதிவதற்குத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் பேணப்பட்ட கணக்கு என்று பொருளாகும்;

"கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதி" என்பது, பிரதானமாக எவரேனுமாளின் சொந்தப் பாவனைக்காக மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்வதற்கு அத்தகைய ஆளினால் நிறுவப்பட்ட ஒரு மின்சக்திப் பொறித்தொகுதி என்று பொருளாகும் ஆனால் விஞ்சுதலான ஏதேனும் மின்சாரம் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் நியதிகளின்படி மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களுக்கு அல்லது தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு அத்தகைய ஆளினால் விற்பனைசெய்யப்படலாம்;

"இலங்கை மின்சாரச்சபை" என்பது, 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரச்சபை என்று பொருளாகும்;

''தொடுத்தல்'' என்பது, எவையேனும் வளவுகள் தொடர்பாக, பாவனையாளரொருவரை மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவரின் மின்விநியோகிப்பு இணைப்புக்குத் தொடுத்தல் என்று பொருளாகுமென்பதுடன் ''தொடுப்பு'' என்ற சொல்லமைப்பு அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்;

''பாவனையாளர்'' என்பது, ஓர் உரிமம்பெற்றவரினால் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள வேறெவரேனுமாளினால் தனிப்பட்ட பாவனைக்காக மின்சாரம் வழங்கப்படுகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன் மின்சாரத்தைப் பெறுகின்ற நோக்கத்துக்காக எந்த ஆளின் வளவுகள் அப்போதைக்குத் தொடுக்கப்படுகின்றனவோ அந்த எவரேனுமாளையும் உள்ளடக்கும்; அத்துடன் எவரேனும் எதிர்காலப் பாவனையாளரையும் உள்ளடக்கும்;

‘‘ஒப்படைக்கப்பட்ட மின்கடத்துகை இணைப்பு’’ என்பது, கட்டுப்பட்ட மின்பிறப்பாக்கஞ்செய்கின்ற ஒரு பொறித் தொகுதியின் அல்லது மின்பிறப்பாக்கல் நிலையத்தின் மின்இணைப்புக்களை அல்லது மின்சாரப் பொறித் தொகுதிகளை, விடயத்துக்கேற்ப, ஏதேனும் மின்கடத்துகை இணைப்புடன் அல்லது உபநிலையத்துடன் தொடுக்கும் நோக்கத்துக்காகத் தேவைப்படும் ஏதேனும் மின்வழங்கல் இணைப்பு அல்லது இடத்திலிருந்து இடத்துக்கான தொடுப்பு என்று பொருளாகும்;

‘‘அனுப்புகை’’ என்பது, தேசிய முறைமைத் தொழிற் படுத்துநரினால் ஒவ்வொரு மின்சக்திப் பொறித் தொகுதியின்மூலமும் உற்பத்தி செய்யப்படவேண்டிய மின்சக்தி வெளியீடுபற்றி மின்சக்திப் பொறித்தொகுதித் தொழிற்படுத்துநர்களுக்கு அறிவித்தல் என்று பொருளாகும்;

‘‘விநியோகித்தல்’’ என்பது, மின்சாரம் தொடர்பாக, குறைவான மின்வலியளவு இணைப்புக்களையும் மின்சாரப் பொறித்தொகுதியையும் கொண்டுள்ளதும் எவையேனும் வளவுகளுக்கு அல்லது வேறேதேனும் மின்விநியோகிப்பு முறைமைக்கு மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றதுமான வொரு முறைமை என்று பொருளாகும் என்பதுடன் ‘‘மின்விநியோகிப்பு’’ மற்றும் ‘‘மின்விநியோகிப்பு முறைமை’’ என்ற சொல்லமைப்புக்கள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்;

‘‘மின்விநியோகிப்பு இணைப்பு’’ என்பது, ஒரு மின் விநியோகிப்பு உரிமம்பெற்றவர் தொடர்பாக, எவையேனும் வளவுகளுக்கு மின்சாரத்தை வழங்கும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மின்விநி யோகப்பு உரிமம்பெற்றவரின் அதிகாரமளிக்கப்பட்ட இடப்பரப்பில் உள்ள ஏதேனும் மின்விநியோகிப்பு இணைப்பு என்று பொருளாகும்;

"மின்விநியோகிப்புக் காப்புவரி" என்பது, 29 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழான பாவனையாளர் சேவைகளுட்பட, மின்விநியோகிப்பு வலையமைப்பைப் பேணித் தொழிற்படுத்துவதற்கான நியாயமான ஆகுசெலவை அறவிடுவதற்காக ஒழுங்குபடுத்துநரினால் நிர்ணயிக்கப்பட்ட காப்புவரி என்று பொருளாகும்;

"மின்விநியோகிப்பு மின்வலியளவு" என்பது, 33 கிலோ வோட்டை அல்லது ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய மின்வலியளவை விஞ்சாத ஏதேனும் மின்வலியளவு என்று பொருளாகும்;

"மின்சாரப் பொறித்தொகுதி" என்பது, மின்சாரத்தின் பிறப்பாக்கம், கடத்துகை, விநியோகிப்பு அல்லது வழங்குகைக்காக அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி, சாதனம் அல்லது துணைப்பொருள் என்று பொருளாகும் என்பதுடன் ஏதேனும் மின்இணைப்பை, எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவை நிச்சயிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் மானியை அல்லது ஒரு பாவனையாளரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள ஏதேனும் மின்சாரத் துணைப் பொருளை உள்ளடக்காது;

"மின்சார மின்சக்தி முறைமை" என்பது, மின்பிறப்பாக்கியிலிருந்து பாவனை இடப்பரப்புகளுக்கு அல்லது அருகாமையிலுள்ள மின்சார மின்சக்தி முறைமைகளுக்கு மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்து இடம்பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மின்பிறப்பாக்கிகள் (அதாவது மின்சக்திப் பொறித்தொகுதிகள்), மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு இணைப்புக்கள், சாதனங்கள், மின்னோட்டங்கள், மற்றும் மின்மாற்றிகளின் இணைப்பு என்று பொருளாகும்;

"மின்இணைப்பு" என்பது, நிலத்தின்கீழ் அல்லது நிலத்தின் மேற்பரப்பில் இடப்பட்டதும், ஏதேனும் நோக்கத்துக்காக மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தப்

பட்டதுமான ஏதேனும் இணைப்பு என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் இணைப்பு எந்தக் கட்டமைப்பில், கம்பத்தில், அல்லது வேறு பொருளில், அதன்மீது, அதன்மூலம் அல்லது அதிலிருந்து ஆதாரப் படுத்தப்படுகின்றதோ, கொண்டுசெல்லப்படுகின்றதோ அல்லது தொங்கவிடப்படுகின்றதோ அக்கட்டமைப்பு, கம்பம் அல்லது வேறு பொருள், மின்சாரத்தைக் கொண்டுசெல்லும் நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் இணைப்புடன் தொடுக்கப்பட்ட ஏதேனும் துணைக்கருவி, மற்றும் அத்தகைய ஏதேனும் இணைப்பைச் சுற்றியுள்ள அல்லது ஆதாரப்படுத்துகின்ற அல்லது அதற்கு நெருங்கிய அண்மையில் நிறுவப்பட்ட (அதன், மேலுறை, மின்பாயாமல் காப்பிடும்கருவி அல்லது மேற்படலம் உட்பட) அத்தகைய ஏதேனும் கம்பி, கம்பிவடம், குழல், குழாய் அல்லது வேறு ஒத்த பொருள் என்பன உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், அத்தகைய ஏதேனும் இணைப்புக்கான ஆதாரமாகப் பயன்படுத்தப் பட்ட எவையேனும் சாதனங்களையும் உள்ளடக்கும்;

“மின் வியாபாரஞ் செய்தல்” என்பது, மீள்விற்பனைக்காக மின்சாரத்தைக் கொள்வனவுசெய்தல் என்று பொருளாகும் என்பதுடன் “வியாபாரம்” என்னும் சொல்லமைப்பு அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

“மின்சார வழங்கல் கோவை” என்பது, எல்லா உரிமம் பெற்றவர்களினாலும் இணங்கியொழுகப்படவேண்டிய விதித்துரைக்கப்பட்ட நியமங்களின் கோவை எனப் பொருளாகும்;

“அடக்கப்பட்ட மின்பிறப்பாக்கி” என்பது, மின்விநியோகிப்பு வலையமைப்புக்குத் தொடுக்கப்பட்டவொரு மின்பிறப் பாக்கற் பொறித்தொகுதி என்று பொருளாகும்;

“வலுவுறுத்தற் கட்டளை” என்பது, இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் நிபந்தனைகளின்படி ஆக்கப்பட்ட கட்டளையொன்று என்று பொருளாகும்;

''உள்ளூட்டுக் காப்புவரி'' என்பது, அடக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகளிலிருந்தான மின்சக்திக் கொள்வனவுக் காப்புவரி என்று பொருளாகும்;

''மின்பிறப்பாக்கல் நிலையம்'' என்பது, அத்தகைய மின்பிறப்பாக்கல் நிலையம் நிறுவப்பட்டுள்ள இடம், மற்றும் மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்யும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடம், பொறித்தொகுதி, மின்மாற்றி, மின்தொடர்பிணைப்புப் பொறி, மின்தொடர்பிணைப்பு, கம்பிவடங்கள் அல்லது வேறு இணைந்துள்ள சாதனங்கள் எவையேனுமிருப்பின் அவை, மற்றும் ஒரு மின்பிறப்பாக்கல் நிலையத்தின் தொழிற்பாட்டுப் பணியாட்டொகுதியினருக்கான வீட்டுவசதிக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடம் என்பனவுட்பட மேற்கூறப்பட்ட நோக்கத்துக்கான ஏதேனும் செயலிடம் என்று பொருளாகும் என்பதுடன் நீர்மின்சக்திமூலம் மின்சாரம் பிறப்பாக்கஞ்செய்யப் படுமிடத்து, மதகுகள், ஏரியில் ஆறு வந்துகலக்கும் பகுதி மற்றும் நீரோட்டத்தின் வேகமமைந்த பின்வருபகுதி வேலைகள், பிரதான மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற தேக்கங்கள், அணைக்கட்டுகள் மற்றும் வேறு இயக்கப்படுகின்ற வேலைகள் என்பவற்றையும் உள்ளடக்கும், ஆனால் ஏதேனும் உபநிலையத்தை உள்ளடக்கமாட்டாது;

''மின்பிறப்பாக்குநர்'' என்பது, ஒரு மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர் அல்லது ஒரு மின்பிறப்பாக்கல் உரிமத்தைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஓராள் என்று பொருளாகும்;

''மின்கட்டமைப்பு'' என்பது, இடைத்தொடுப்புள்ள மின்கடத்துகை இணைப்புக்கள், உபநிலையங்கள் மற்றும் மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதிகளின் உயர் மின்வலியளவு உறுதிப்பாட்டு முறைமை என்று பொருளாகும்;

"மின்கட்டமைப்புக் கோவை" என்பது, மின்சக்தி முறைமையின் திட்டமிடுகைக்கான தொழிற்பாட்டு நடவடிக்கைமுறைகளும் நியமங்களும், மின்பிறப்பாக்கிகளை அட்டவணைப்படுத்தலும், மின்பிறப்பாக்கிகள், மின்கடத்துகைச் சாதனங்கள் மற்றும் தேசிய மின் கட்டமைப்புக்கான பாவனையாளர்களை இடைத் தொடுத்தலும், மின்சக்தி முறைமையின் தொழிற்பாடும் அத்துடன் மின்சக்திக் கைமாற்றல்களை மானியள விடுதலும் என்று பொருளாகும்;

"உயர் மின்வலிய இணைப்பு" என்பது, 33 கிலோவோட்டை விஞ்சுகின்ற பெயரளவிலான மின்வலியளவைக்கொண்ட அல்லது காலத்துக்குக்காலம் ஒழுங்குபடுத்துநரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெயரள விலான மின்வலியளவைக்கொண்ட ஒரு மின்இணைப்பு அல்லது கம்பிவடம் என்று பொருளாகும்;

''சுதேச மின்வலு வளங்கள்'' என்பது, உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட புதைபடிவ எரிபொருள் மின்வலு, புதுப்பிக்கப்படத்தக்க மின்வலுவிலிருந்து உற்பத்திசெய்யப் பட்ட மின்வலு போன்ற இலங்கையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள ஏதேனும் வடிவத்திலான மின்வலு என்று பொருளாகும் என்பதுடன் அவற்றின் வேறெவையேனும் வழிவந்தவைகளையும் உள்ளடக்கும் ஆனால் எவையேனும் இறக்குமதிசெய்யப்பட்ட புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்வலு உற்பத்திகளை உள்ளடக்காது;

''அக்கறை'' என்பது, பின்வரும் செயற்பாடுகளுள் எவற்றையும் கொண்டுநடாத்துகின்ற ஏதேனும் கம்பெனியில் அல்லது பொறுப்புமுயற்சியில் நேரடியான அல்லது நேரடியானதல்லாத ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறை என்று பொருளாகும்:-

(அ) மின்சாரத்தின் பிறப்பாக்கம், கடத்துகை, விநியோகிப்பு அல்லது வழங்குகை;

(ஆ) மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக எரி பொருளின் உற்பத்தி, தயாரிப்பு, விற்பனை அல்லது வழங்குகை;

(இ) மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்கான, கடத்துவதற்கான, விநியோகிப்பதற்கான, வழங்குவதற்கான அல்லது பயன்படுத்துவதற்கான எந்திரத்தொகுதி, பொறித்தொகுதி, சாதனங்கள், உபகரணங்கள் அல்லது பொருத்திகளின் இறக்குமதி, உற்பத்தி, விற்பனை, குத்தகை, வாடகை அல்லது வேறு வழங்குகை அல்லது அவற்றிலான கையாளுகை; அல்லது

(ஈ) ஏதேனும் கம்பெனிக்கு அல்லது பொறுப்பு முயற்சிக்குச் சட்ட, கணக்கியல் அல்லது வங்கித்தொழிற் சேவைகளின் வழங்குகை;

''லங்கா மின்சாரக் கம்பெனி (பிறைவேட்) லிமிடெட்'' என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட லங்கா மின்சாரக் கம்பெனி (பிறைவேட்) லிமிடெட் என்று பொருளாகும்;

''உரிமம்'' என்பது, இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட ஓர் உரிமம் என்று பொருளாகும் என்பதுடன் ''உரிமம்பெற்றவர்'' என்ற பதம், மின்சாரத்தைப் பிறப்பித்தல், கடத்துதல், விநியோகித்தல், வழங்குதல், வியாபாரஞ்செய்தல் அல்லது பெறுதல் சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக எந்த ஆளுக்கு இச்சட்டத்தின் நியதிகளின்படி உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாள் என்று பொருளாகும்;

''மின்இணைப்பு'' என்பது, மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட (அதன் மேலுறை அல்லது

மேற்படலம் உட்பட்ட) ஏதேனும் கம்பி, கம்பிவடம், குழாய், மின்ஊடுகடத்தி அல்லது வேறு ஒத்த பொருள் என்று பொருளாகும்;

“உள்ளூரதிகாரசபை” என்பது, ஒரு மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் மாநகரசபையினால், நகரசபை யினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப் பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகளுக்கு நேரொத்ததாகவுள்ள அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி மின்சாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

“தேசிய மின்கட்டமைப்பு” என்பது, 33 கிலோவோட்டுக் களுக்கு அதிகமான மின்வலியளவொன்றில் தொழிற் படுகின்றதும் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநரினாலும் மேலதிக மின்கடத்துகை உரிமம்பெற்றோரினாலும் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட மின்கடத்துகைச் சொத்துக்களைக் கொண்டுள்ளதுமான மின்கடத்துகை வலையமைப்பு என்று பொருளாகும்;

“தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர்” என்பது, இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி எவ்வாளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாள் அல்லது ஆட்கள் குழு என்று பொருளாகும்;

“தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர்” என்பது, தேசிய மின்கடத்துகை வலையமைப்பைத் தொழிற்படுத்துவதற்கான உரிமம் எந்த ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் குழு என்று பொருளாகும்;

“திறந்த அணுகுகை” என்பது, ஒழுங்குபடுத்துநரினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர்களிடமிருந்து நேரடியாக மின்சாரத்தைக் கொள்வனவுசெய்வதற்குத் தகவுடைய பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக மின்கடத்துகை வலையமைப்பை அல்லது மின்விநியோகிப்பு இணைப்புக்களை அல்லது இணைந்த செயலிடங்களைப் பயன்படுத்துவதற்கான ஓரங்காட்டா ஏற்பாடு என்று பொருளாகும். திறந்த அணுகுகை விதிப்பனவுகளின் கொடுப்பனவின்மேல், வலையமைப்புச் சொந்தக்காரர் அல்லது வேறெவரேனும் பயன்படுத்து நரைப்போன்று அதே நிபந்தனைகளின்மீது மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு வலையமைப்பை அணுகு வதற்காக மின்சாரம் வழங்குவதற்கு மூன்றாந்திறத்த வரான வழங்குநர்களுக்கு அது அனுமதியளிக்கின் றது;

“திறந்த அணுகுகை விதிப்பனவுகள்” என்பது, திறந்த அணுகுகைக்குத் தகவுடைய பாவனையாளர்களுக்குத் திறந்த அணுகுகை வழங்குவதற்காக ஒழுங்குபடுத்து நரினால் நிர்ணயிக்கப்பட்டவையும் மின்கடத்துகை மற்றும் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றவர்களினால் அறவிடப்பட்டவையுமான விதிப்பனவுகள் என்று பொருளாகும்;

“மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை” என்பது, மின்பிறப்பாக்கஞ்செய்கின்ற உரிமம்பெற்றவரினால் மின்சாரத்தின் விற்பனையை ஆளுகின்ற தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோர் அல்லது ஒரு பாவனையாளர் மற்றும்

ஒரு மின்பிறப்பாக்கஞ்செய்கின்ற உரிமம்பெற்றவர் என்போருக்கிடையேயான உடன்படிக்கை என்று பொருளாகும்;

“மின்சக்தி முறைமை” என்பது, மின்சாரத்தின் பிறப்பாக்கம், கடத்துகை, விநியோகிப்பு மற்றும் வழங்குகை என்பவற்றின் எல்லா அம்சங்களும் என்று பொருளாகும் என்பதுடன் பின்வருவனவற்றுள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ உள்ளடக்கும்; அதாவது:

(அ) மின்பிறப்பாக்கல் நிலையங்கள்;

(ஆ) மின்கடத்துகை இணைப்புக்கள்;

(இ) உபநிலையங்கள்;

(ஈ) பிணைக்கும் இணைப்புக்கள்;

(உ) சுமை அனுப்புகைச் செயற்பாடுகள்;

(ஊ) மின்விநியோகிப்புத் தலைப்பெருங் குழாய்கள்;

(எ) மின்சார வழங்குகை இணைப்புக்கள்;

(ஏ) மேந்தலை இணைப்புக்கள்;

(ஐ) சேவை இணைப்புக்கள்; அத்துடன்

(ஒ) வேலைகள்;

“மின்சக்தி விற்பனைகள் உடன்படிக்கை” என்பது, தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கும் மின்சாரத்தின் பேரளவிலான விற்பனையை ஆளுகின்ற மின்விநியோகிப்பு உரிமம் பெற்றோருக்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்து நருக்கும் இடையேயான உடன்படிக்கை என்று பொருளாகும்;

“வளவுகள்” என்பது, ஏதேனும் காணி, கட்டிடம் அல்லது கட்டமைப்பு என்று பொருளாகும்;

“விதித்துரைக்கப்பட்ட” என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

''பகிரங்கத் தனியார் பங்காண்மை'' என்பது, மூலதன முதலீடுகள் பொருளளவில் முதலீட்டாளரினால் பொறுக்கப்படுமிடத்து, மின்சாரம், மின்வலுக் களஞ்சியப் படுத்துகை, துணைநிலைச் சேவைகள் அல்லது மின்கடத்துகைச் சேவைகள் என்பவற்றை வழங்குவ தற்காக ஒரு முதலீட்டாளருடன் ஒரு நீண்டகால உடன் படிக்கையைச் செய்துகொள்ளுதல் என்று பொருளாகும்;

''பிராந்தியச் சந்தை'' என்பது, தெற்காசியப் பிராந்தி யத்தினுள் இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே தொழிற்படுகின்ற மின்சாரச் சந்தை என்று பொருளாகும்;

''பிராந்திய மின்கடத்துகை வலையமைப்பு'' என்பது, பிராந்தியச் சந்தைகளினாலான மின்கடத்துகை வலையமைப்பு என்று பொருளாகும்;

''நியமப்படுத்தப்பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை'' என்பது, தொழினுட்பவியல், குறிப்பிட்ட மின்சக்திக் கொள்வனவுக் காப்புவரி மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்வலு அடிப்படையிலான மின்சக்திப் பொறித்தொகுதிகளுக்கான வேறு ஒப்பந்தஞ்சார் நியதிகள் 10 மெகாவோட்டுக்களைக்கொண்ட அதிக பட்சக் கொள்ளளவையுடையவிடத்து, முன்னர் வரையறுத் துக்கூறப்பட்ட நியதிநிபந்தனைகளின்மீதான ஒரு மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை என்று பொருளாகும்;

''அடுத்துறும் கம்பெனிகள்'' என்பது, இலங்கை மின்சாரச் சபையின் வகிபங்குகளையும் பொறுப்புடைமைகளையும் கையேற்பதற்குச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள் என்று பொருளாகும்;

''மின்வழங்குகை'' என்பது, மின்சாரம் தொடர்பாக, முடிவுப் பாவனையாளர்களுக்கு மின்விநியோகிப்பு முறைமையினூடாக மின்சாரத்தை வழங்குதல் என்று பொருளாகும்;

"மின்வழங்குகைக் காப்புவரி" என்பது, மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோரினால் செலுத்தப்பட்ட பேரளவிலான கொள்வனவுக் காப்புவரியினதும் மின்கடத்துகைக் காப்புவரியினதும் ஆகுசெலவை மேவுவதற்கு ஒழுங்கு படுத்துநரினால் நிர்ணயிக்கப்பட்ட முடிவுப் பாவனை யாளர் காப்புவரியின் ஆக்கக்கூறு என்று பொருளாகும்;

"முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம்" என்பது, தேசிய மின்கட்டமைப்பின் நிகழ்வுநேரத் தொழிற்பாட்டை நிறைவேற்றுவதற்காக இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிலையம் என்று பொருளாகும்;

"மின்கடத்துகை இடைத்தொடுப்பு" என்பது, ஒரு மின்பொறித்தொகுதியைத் தேசிய மின்கட்டமைப்புடன் காப்பாகவும் நம்பகமாகவும் இடைத்தொடுப்பதற்காகத் தேவைப்பட்ட சாதனங்களும் வசதிகளும் என்று பொருளாகும்;

"மின்கடத்துகை வலையமைப்பு" என்பது, ஒரு மின் பிறப்பாக்கல் நிலையத்திலிருந்து ஒரு மின்கட்டமைப்பு உபநிலையத்துக்கு, ஒரு மின்பிறப்பாக்கல் நிலையத்தி லிருந்து இன்னொன்றுக்கு அல்லது ஒரு மின்கட்டமைப்பு உபநிலையத்திலிருந்து இன்னொன்றுக்கு மின்சாரத்தை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டவையும் உயர் மின்வலியளவுக் கம்பிவடங்களுக்கு அல்லது மேந்தலை இணைப்புகளுக்கு அவசியமானவையும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றவையுமான எவையேனும் மின்மாற்றிகள், மின்தொடர்பிணைப்புப் பொறிகள் மற்றும் வேறு வேலைகள் அத்துடன் சாதனங்களுடன்சேர்த்து, அத்தகைய உயர் மின்வலியளவுக் கம்பிவடங்களும் மேந்தலை இணைப்புக்களும் (ஓர் உரிமம்பெற்றவரின் மின்விநியோகிப்பு முறைமையின் அத்தியாவசியமான பாகமாகவிராதது) மற்றும் அத்தகைய மின்மாற்றி களுக்கு, மின்தொடர்பிணைப்புப் பொறிகளுக்கு மற்றும் வேறு வேலைகளுக்கும் சாதனங்களுக்கும் இடவசதி யளிப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய கட்டிடங்களும் அல்லது அவற்றின் பாகமும் என்று பொருளாகும்;

“மின் கடத்துகைச் சேவை உடன்படிக்கை” என்பது, மின்பிறப்பாக்கஞ்செய்கின்ற உரிமம்பெற்றோரிடமிருந்து மின்விநியோகிப்பு உரிமம்பெற்றோருக்கும் பாவனையாளர்களுக்கும் மின்சாரத்தைக் கடத்துவதற்காகத் தேசிய மின்கட்டமைப்பின் பாவனையை ஆளுகின்றதும் தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநருக்கும் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கும் இடையேயானதுமான உடன்படிக்கை என்று பொருளாகும்;

“மின்கடத்துகைக் காப்புவரி” என்பது, தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரிடமிருந்து மின்கடத்துகை வலையமைப்பைப் பயன்படுத்துவதற்காக மின்கடத்துகை உரிமம்பெற்றோரினால் விதிக்கப்பட்ட காப்புவரி என்று பொருளாகும்;

“மின்கடத்துகை மின்வலியளவு” என்பது, 33 கிலோவோட்டுக்கு மேற்பட்ட ஏதேனும் மின்வலியளவு அல்லது மின்கடத்துகை முறைமை எந்த மின்வலியளவில் அல்லது மின்வலியளவுகளில் தொழிற்படுகின்றதோ அந்த மின்வலியளவாக அல்லது மின்வலியளவுகளாக இருப்பதாக ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய வேறு மின்வலியளவு என்று பொருளாகும்;

“மின்கடத்துகை” என்பது, மின்சாரம் தொடர்பாக, உயர் மின்வலியளவு இணைப்புக்களையும் மின்சாரப் பொறித்தொகுதியையும் கொண்டுள்ளதும், ஒரு மின்பிறப்பாக்கல் நிலையத்திலிருந்து ஒரு மின்கட்டமைப்பு உபநிலையத்துக்கு, ஒரு மின்பிறப்பாக்கல் நிலையத்திலிருந்து இன்னொன்றுக்கு அல்லது ஒரு மின்கட்டமைப்பு உபநிலையத்திலிருந்து இன்னொன்றுக்கு மின்சாரத்தை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்படுகின்றதுமான மின்கடத்துகை முறைமையொன்றின் மூலம் மின்சாரத்தை இடம்பெயர்த்தல் என்று பொருளாகும்; அத்துடன் “மின்கடத்துகை” மற்றும் “மின்கடத்துகை முறைமை” என்னும் சொல்லமைப்புகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பயன்பாடு" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம்பெற்றவர் ஒருவராகச் செயலாற்றுகின்ற எவரேனுமாளுக்குரியவையும், அவற்றோடிணைந்துள்ள எல்லாக் காணிகளும், கட்டிடங்களும், வேலைகளும், பருப்பொருட்களும் உட்பட்டவையுமான மின்இணைப் புக்கள் அல்லது மின்சாரப் பொறித்தொகுதி என்று பொருளாகும் என்பதுடன் "மின்சாரப் பயன்பாடு" என்பது, மின்சார மின்வலுவை உற்பத்திசெய்தல், கடத்தல் அல்லது விநியோகித்தலுக்காகப் பயன்படுத்தப் பட்ட மற்றும் பிரதானமாகப் பயனுடையனவாகவுள்ள, ஒப்பந்த மற்றும் வாக்குரிமை உரிமைகளுட்பட, அவற்றுக்கான எல்லாப் பாகங்களுடனும் இணைந்த வற்றுடனும் சேர்த்து, ஏதேனும் பொறித்தொகுதி, வேலைகள், முறைமை, செயலிடங்கள் அல்லது ஆதனங்கள் என்று பொருளாகும்;

"மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை" என்பது, அதிகளவு நன்மைபயக்கும் ஆகுசெலவில் பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்குப் பல மின்சார வழங்குநர்கள் ஒருவரோடொருவர் போட்டியிடும் ஒரு சந்தை என்று பொருளாகும்;

"வேலைகள்" என்பது, பொதுமக்களுக்கு மின்சாரத்தைக் கடத்துவதற்கும், விநியோகிப்பதற்கும் அல்லது வழங்குவதற்கும் இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஓர் உரிமத்தின் அல்லது வலுவளிப்பின் குறிக்கோள்களைப் பயனுக்குக் கொண்டுவருவதற்கும் தேவைப்பட்ட மின் இணைப்பு, மற்றும் ஏதேனும் கட்டிடம், பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, உபகரணம் மற்றும் எத்தகைய விவரணத்தினதுமான வேறேதேனும் பொருள் என்பவற்றை உள்ளடக்கும்.

**54.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

## அட்டவணை I

(பிரிவு 17)

### மின்சாரத்தொழிலின் கட்டமைப்பு

தற்போது இலங்கை மின்சாரச்சபைக்கு உரித்தாக்கப்பட்ட, கீழே தரப்பட்டுள்ளவாறாக நீர் மின்னாற்றல்சார்ந்த மின்பிறப்பாக்கம், வெப்பஞ்சார்ந்த மின்பிறப்பாக்கம் மற்றும் புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலுப் பிறப்பாக்கம் தொடர்பான செயற்பாடுகள், பாராளுமன்றச் சட்டமொன்றாக அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சபாநாயகரினால் இச்சட்டம் சான்றுப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாதவொரு தேதியாகவுள்ள, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று மீளக்கட்டமைக்கப்பட்டு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கங்களுக்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படும் கூட்டிணைப்பு உருவகங்களுக்கு, பொருளளவில் கீழே தரப்பட்டுள்ள முறையில் உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கை மின்சாரச்சபையின் நீர்மின்சக்தி மின்பிறப்பாக்கச் சொத்துக்களைக் கையேற்பதற்கு அதன் பங்குகளில் நூறு சதவீதம் இலங்கை அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் கம்பெனியொன்று;

(ஆ) இலங்கை மின்சாரச்சபையினாலும் லங்கா நிலக்கரிக் கம்பெனியினாலும் சொந்தமாகவைத்திருக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்பட்ட நிலக்கரி மின்சக்திப் பொறித்தொகுதியைக் கையேற்பதற்கான கம்பெனியொன்று;

(இ) இலங்கை மின்சாரச்சபையின் வெப்பஞ்சார் மின்பிறப்பாக்கற் சொத்துக்களைக் கையேற்பதற்கான கம்பெனியொன்று;

(ஈ) இலங்கை மின்சாரச்சபையினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டு, உடைமைகொள்ளப்பட்டு மற்றும் தொழிற்படுத்தப்பட்ட காற்று மின்சக்திப் பொறித்தொகுதியைக் கையேற்பதற்கான கம்பெனியொன்று;

(உ) இலங்கையின் தேசிய மின்கட்டமைப்பை அமைக்கின்ற பௌதிக உட்கட்டமைப்பின் அபிவிருத்தி, பேணுகை மற்றும் தொழிற்பாடு தொடர்பான இலங்கை மின்சாரச்சபையின் பணிகளைக் கையேற்பதற்கு அதன் பங்குகளில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டவற்றை இலங்கை அரசாங்கம் வைத்திருக்கும் கம்பெனியொன்று;

(ஊ) மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதிகளின் மின்பிறப்பாக்கல் அட்டவணைப்படுத்துகை, ஈடுபாடு மற்றும் சிக்கனமான அனுப்புகை தொடர்பாக இலங்கை மின்சாரச்சபையின் பணிகளையும் எதிர்கால மின்சார மற்றும் மின்கடத்துகைக் கொள்ளளவைத் திட்டமிடுதல் தொடர்பான பணிகளையும் கையேற்பதற்கு அதன் பங்குகளில் நூறு சதவீதத்துக்கு மேற்பட்டவற்றை இலங்கை அரசாங்கம் வைத்திருக்கும் கம்பெனியொன்று;

(எ) இலங்கை மின்சாரச்சபையின் மின்விநியோகிப்புப் பிரிவுகளின் மின்விநியோகிப்புப் பணிகளைக் கையேற்பதற்கான தனிவேறான கம்பெனிகள்; அத்துடன்

(ஏ) இலங்கை மின்சாரச்சபையின் மீதமான பணிகளை முகாமை செய்வதற்குத் தேவைப்படவேண்டியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான கம்பெனிகள். அத்தகைய அடுத்துறும் கம்பெனிகள், ஏதேனும் அடுத்துறும் கம்பெனிக்குக் குறித்தொதுக் கப்படாதிருக்கக்கூடிய வேறு கருமங்களுக்கிடையே பின்வரும் மீதமான பணிகளைப் பொறுப்பேற்பதற்குக் கூட்டிணைக்கப் படுதல் வேண்டும்:-

(i) கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளுக்குப் பொறுப்பிக்கப் பட்ட அப்பணிகளும் செயற்பாடுகளும் அல்லாத இலங்கை மின்சாரச்சபையின் பணிகளைக் கையேற்பதற்கு ஒரு கம்பெனி;

(ii) இலங்கை மின்சாரச்சபையின் சகாய நிதியத்தினதும் ஓய்வூதிய நிதியத்தினதும் பணிகளைக் கையேற்பதற்கும், அத்தகைய சகாய நிதியத்தினதும் ஓய்வூதிய நிதியத் தினதும் கட்டுக்காப்பாளராகவும் நம்பிக்கைப் பொறுப் பாளராகவும் முகாமையாளராகவும் செயலாற்றுவதற்கும் ஒரு கம்பெனி; ஆயின், கம்பெனியின் முழுப் பங்கு வைத்திருக்கைகளும் எப்போதும் அரசாங்கத்திடம் இருத்தல் வேண்டும்.

[பிரிவு 21 (7) (இ)]

## அட்டவணை II

### உரிமம்பெறுநர்களின் ஏனைய தத்துவங்கள்

1. (1) இப்பந்தியின் பின்வரும் ஏற்பாடுகளுக்கமைய, ஓர் உரிமம்பெறுநர், கொண்டுநடாத்துவதற்கு அதன் உரிமத்தினால் அது அதிகாரமளிக்கப் படுகின்ற செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துதல் சம்பந்தமான ஏதேனும் நோக்கத்துக்காக, அதன் அதிகாரமளிக்கப்பட்ட இடப்பரப்பில் பின்வரும் வேலைகளுள் எவற்றையும் நிறைவேற்றலாம்:-

(அ) (i) எவையேனும் மின்இணைப்புகளை அல்லது ஏதேனும் மின்பொறித்தொகுதியை; அத்துடன்

(ii) அத்தகைய எவையேனும் மின்இணைப்புகளுக்கு அல்லது ஏதேனும் பொறித்தொகுதிக்கு அமைப்பிடம் அளிப்பதற்கான அல்லது அவற்றை மூடுவதற்கான எவையேனும் கட்டமைப் புகளை,

ஏதேனும் தெருவின்கீழ், தெருவின்மேல், தெருவில், தெருவின்மீது, தெருநெடுகிலும் அல்லது தெருவுக்குக் குறுக்காக நிறுவுதல்; அத்துடன்

அத்தகைய ஏதேனும் பொறித்தொகுதியை அல்லது எவையேனும் மின்இணைப்புகளைக் காலத்துக்குக்காலம் சோதனை செய்தல், பேணுதல், சீராக்கல், திருத்துதல், மாற்றுதல், மாற்றீடு செய்தல் அல்லது அகற்றுதல்; அத்துடன்

(ஆ) பின்வரும் நோக்கங்களுக்காக உட்பட, (அ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படும் எவையேனும் வேலைகளின் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்ட அதன் இடைநேர்விளைவான எவையேனும் வேலைகள்:-

(i) ஏதேனும் தெருவை அல்லது ஏதேனும் தெருவினுள் அல்லது தெருவின்கீழ் உள்ள எவையேனும் கழிவுநீர்க்கான்களை, வடிகால்களை அல்லது சுரங்கவழிகளைத் திறத்தல் அல்லது உடைத்துத் தகர்த்தல்;

(ii) ஏதேனும் தெருவின்கீழ் சுரங்கவழி தோண்டுதல் அல்லது துளைத்தல்; அத்துடன்

(iii) ஏதேனும் தெருவில் அல்லது தெருவின்கீழ் உள்ள எல்லா மண்ணையும் பொருட்களையும் அகற்றுதல் அல்லது பயன்படுத்துதல்,

ஆயின், இவ்வுட் பந்தியிலுள்ளதெதுவும், பொதுப்பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்படாத ஏதேனும் கட்டிடத்தினுள், அதற்கூடாக அல்லது அதிற் சாய்கின்ற முறையில் அல்லது ஏதேனும் காணியில் ஏதேனும் மின்இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியை அமைப்பதற்கு அல்லது இடுவதற்கு உரிமம்பெறுநருக்குத் தத்துவமளித்தலாகாது.

(2) ஏதேனும் மின்இணைப்புக்கு அல்லது மின்பொறித்தொகுதிக்கு இடவசதியளிப்பதற்கான ஏதேனும் கட்டமைப்பைத் தெருவொன்றின்மீது அல்லது அதன்மேல் இடுவதற்கு (1) ஆம் பந்தியின்கீழ் உரிமம்பெறுநருக்கு அளிக்கப்படும் தத்துவம், உள்ளூரதிகாரசபையின் அல்லது வேறு இயைபான அதிகாரசபையின் சம்மதத்துடன் மட்டுமே பிரயோகிக்கப்படற் பாலதாதல் வேண்டும்.

(3) எவையேனும் மின்இணைப்புகளில் அல்லது ஏதேனும் மின்பொறித் தொகுதியில் உள்ள பழுதுகளிலிருந்து எழுகின்ற அவசரகால விடயங்களிற் றவிர, உள்ளூரதிகாரசபையின் அல்லது வேறு இயைபான அதிகாரசபை யின் அதிகாரத்தினுள் வராதுள்ள தெருவொன்று, ஒழுங்குபடுத்துநரின் சம்மதத்துடனன்றி (1) ஆம் பந்தியினால் அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் திறக்கப்படுதலோ அல்லது உடைத்துத் தகர்த்தப் படுதலோ ஆகாது.

(4) ஏழாம் பந்தியில் எது எவ்வாறிருப்பினும் உரிமம்பெறுநர் ஒழுங்கு படுத்துநரின் சம்மதத்துடன் தற்காலிகமானவையும், விதித்துரைக்கப்படும் நியமங்களுக்கு இணங்கியொழுகவிராதவையுமான மின்இணைப்புகளை நிர்மாணிக்கலாம்.

(5) ஒழுங்குபடுத்துநர், (3) ஆம் பந்தியின்கீழ் அதன் சம்மதத்துக்கான விண்ணப்பமொன்றை, எவ்வாளின் சம்மதம் மற்றப்படிக்குத் தேவைப் படுமோ அவ்வாளுக்கு உரிமம்பெறுநர் விண்ணப்பம்பற்றிய அறிவித்தலைச் சேர்ப்பித்திருந்தாலொழிய, கவனத்துட்கொள்ளுதலாகாது.

(6) உரிமம்பெறுநர், (1) ஆம் பந்தியினால் அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் இயன்றளவுவரை குறைவான சேதத்தை விளைவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தத்துவங்களைப் பிரயோகிக்கையில் விளைவிக்கப் படும் ஏதேனும் சேதத்துக்காக நட்டஈடு செலுத்துதலும் வேண்டும்.

(7) ஓர் உரிமம்பெறுநர் ஏதேனும் தெருவின்கீழ், தெருவின்மேலாக, தெருவில், தெருவின்மீது, தெருநெடுகிலும் அல்லது தெருவுக்குக் குறுக்காக அது நிறுவுகின்ற அல்லது நிறுவிவைத்திருக்கின்ற எதுவும் பொதுமக்களுக்கு ஆபத்துக்கான மூலமாக வராதிருப்பதனை உறுதிப்படுத்தும் அத்தகைய முறையில் (1) ஆம் பந்தியில் அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டுமென்பதுடன் -

(அ) உடைத்துத் தகர்த்தப்பட்ட அல்லது திறக்கப்பட்ட பாகம் வேலியிடப்பட்டுப் பாதுகாக்கப்படுவதனை உடனடியாகச் செய்வித்தலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய பாகம் உடைத்துத் தகர்த்தப்பட்டதாக அல்லது திறக்கப்பட்டதாக இருக்கையில் அத்தகைய பாகத்துடன் சாய்ந்து அல்லது அப்பாகத்துக்கருகில், வழிப்போக்கர் களுக்கு எச்சரிக்கைவிடுப்பதற்குப் போதியதான வெளிச்ச மொன்று, சூரிய அஸ்தமனத்திலிருந்து நிறுவப்பட்டு சூரியன் உதிக்கும் வரை பேணப்படச்செய்வித்தலும் வேண்டும்; அத்துடன்

(இ) நியாயமானளவு விரைவாகத் தரையை நிரப்புதலும் உடைத்துத் தகர்த்தப்பட்ட அல்லது திறக்கப்பட்ட மண்ணை அல்லது நடைபாதையை அல்லது கழிவு நீர்க்கால்வாயை, வடிகாலை அல்லது சுரங்கவழியை மீளமைத்து நன்னிலைப் படுத்துதலும் வேண்டும்; அத்துடன் அதனை மூன்று மாதங்களுக்கும் ஏதேனும் வடிந்து வருதல் ஏற்படுமிடத்து, அவ்வடிந்து வருதல் தொடர்ந்திருக்கும் காலத்தின்போது ஆறுமாதங்களை விஞ்சாத ஏதேனும் மேலதிகக் காலப்பகுதிக்கும் நன்கு பழுதுபார்க்கப்பட்ட நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

(8) ஏழாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற உரிமம்பெறுநர், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவரின்முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் அத்துடன் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*2. (1)* ஓராம் விடயத்தில் அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், ஓர் உரிமம்பெறுநர், வேலைகள், பின்வருவனவற்றுள் எவற்றினதும் தற்காலிக அல்லது நிரந்தர மாற்றத்தை உட்படுத்துவது எவ்வாறிருப்பினும், அவற்றை நிறைவேற்றலாம்:-

(அ) இன்னோர் உரிமம்பெறுநரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள ஏதேனும் மின்இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதி;

(ஆ) ஒரு வாயுப் பொறுப்பேற்குநரின், ஒரு நீர்ப் பொறுப்பேற்குநரின், கழிவுநீர்க்கால் பொறுப்பேற்குநரின் அல்லது நியதிச்சட்ட முறையான தத்துவங்களைப் பிரயோகிக்கையில் நீர்வழங்கும் ஆளொருவரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள (அது ஒரு தெருவில் இருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) வாயுவைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் குழாயுட்பட்ட ஏதேனும் குழாய்;

(இ) *1991* ஆம் ஆண்டின் *25* ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற ஆளொருவரினால் தொழிற்படுத்தப்படும் தொலைத் தொடர்பு முறைமையொன்றின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம்;

(ஈ) புகையிரதப் பொது முகாமையாளரால் தொழிற்படுத்தப்படும் தொலைத் தந்தி முறைமையொன்றின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் தொலைத் தொடர்பு உபகரணம்; அல்லது

(உ) *1982* ஆம் ஆண்டின் *6* ஆம் இலக்க, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் ஏற்புடைத்தாகும் வடம்மூலமான தொலைச்காட்சிமுறைமையொன்றின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் தொலைத் தொடர்பு உபகரணம்.

*(2)* ஓராம் பந்தியின் உட்பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்பவற்றிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் மாற்றத்தை உட்படுத்துகின்ற அல்லது உட்படுத்தும் சாத்தியங்கொண்ட வேலைகளை ஓர் உரிமம்பெறுநர், *1* ஆம் விடயத்தில் அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கின்ற விடத்து, இப்பந்தியின் அடுத்துவரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அவ்வேற்பாடுகளில் "இயைபான பொறுப்பேற்குநர்" என்பதற்கான ஒரு குறிப்பீடு (1) ஆம் பந்தியின் உட்பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்படும் பொறுப்பேற்குநர் ஒருவருக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) பொதுமக்களுள் ஒருவர், ஏதேனும் மின் இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதி தொடர்பிலான மாற்றங்களை, அத்தகைய வேலைகள் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியினுள் அமைகின்றனவென்பது எவ்வாறிருப்பினும் நிறைவேற்றுமாறு இயைபான உரிமம்பெறுநரை வேண்டலாம்.

(4) ஐந்தாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமம்பெறுநர், வேலைகளைத் தொடங்குவதற்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையாமல், உரிமம் பெறுநரால் நிறைவேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் வேலைகளின் தன்மையையும் உட்படுத்தப்பட்ட மாற்றத்தையும் அல்லது சாத்தியமாகவுள்ள மாற்றத்தையும், வேலைகளின் நிறைவேற்றுகை எந்த நேரத்திலும் இடத்திலும் தொடங்கப்படுமோ அந்த நேரத்தையும் இடத்தையும் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை இயைபான பொறுப்பேற்குநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(5) எந்த அவசரகால வேலைகள் பற்றிய அறிவித்தலை இயைபான பொறுப்பேற்குநருக்கு உரிமம்பெறுநர் அவ்வேலைகளின் நிறைவேற்றுகை யைத் தொடங்கியபின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாகக் கொடுக்கின்றாரோ அந்த எவையேனும் வேலைகள் தொடர்பாக (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(6) உரிமம்பெறுநரினால் இயைபான பொறுப்பேற்குநருக்கு (4) ஆம் பந்தியின் கீழான அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, பொறுப்பேற்குநர், அறிவித்தல் தேதியிலிருந்து, ஏழு நாட்காலப்பகுதியினுள், ஒன்றில் பின்வருவனவற்றுள் ஒன்றைக் கூறக்கூடிய எதிர் அறிவித்தலை உரிமம்பெறுநருக்குக் கொடுக்கலாம்:-

(அ) உரிமம்பெறுநரால் நிறைவேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப் படும் வேலைகளினால் அவசியமாக்கப்படும் அல்லது உசிதமாக்கப்படும் ஏதேனும் மாற்றத்தைப் பொறுப்பேற்குநர் தாமே செய்வதற்கு முன்னங்கொண்டுள்ளார் என்று; அல்லது

(ஆ) பொறுப்பேற்குநரின் மேற்பார்வையின் கீழும் அவரின் திருப்திக்கும் அத்தகைய ஏதேனும் மாற்றத்தை உரிமம்பெறுநர் செய்வதனைப் பொறுப்பேற்குநர் தேவைப் படுத்துகின்றார் என்று.

(7) ஆறாம் பந்தியின்கீழ் கொடுக்கப்படும் எதிர் அறிவித்தல், இயைபான பொறுப்பேற்குநர் ஏதேனும் மாற்றத்தைத் தாமே செய்வதற்கு உட்கருத்தைக் கொண்டுள்ளாரெனக் கூறுமிடத்து -

(அ) உரிமம்பெறுநருக்குப் பதிலாகப் பொறுப்பேற்குநர், அம்மாற்றத்தைச் செய்யும் நோக்கத்துக்காக எவையேனும் வேலைகளை நிறைவேற்றுவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வேலைகளை நிறைவேற்றுவதில் அல்லது அது சம்பந்தமாகப் பொறுப்பேற்குநரினால் உறப்படும் நியாய

மான எவையேனும் செலவுகளும், மாற்றத்தின் விளைவாகப் பொறுப்பேற்குநரினால் உறப்படும் ஏதேனும் இழப்பின் அல்லது சேதத்தின் தொகையும், உரிமம்பெறுநரிடமிருந்து பொறுப்பேற்குநரினால் அறவிடப்படற்பாலனவாதல் வேண்டும்.

*(8)* ஆறாம் பந்தியின்கீழ் கொடுக்கப்படும் எதிர் அறிவித்தல், ஏதேனும் மாற்றம் இயைபான பொறுப்பேற்குநரின் மேற்பார்வையின்கீழும் அவரது திருப்திக்கும் செய்யப்படவுள்ளதெனக் கூறுமிடத்து-

(அ) உரிமம்பெறுநர் எதிர் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவன்றி அம்மாற்றத்தைச் செய்தலாகாது; அத்துடன்

(ஆ) அம்மேற்பார்வையை வழங்குவது அல்லது அது சம்பந்தமாகப் பொறுப்பேற்குநரினால் உறப்படும் நியாயமான எவையேனும் செலவுகளும் மாற்றத்தின் விளைவாகப் பொறுப்பேற்குநரினால் உறப்படும் ஏதேனும் இழப்பின் அல்லது சேதத்தின் தொகையும், தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் உரிமம்பெறுநரிடமிருந்து பொறுப்பேற்குநரினால் அறவிடப்படற்பாலனவாதல் வேண்டும்.

*(9)* (அ) ஆறாம் பந்தியின்கீழ் எதிர் அறிவித்தலெதுவும் கொடுக்கப் படாதவிடத்து; அல்லது

(ஆ) இயைபான பொறுப்பேற்குநர், அந்தப் பந்தியின்கீழான எதிர் அறிவித்தலொன்றைக் கொடுத்திருந்து, உரிமம்பெறுநர் அறிவித்தல்மூலம் குறித்துரைக்கக்கூடியவாறாக (நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறைந்ததாகவிராத) அத்தகைய ஏதேனும் காலப்பகுதியினுள், உரிமம்பெறுநரால் நிறைவேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் வேலைகளினால் அவசியமாக்கப்படும் அல்லது உசிதமாக்கப்படும் ஏதேனும் மாற்றத்தைச் செய்வதற்குத் தவறுமிடத்து அல்லது விடயத்துக்கேற்ப தேவைப்பட்ட மேற்பார்வையை வழங்குவதற்கு நியாயமற்ற முறையில் தவறுமிடத்து,

உரிமம்பெறுநர், மாற்றத்தைச் செய்யும் நோக்கத்துக்காக அவ்வேலைகளை நிறைவேற்றலாம் அல்லது விடயத்துக்கேற்ப பொறுப்பேற்குநரின் மேற்பார்வையின்றி அத்தகைய வேலைகளை நிறைவேற்றலாம்; ஆனால் இரு விடயங்களிலும் உரிமம்பெறுநர் பொறுப்பேற்குநரின் திருப்திக்கு அவ் வேலைகளை நிறை வேற்றுதல் வேண்டும்.

*(10)* (அ) *(4)* ஆம் பந்தியினால் தேவைப்படுத்தப்படும் அறிவித்தலைக் கொடுக்காமல் எவையேனும் வேலைகளை நிறைவேற்றுகின்ற; அல்லது

(ஆ) இப்பந்தியின்கீழ் இயைபான பொறுப்பேற்குநர் ஒருவரினால் கொடுக்கப்படும் ஏதேனும் நியாயமான தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமற்ற முறையில் தவறுகின்ற,

உரிமம்பெறுநர் அல்லது அத்தகைய உரிமம்பெறுநரின் எவரேனும் முகவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர்முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

3. (1) பின்வரும் சந்தர்ப்பங்களில் இவ்விடயம் ஏற்புடையதாகின்றது:-

(அ) உரிமம்பெறுநர் அதன் உரிமத்தினால் கொண்டுநடாத்து வதற்கு அதிகாரமளிக்கப்படும் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் சம்பந்தமான ஏதேனும் நோக்கத்துக்காக ஏதேனும் காணியின்மீது, காணியின்கீழ் அல்லது காணியின் மேலாக மின்இணைப்பொன்றை நிறுவுதலும் நிறுவி வைத்திருத்தலும் உரிமம்பெறுநருக்கு அவசியமாக அல்லது உசிதமாக உள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அறிவித்தலிற் குறித்துரைக்கப்படும் (இருபத்தியொரு நாட்களுக்குக் குறைவாகவிராத) ஒரு காலப்பகுதியினுள் அவசியமான வழியனுமதியைக் கொடுக்கும்படி அத்தகைய சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைத் தேவைப் படுத்துகின்ற அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டிருந்து-

(i) அக்காலப்பகுதி முடிவடையு முன்னர் அவ்வழியனுமதி யைக் கொடுக்கத் தவறியுள்ள விடத்து; அல்லது

(ii) உரிமம்பெறுநருக்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாலன வல்லாத நியதிநிபந்தனைகளுக்கமைய அவ்வழியனு மதியைக் கொடுத்துள்ளவிடத்து.

(2) பின்வரும் சந்தர்ப்பங்களிலும் இவ்விடயம் ஏற்புடையதாகின்றது:-

(அ) உரிமம்பெறுநர் அதன் உரிமத்தினால் கொண்டுநடாத்து வதற்கு அதிகாரமளிக்கப்படும் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக, ஏதேனும் காணியின்மீது, காணியின்கீழ் அல்லது காணியின் மேலாக உரிமம்பெறுநர் ஒரு மின்இணைப்பை வைத்திருப் பதும் அவசியமாக அல்லது உசிதமாக உள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் மின்இணைப்பை அகற்றும்படி தேவைப்படுத்தி பந்தி 5 (2) இன்கீழ் உரிமம்பெறுநருக்கு அறிவித்தல் கொடுத்துள்ள விடத்து.

(3) ஓராம் அல்லது (2) ஆம் பந்தி ஏற்புடையதாகுமிடத்தும், ஒழுங்கு படுத்துநர்-

(அ) வழியனுமதியொன்று அளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு உரிமம்பெறுநர் நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளாரென்றும்;

(ஆ) அம்முயற்சிகள் வெற்றியீட்டவில்லையென்றும்; அத்துடன்

(இ) உரிமம்பெறுநரின் உரிமத்தினால் அதிகாரமளிக்கப்படும் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கு அந்த வழியனுமதியைக் கொள்ளுதல் அவசியமாகவுள்ளதென்றும்,

திருப்திப்படுமிடத்தும் ஒழுங்குபடுத்துநர் உரிமம்பெறுநரால் விண்ணப்பமொன்று செய்யப்படுவதிலிருந்து ஆறு வாரங்களினுள், வழியனுமதியின் கொள்ளுதலை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும். அமைச்சர், உத்தேசிக்கப்படும் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்து, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமுலம் அவ்வழியனுமதியானது பொது நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (295 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு உரிமம்பெறுநருக்குக் கைமாற்றவும்படலாம்.

(4) பின்வரும் ஏதேனும் விடயத்தில் ஒழுங்குபடுத்துநர், (3) ஆம் பந்தியின்கீழான வழியனுமதியின் கொள்ளுதலை விதந்துரைத்தலாகாது:-

(அ) அக்காணியின் மீது அங்கீகரிக்கப்பட்ட வாழிடமொன்று உள்ளவிடத்து, அல்லது அக்காணியின்மீது வாழிடமொன்றை நிர்மாணிப்பதற்கு இயைபான சட்டங்களின்கீழ் வரைபடம் தயாரிப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளவிடத்து; அத்துடன்

(ஆ) மின்இணைப்பானது அந்தக் காணியின்மீது அல்லது அதன் மேலாக நிறுவப்படவுள்ளவிடத்து.

(5) மூன்றாம் பந்தியின்கீழான விதப்புரையைச் செய்யுமுன்னர் ஒழுங்குபடுத்துநர்-

(அ) காணியில் இருப்பாட்சி கொண்டுள்ளவருக்கும்; அத்துடன்

(ஆ) இருப்பாட்சி கொண்டுள்ளவர் காணிச் சொந்தக்காரராகவும் இராதுள்ளவிடத்து, சொந்தக்காரருக்கும்,

ஒழுங்குபடுத்துநரினால் நியமிக்கப்படும் ஆளொருவரினால் கேட்கப்படுவதற்கான வாய்பொன்றை அளித்தல் வேண்டும்.

(6) (295 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் வழியனுமதியொன்று கொள்ளப்படுமிடத்தும், உரிமம்பெறுநருக்குக் கைமாற்றப்படுமிடத்தும், வழியனுமதியானது–

(அ) காணியிலுள்ள அக்கறைகளை அல்லது காணியின் மீதான விதிப்பனவுகளை அல்லது காணி தொடர்பான ஏனைய கடப்பாடுகளைப் பதிவுசெய்தலைத் தேவைப்படுத்துகின்ற ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாக விருத்தலாகாது;

(ஆ) எந்நேரத்திலேனும் காணியின் சொந்தக்காரராக அல்லது இருப்பாட்சியாளராக உள்ள எவரேனுமாளைப் பிணித்தல் வேண்டும்.

4. (1) மூன்றாம் விடயத்தின்கீழ் உரிமம்பெறுநருக்கு வழியனுமதியொன்று அளிக்கப்படுமிடத்து –

(அ) காணியின் இருப்பாட்சியாளர்; அல்லது

(ஆ) இருப்பாட்சியாளர் சொந்தக்காரருமாகவில்லாதவிடத்து காணியின் சொந்தக்காரர்,

அளிப்புத் தொடர்பில் ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான நியாய மான நட்டமொன்றை உரிமம்பெறுநரிடமிருந்து அறவிடலாம்.

(2) அத்தகையவொரு வழியனுமதியினால் அளிக்கப்படும் ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கையில் காணிக்கு அல்லது அசைவுள்ளவற்றுக்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்படுமிடத்து, காணியில் அல்லது அசைவுள்ள வற்றில் அக்கறை கொண்டுள்ள எவரேனுமாள், அச்சேதம் தொடர்பில் நியாயமான நட்டஈட்டை உரிமம்பெறுநரிடமிருந்து அறவிடலாம். அத்துடன் அத்தகையவோர் உரிமையைப் பிரயோகிப்பதன் விளைவாக ஆளொருவர் ஏதேனும் காணியை அல்லது அசைவுள்ளவற்றைத் துய்ப்பதில் குழப்பப்படுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய குழப்பம் தொடர்பில் ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலான நட்டஈட்டை உரிமம்பெறுநரிடமிருந்து அறவிடலாம்.

(3) ஒழுங்குபடுத்துநர், அதன் சொந்தப் பிரேரணையின் மீது அல்லது பாதிக்கப்படும் ஓராளின் விண்ணப்பத்தின் மீது, உரிமம்பெறுநர் (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளின்கீழான ஏதேனும் நட்டஈட்டை எவரேனுமாளுக்குச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளாராவென்பதைத் தீர்மானிப்பதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம்.

(4) ஒழுங்குபடுத்துநர், (3) ஆம் பந்தியின் கீழான ஏதேனும் முடிபை உரிமம்பெறுநருக்கும் நட்டஈட்டுக்கு விண்ணப்பித்துள்ள அல்லது நட்டஈடு அளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கும் அறிவித்தல் வேண்டும்.

(5) ஓராம் அல்லது (2) ஆம் பந்தியின் கீழான நட்டஈடு எதுவும் செலுத்தப்படற்பாலதல்ல என்ற ஒழுங்குபடுத்துநரின் முடிபினால் இன்னலுறுகின்ற அல்லது செலுத்தப்படற்பாலதென ஒழுங்குபடுத்துநர்

தீர்மானிக்கும் நட்டஈட்டுத் தொகைபற்றி அதிருப்தியடைகின்ற ஆளொருவர், எந்த உரிமம்பெறுநரிடமிருந்து நட்டஈடு கோரப்படுகின்றதோ அந்த உரிமம்பெறுநருக்கெதிராக, அவ்வாளினால் கோரப்படும் நட்டஈட்டை அல்லது அவ்வாளினால் கோரப்படும் நட்டஈட்டுத் தொகைக்கும் அவ்வாளுக்குச் செலுத்தப்படற்பாலதென ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படும் நட்டஈட்டுத் தொகைக்கும் இடையேயான வித்தியாசத்தை அறவிடுவதற்காகத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஒரு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுக்கலாம்.

(6) ஐந்தாம் பந்தியின்கீழ் எவரேனுமாளினால் தொடுக்கப்படும் வழக்கொன்று-

(அ) அவ்வாள், (4) ஆம் பந்தியின்கீழ் ஒழுங்குபடுத்துநரினால் அனுப்பப்படும் கடிதத்தொடர்பைப் பெற்றுக்கொண்ட;

(ஆ) ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படும் நட்டஈட்டுத் தொகை (7) ஆம் பந்தியின்கீழ் அவ்வாளுக்குச் செலுத்தப் படுகின்ற; அல்லது

(இ) ஏழாம் பந்தியின்கீழ் நீதிமன்றத்தினுள் அத்தொகை செலுத்தப்படாமை பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படுகின்ற அல்லது முதற்றடவையாக வெளிக்காட்டி வைக்கப்படுகின்ற,

தேதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் தொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) ஓராம் அல்லது (2) ஆம் பந்தியின்கீழான நட்டஈட்டுத் தொகை யொன்றை அக்காணியின் சொந்தக்காரருக்குச் செலுத்துவதற்கு ஆளாக வுள்ள உரிமம்பெறுநர், ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதியினுள் அவ்வாளுக்கு அத்தொகையைச் செலுத்துதல் வேண்டும். அச்சொந்தக்காரர் யார் என்பது அறியப்படா திருக்குமிடத்து அல்லது அக்காணியின் சொத்தாண்மை பிணக்கிற்கு அமைந்ததாகவுள்ளவிடத்து, உரிமம்பெறுநர்-

(அ) அக்காணி அமைந்துள்ள இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திலிருந்து உரித்துப் பற்றிய எண்பிப்பின்மேல் அவ்வாளினால் பெறப்படுவதற்கென ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தொகையை அந்நீதிமன் றத்தினுட் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒழுங்குபடுத்துநரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தொகை நீதிமன்றத்தினுட் செலுத்தப்பட்டமை பற்றிய எழுத்திலான அறிவித்தலை அக்காணியின் இருப்பாட்சியாளருக்குக் கொடுத்தல் வேண்டும் அல்லது இருப்பாட்சியாளர் எவரும் இல்லை யெனில், அவ்வறிவித்தலை அக்காணியின்மீது துலாம்பர மானவோர் இடத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

5. (1) மூன்றாம் விடயத்தில் குறிப்பிடப்படுகின்றவாறான அத்தகைய வொரு வழியனுமதி (அவ்விடயத்தின் கீழ் அளிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது திறத்தவர்களிடையேயான உடன்படிக்கைமூலம் அளிக்கப்பட்டதாயினுஞ் சரி)–

(அ) அவ்வழியனுமதியில் குறித்துரைக்கப்படும் ஒரு காலப்பகுதி முடிவுறுவதனால் எந்நேரத்திலும் முடிவடையுமிடத்து;

(ஆ) அவ்வழியனுமதியில் அடங்கியுள்ள ஒரு நியதிக்கிணங்கக் காணிச் சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சியாள ரினால் எந்நேரத்திலும் முடிவுறுத்தப்படுமிடத்து; அல்லது

(இ) அவ்வழியனுமதியை அளித்தபின்னர் காணியின் சொத் தாண்மையிலான அல்லது இருப்பாட்சியிலான ஒரு மாற்றம் காரணமாகக் காணிச்சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சி யாளரைப் பிணிக்காதொழியுமிடத்து,

இப்பந்தி ஏற்புடையதாகின்றது.

(2) காணிச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், (1) ஆம் பந்தியினுள் அடங்குகின்ற ஒரு விடயத்தில் –

(அ) அவ்வழியனுமதியிற் குறித்துரைக்கப்படும் காலப்பகுதி முடிவடைந்தபின்னர் எந்நேரத்திலேனும் அல்லது அக்காலப் பகுதி முடிவடையுமுன்னர் மூன்று மாதங்களினுள்;

(ஆ) அவ்வழியனுமதி காணியின் அத்தகைய சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் முடிவுறுத்தப்பட்டுள்ள பின்னர் எந்நேரத்திலேனும்; அல்லது

(இ) அப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறாகக் காணியின் சொத்தாண்மையில் அல்லது இருப்பாட்சியில் அத்தகைய வொரு மாற்றத்தின் பயனாகக் காணியின் சொந்தக்காரராக அல்லது இருப்பாட்சியாளராக வந்த பின்னர் எந்நேரத்தி லேனும்,

காணியிலிருந்து மின்இணைப்பை அகற்றுமாறு உரிமம்பெறுநரைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்தலொன்றை உரிமம்பெறுநருக்குக் கொடுக்கலாம்; ஆனால் உரிமம்பெறுநர் இப்பந்தியின் பின்வரும் ஏற்பாடுகளினால் ஏற்பாடுசெய்யப்படும் சூழ்நிலைகளிலும் அளவுக்கும் தவிர, அத்தகையவோர் அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குக் கடப்பாடுடையவராதலாகாது.

(3) இரண்டாம் பந்தியின்கீழான அறிவித்தல் தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று மாதக் காலப்பகுதியினுள், உரிமம்பெறுநர்–

(அ) 3 ஆம் விடயத்தின்கீழ் அவசியமான வழியனுமதியின் அளிப்புக்கான விண்ணப்பமொன்றைச் செய்யத்தவறு மிடத்து;

(ஆ) 3 ஆம் விடயத்தின்கீழ் அவசியமான வழியனுமதி அளிக்கப் படுவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்தும் அவ்விண்ணப்பம் ஒழுங்குபடுத்துநரினால் மறுக்கப்படு மிடத்தும்;

(இ) இவ்வட்டவணையின் 7 ஆம் விடயத்தின்கீழ் காணியின் வலுக்கட்டாயக் கொள்வனவுக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளை யொன்றைப் பெறுவதற்குத் தவறுமிடத்து,

உரிமம்பெறுநர், அக்காலப்பகுதியின் முடிவில், அல்லது உட்பந்தி (ஆ) வின் விடயத்தில், ஒழுங்குபடுத்துநர் முடிவெடுத்த தேதியிலிருந்து தொடங்குகின்ற ஒரு மாதக் காலப்பகுதியின் முடிவில், அல்லது ஒழுங்குபடுத்துநர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நீடித்த காலப்பகுதியின் முடிவில் அறிவித்தலுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) இவ்வட்டவணையில் "வழியனுமதி" என்பது, ஒரு காணி தொடர்பாக, அக்காணியின்மீது, அதன்கீழ் அல்லது அதற்குமேலாக ஒரு மின்இணைப்பை நிறுவுவதற்கும் நிறுவிவைத்திருப்பதற்கும், அத்தகைய மின்இணைப்பைச் சோதனை செய்யும், பேணும். சீராக்கும், பழுதுபார்க்கும், மாற்றும், அகற்றும் அல்லது மாற்றீடு செய்யும் நோக்கத்துக்காக அக்காணியை அணுகுவதற்கும் ஓர் உரிமம்பெறுநர் உரிமையைக் கொண்டுள்ளவாறாகக் காணியிலுள்ள அத்தகைய அக்கறை என்று பொருளாகும்.

6. (1) ஏதேனும் மரம்-

(அ) மின்இணைப்பின் அல்லது பொறித்தொகுதியின் நிறுவுகை, பேணுகை அல்லது தொழிற்பாடு என்பவற்றுக்கு முட்டுக் கட்டையிடும்வகையில் அல்லது அவற்றுடன் தலையிடும் வகையில்; அல்லது

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படற்பாலதல்லாத ஆபத்துக்கான மூலமாக (பிள்ளைகளுக்கோ அல்லது வேறு ஆட்களுக்கோ) அமைகின்றவகையில்,

உரிமம்பெறுநரினால் நிறுவப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுக்கொண்டிருக் கின்ற அல்லது நிறுவப்படவுள்ள மின்இணைப்புக்கு அல்லது மின்பொறித் தொகுதிக்கு அத்தகைய கிட்டிய அண்மையில் உள்ளவிடத்து அல்லது உள்ளதாகவிருக்குமிடத்து இவ்விடயம் ஏற்புடையதாகின்றது.

அத்துடன் இவ்விடயத்தில் "காணி" என்பது, மரமானது எந்தக் காணியின்மீது வளருகின்றதோ அந்தக் காணி என்று பொருளாகும்.

(2) உரிமம்பெறுநர், காணியின் இருப்பாட்சியாளருக்கு, (1) ஆம் பந்தியின் உட்பந்தி (அ) அல்லது (ஆ) என்பதிற் குறிப்பிடப்படும் பயனை மரமானது கொண்டிருப்பதனைத் தடுக்கும்வகையில் அதனை வெட்டி வீழ்த்தும்படி அல்லது அதன் கிளைகளைத் தறிக்கும்படி அல்லது அதன் வேர்களை வெட்டி விடும்படி அத்தகைய இருப்பாட்சியாளரைத் தேவைப்படுத்தி

அறிவித்தல் கொடுக்கலாம். அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் நியாயமானமுறையில் அத்தகைய இருப்பாட்சியாளரினால் உறப்படும் செலவுகள் உரிமம்பெறுநரால் அத்தகைய இருப்பாட்சியாளருக்குச் செலுத்தப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டும்.

(3) இருப்பாட்சியாளர் காணிச் சொந்தக்காரராகவும் இராதவிடத்து, (2)ஆம் பந்தியின்கீழான ஏதேனும் அறிவித்தலின் பிரதியொன்றும் சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் பந்தியின்கீழான அறிவித்தலொன்று கொடுக்கப்படுவதிலிருந்து இருபத்தியொரு நாட்களினுள்-

(அ) அறிவித்தலின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படாவிடின்; அத்துடன்

(ஆ) காணிச் சொந்தக்காரரோ இருப்பாட்சியாளரோ (5) ஆம் பந்தியின்கீழ் எதிர் அறிவித்தலொன்றைக் கொடுக்காவிடின்,

உரிமம்பெறுநர், (1) ஆம் பந்தியின் உட்பந்தி (அ) அல்லது (ஆ) என்பதிற் குறிப்பிடப்படும் பயனை மரமானது கொண்டிருப்பதனைத் தடுக்கும் வகையில் அதனை வெட்டிவீழ்த்தும்படி, அல்லது அதன் கிளைகளைத் தறிக்கும்படி அல்லது அதன் வேர்களை வெட்டிவிடும்படி செய்விக்கலாம்.

(5) இரண்டாம் பந்தியின்கீழான அறிவித்தலொன்றைக் கொடுப்பதிலிருந்து இருபத்தொரு நாட்களினுள், காணிச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து உரிமம்பெறுநருக்கு எதிர் அறிவித்தலொன்றைக் கொடுத்தால் இக்கருமம் ஒழுங்குபடுத்துநருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஒழுங்குபடுத்துநர், (5) ஆம் பந்தியின்கீழ் அதற்குச் செய்யப்படும் ஆற்றுப்படுத்துகையொன்றின்மீது அதனால் நியமிக்கப்படும் ஓராளினால் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைத் திறத்தவர்களுக்கு அளித்த பின்னர் சூழ்நிலைகளில் அது நீதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் கட்டளையானது-

(அ) உரிமம்பெறுநர் (1) ஆம் பந்தியின் உட்பந்தி (அ) அல்லது (ஆ) என்பதிற் குறிப்பிடப்படும் பயனை மரமானது கொண்டிருப்பதனைத் தடுக்கும்வகையில் அதனை வெட்டிவீழ்த்தும்படி அல்லது அதன் கிளைகளைத் தறிக்கும்படி அல்லது அதன் வேர்களை வெட்டி விடும்படி செய்வித்தல் (கட்டளையானது பணிக்கக்கூடியவாறாக வேலையானது தொடங்கப்பட்டமை பற்றி எதிர் அறிவித்தல் எவ்வாளினாற் கொடுக்கப்பட்டதோ அவ்வாளுக்கு அத்தகைய அறிவித்தலைக் கொடுத்தபின்னர்) அனுமதிக்கலாம்; அத்துடன்

(ஆ) சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் உரிமம்பெறுநருக்கு என்ன செலவுகள் (எவையேனுமிருப்பின்) செலுத்தப்படவேண்டுமென்பது பற்றிய ஏதேனும் பிரச்சினையைத் தீர்த்துவைக்கலாம்.

(7) உரிமம்பெறுநர் (4) ஆம் பந்தியை அல்லது (6) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றைப் பின்பற்றிச் செயற்படுகின்றவிடத்து, உரிமம்பெறுநர் -

(அ) நல்ல மரவளர்ப்புச் செய்முறைக்கு இணங்கவும், மரங்களுக்கு, வேலிகளுக்கு, புதர் வேலிகளுக்கு மற்றும் வளர்ந்து வருகின்ற பயிர்களுக்கு இயன்றளவுவரை குறைந்த சேதத்தை விளைவிக்கும் வகையிலும் மரங்களை வெட்டிவீழ்த்த அல்லது அவற்றின் கிளைகளைத் தறிக்க அல்லது அவற்றின் வேர்களை வெட்டிவிடச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களும், தறிக்கப்பட்ட கிளைகளும் அல்லது வெட்டப்பட்ட வேர்களும் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் பணிப்புகளுக்கிணங்க அகற்றப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) காணிக்கு விளைவிக்கப்படும் ஏதேனும் சேதத்தை ஈடுசெய்தல் வேண்டும்.

(8) இவ்விடயத்தில் ''மரம்'' என்பது, ஏதேனும் புதர்ச்செடியையும் உள்ளடக்கும் என்பதுடன், ''வெட்டிவீழ்த்தல்'' மற்றும் ''கிளைகளைத் தறித்தல்'' என்பவற்றுக்கான குறிப்பீடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

7. (1) உரிமம்பெறுநர் அதன் உரிமத்தினால் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்படும் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் நோக்கங்களுக்காக, அல்லது இச்சட்டத்தினால் அத்தகைய உரிமம்பெறுநருக்குக் குறித்தளிக்கப்படும் ஏதேனும் பணியை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைப்படுகின்றதென்றும் -

(அ) உரிமம்பெறுநர் ஆதனத்தின் சொந்தக்காரருடன் அத்தகைய ஆதனத்தைப் பேச்சுவார்த்தைமூலம் கொள்ளுவதற்காக நியாயமான எல்லா முயற்சிகளையும் செய்துள்ளாரென்றும்; அத்துடன்

(ஆ) அம்முயற்சிகள் வெற்றியீட்டவில்லையென்றும்,

ஒழுங்குபடுத்துநர் திருப்திப்படுமிடத்து, ஒழுங்குபடுத்துநர், அசைவற்ற ஆதனம் (295 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு உரிமம்பெறுநருக்குக் கைமாற்றப்படுதல் வேண்டுமென அமைச்சருக்கு விதந்துரைக்கலாம்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (1) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குபடுத்துநரின் விதப்புரையில் குறித்துரைக்கப்படும் அசைவற்ற ஆதனத்தின் உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்து, அத்தகைய அசைவற்ற ஆதனம் ஒரு பொது நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க (295 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படுதலும் உரிமம்பெறுநருக்குக் கைமாற்றப்படுதலும் வேண்டும்.

(3) உரிமம்பெறுநருக்காக (295 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அந்த உரிமம்பெறுநரினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) ஒழுங்குபடுத்துநர், (1) ஆம் பந்தியின்கீழான ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதலை, அத்தகைய அசைவற்ற ஆதனம் அதற்குச் சொந்தமான இன்னோர் உரிமம்பெறுநரினால் சொண்டுநடாத்துவதற்கு அவ்வுரிமம்பெறுநரின் உரிமத்தினால் அவருக்கு அதிகாரமளிக்கப்படும் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான நிறுவுகையொன்றின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படின் அல்லது அத்தகையவொரு நிறுவுகையின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படின் அல்லது அத்தகையவொரு நிறுவுகையின் நோக்கங்களுக்காக அத்தகைய வேறு உரிமம்பெறுநரினால் ஐந்தாண்டுக் காலப்பகுதியின்போது பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படின், விதந்துரைத்தலாகாது.

## அட்டவணை III

[பிரிவு 21 (7) (ஈ)]

### மின்சாரம் வழங்குகைக் கோவை

1. (1) இரண்டாம் பந்திக்கமைய, மின்விநியோக உரிமம்பெறுநர், காப்புவரி வாடிக்கையாளரொருவரிடமிருந்து, மின்சாரத்தை வழங்குதல் தொடர்பில், அல்லது ஏதேனும் மின்சாரமானியை, மின்இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியை ஏற்பாடுசெய்தல் தொடர்பில் உரிமம்பெறுநருக்கு வருமதியான எவையேனும் விதிப்பனவுகளை அறவிடலாம்.

(2) காப்புவரி வாடிக்கையாளரொருவர், உரிமம்பெறுநருக்கு ஆகக்குறைந்தது இரண்டு வேலை நாட்களுக்கு முன்னரேனும் முன்னறிவித்தல் கொடுக்காமல் மின்விநியோக உரிமம்பெறுநரினால் அத்தகைய காப்புவரி வாடிக்கையாளருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள எவையேனும் வளவுகளை விட்டுச்சென்றால், அவ்வளவுகளுக்கான மின்சார வழங்கல் தொடர்பில்-

(அ) அத்தகைய காப்புவரி வாடிக்கையாளர் உரிமம்பெறுநருக்கும், அவ்வளவுகளுக்கான நியாயமான அணுகுகை அளித்திருப்பின், அத்தகைய அறிவித்தலைக் கொடுத்த பின்னர் இரண்டாவது வேலைநாள்; ஆயின், வளவுகளுக்கான நியாயமான அணுகுகை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் மானியின் பதிவு எந்த அடுத்த நாளன்று நிச்சயிக்கப்படுகின்றதோ அந்த அடுத்த நாள்; அத்துடன்

(இ) அவ்வளவுகளின் எவரேனும் அடுத்துப்பின்னரான இருப்பாட்சியாளர் அவ்வளவுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு எந்த நாளன்று வழங்குநரைத் தேவைப்படுத்துகின்றாரோ அந்த நாள்,

ஆகியவற்றுள் எந்நாள் முன்னையதோ அதுவரை திரண்டுள்ள எல்லா விதிப்பனவுகளையும் உரிமம்பெறுநருக்குச் செலுத்த அத்தகைய காப்புவரி வாடிக்கையாளர் ஆளாதல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகள் அல்லது அந்த ஏற்பாடுகளைத் தருகின்ற கூற்றொன்று, காப்புவரி வாடிக்கையாளரொருவரினால் மின்விநியோக உரிமம்பெறுநருக்குச் செலுத்தப்படற்பாலனவான மின்சார விதிப்பனவுகளுக்கான ஒவ்வொரு கோரிக்கைப்பத்திரத்திலும் புறக்குறிப் பிடப்படுதல் வேண்டும்.

(4) காப்புவரி வாடிக்கையாளரொருவர், மின்விநியோக உரிமம்பெறு நரினால் அத்தகைய காப்புவரி வாடிக்கையாளருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள எவையேனும் வளவுகளை, அவ்வழங்கல் தொடர்பில் அல்லது அவ்வழங்கலின் நோக்கங்களுக்காக ஏதேனும் மின்சாரமானி, மின்இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதி ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பில் அத்தகைய காப்புவரி வாடிக்கையாளரிடமிருந்து வருமதியான எல்லா விதிப்பனவுகளையும் செலுத்தாமல் விட்டுச் சென்றால், உரிமம் பெறுநர் -

(அ) அத்தகைய காப்புவரி வாடிக்கையாளர் வருமதியான விதிப்பனவுகளைச் செலுத்தும்வரை வேறெவையேனும் வளவுகளில் அத்தகைய காப்புவரி வாடிக்கையாளருக்கு மின்சார வழங்கலைக் கொடுத்துதவுதற்கு மறுக்கலாம்; ஆனால்

(ஆ) வளவுகளின் அடுத்த இருப்பாட்சியாளரிடமிருந்து அவ்விதிப் பனவின் செலுத்துகையைத் தேவைப்படுத்துவதற்கு உரித்து டையவராதலாகாது.

(5) காப்புவரி வாடிக்கையாளரொருவர் -

(அ) தேவைப்பட்ட காலப்பகுதியினுள், எவையேனும் வளவுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டமை தொடர்பில், அல்லது அந்த வழங்கலின் நோக்கங்களுக்காக ஏதேனும் மின்சாரமானி, மின்இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதி ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பில் மின்விநியோக உரிமம் பெறுநருக்கு வருமதியான எல்லா விதிப்பனவுகளையும் செலுத்தாதிருந்தால்; அல்லது

(ஆ) உரிமம்பெறுநரினால் வேறெவரேனும் பாவனையாளருக்கு மின்சாரம் வழங்குவதில் முறையற்ற வகையில் அல்லது தகாதவகையில் தலையிடுகின்ற ஏதேனும் துணைக்கருவி யைப் பயன்படுத்தாதொழியும்படி அவரைத் தேவைப்படுத்து கின்ற உரிமம்பெறுநரிடமிருந்தான அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால்,

மின்விநியோக உரிமம்பெறுநர், தேவைப்பட்ட காலப்பகுதியின் முடிவில் உரிமம்பெறுநர் தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய வழிவகைகள் மூலம் அவ்வளவுகளுக்கான அல்லது வாடிக்கையாளரினால் இருப்பாட்சி

கொள்ளப்படும் வேறெவையேனும் வளவுகளுக்கான வழங்கலைத் துண்டிக்கலாம் என்பதுடன், அவ்வாறு செய்வதில் உறப்படும் எவையேனும் செலவுகளை வாடிக்கையாளரிடமிருந்து அறவிடலாம்.

(6) ஐந்தாம் பந்தியில் "தேவைப்பட்ட காலப்பகுதி" என்பது-

(அ) வீட்டுத் தேவைகளுக்காக முழுமையாக அல்லது பிரதான மாகப் பயன்படுத்தப்படும் வளவுகளின் விடயத்தில் ஒன்றில் வருமதியான விதிப்பனவுகளைச் செலுத்துவதற்காக எழுத்திலான கோரிக்கையொன்றை மின்விநியோக உரிமம்பெறுநர் செய்தபின்னரான, அல்லது காப்புவரி வாடிக்கையாளர் இன்னொரு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் மின்சாரத்துடன் தலையிடுகின்ற துணைக்கருவி களைப் பயன்படுத்தாதொழியும்படி அவரைத் தேவைப் படுத்துகின்ற மின்விநியோக உரிமம்பெறுநரினாலான அறிவித்தலொன்றுக்குப் பின்னரான பத்து நாட்களுக்குக் குறையாத காலப்பகுதி என்றும்; அத்துடன்

(ஆ) வேறெவையேனும் வளவுகளின் விடயத்தில், அத்தகைய வொரு கோரிக்கை செய்யப்பட்ட பின்னரான பத்து நாட் காலப்பகுதி என்றும்,

பொருளாகும்.

(7) வருமதியாகவுள்ள விதிப்பனவுகளின் தொகை தொடர்பாக உண்மையான பிணக்கொன்று இருந்தால், மின்விநியோக உரிமம்பெறுநர் (5) ஆம் பந்தியினால் உரிமம்பெறுநருக்கு அளிக்கப்படும் தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது.

(8) இவ்விடயத்தில், ஏதேனும் மின்இணைப்பை அல்லது மின்பொறித் தொகுதியின் இனத்தை ஏற்பாடுசெய்தல் பற்றிய குறிப்பீடு, புதியவொன்றை நிறுவுவதன்மூலம் அல்லது ஏலவேயுள்ள ஒன்றைத் திரிபுபடுத்துவதன்மூலம் அத்தகையவொரு மின்இணைப்பை அல்லது இனத்தை ஏற்பாடுசெய்தல் பற்றிய ஒரு குறிப்பீட்டையும் உள்ளடக்குதல் வேண்டும்.

2. (1) மின்விநியோக உரிமம்பெறுநர், காப்புவரி வாடிக்கையாள ரொருவரின் ஏதேனும் தவறுகையின் விளைவாக எவையேனும் வளவுகளுக்கான மின்சார வழங்கலைத் துண்டித்துள்ளவிடத்து, (2) ஆம் பந்தியின் தேவைப்பாடுகள்நிறைவேற்றப்படுவதிலிருந்து இரண்டு வேலை நாட்களினுள் மின்சார வழங்கலை மீள அளிப்பதற்கு உரிமம்பெறுநர் கடப்பாடுடையவராதல் வேண்டும்.

(2) தவறுகையிலுள்ள வாடிக்கையாளர் -

(அ) தவறுகையை நிவர்த்தி செய்திருக்கின்றார்;

(ஆ) வழங்கலைத் துண்டிப்பதற்கும் மீளத்தொடுப்பதற்குமான நியாயமான செலவுகளைச் செலுத்தியிருக்கின்றார்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் 27 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்றவாறான அத்தகைய பிணைப்பொறுப்பைக் கொடுத்திருக்கின்றார்,

என்பன இப்பந்தியின் தேவைப்பாடுகளாகும்.

(3) மின்விநியோக உரிமம்பெறுநர்மீது (1) ஆம் பந்தியினால் சுமத்தப்படும் கடப்பாடானது, அக்கடப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறியமை யினால் பாதிக்கப்படக்கூடியவரான எவரேனுமாளுக்கு உரிமம்பெறுநர் கொண்டுள்ள கடமையொன்றாதல் வேண்டும்.

(4) மூன்றாம் பந்தியின் பயனைக்கொண்டு உரிமம்பெறுநர் எவரேனுமாளுக்குக் கடமையொன்றைக் கொண்டுள்ளவிடத்து, அவ்வாளுக்கு ஏதேனும் இழப்பை அல்லது சேதத்தை விளைவிக்கின்ற அக்கடமையின் ஏதேனும் மீறுகை அவ்வாளின் துடர்ச்சியின்பேரில் அல்லது விருப்பின்பேரில் வழக்குநடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உட்பட்டதாதல் வேண்டும்.

(5) நான்காம் பந்தியைப் பின்பற்றி மின்விநியோக உரிமம்பெறுநருக் கெதிராகக் கொண்டுவரப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், (1) ஆம் பந்தியினால் உரிமம்பெறுநர்மீது சுமத்தப்படும் கடப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுதலைத் தவிர்ப்பதற்கு உரிமம்பெறுநர் நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தல் மின்விநியோக உரிமம்பெறுநரின் எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

(6) ஒராம் பந்தியினால் மின்விநியோக உரிமம்பெறுநரின்மீது சுமத்தப்படும் கடப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியமை தொடர்பில் உரிமம்பெறுநருக்கெதிரான குடியியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு (4) ஆம் பந்தியின் பயனைக்கொண்டு எவரேனுமாளுக்கு இருக்கக்கூடிய ஏதேனும் உரிமைக்குப் பங்கமின்றி, குடியியல் நியாயாதிக்க முள்ள ஒரு நீதிமன்றத்தில் தோதான வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதன்மூலம் அக்கடப்பாட்டுக்கு இணங்கியொழுகப்படுகின்றமை யானது உரிமம்பெறுநருக்கெதிராக ஒழுங்குபடுத்துநரினால் வலுவுறுத்தப் படலாம்.

3. (1) எவையேனும் வளவுகளுக்கான மின்சார வழங்கல் மின்விநியோக உரிமம்பெறுநரினால் துண்டிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உரிமம் பெறுநர் தவிர்ந்த ஆளெவரும், அத்தகைய வழங்கலை மீள அளித்தலாகாது.

(2) எவரேனுமாள் (1) ஆம் பந்திக்கு முரணாகச் செயலாற்றினால் அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரின்முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் அத்துடன் மின்விநியோக உரிமம்பெறுநர் வழங்கலையும் துண்டிக்கலாம்.

4. (1) (அ) (i) மின்விநியோக உரிமம்பெறுநர்;

(ii) மின்பிறப்பாக்க உரிமம்பெறுநர்; அல்லது

(iii) மின்கடத்துகை உரிமம்பெறுநர்,

என்பவர்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களினால் தொழிற்படுத்தப்படுகின்ற ஏதேனும் மின்பொறித் தொகுதிக்கு அல்லது மின்இணைப்புக்கு எவரேனுமாள் முன்னத்துடன் அல்லது அலட்சியமாகச் சேதம் விளை வித்தால் அல்லது விளைவிக்கச் செய்தால்; அல்லது

(ஆ) அவ்வாளின் ஆதனத்தின்மீது அமைந்துள்ள மின் விநியோக உரிமம்பெறுநருக்குச் சொந்தமான அல்லது அவரினால் தொழிற்படுத்தப்படுகின்ற ஏதேனும் வீட்டு மின்சார வழங்கற் சாதனத்தின் ஏதேனும் பாகத்துக்கு அவர் முன்னத்துடன் அல்லது அலட்சியமாகச் சேதம் விளைவித்தால் அல்லது விளைவிக்கச் செய்தால்,

அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரின்முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இவ்விடயத்தில், ''வீட்டு மின்சார வழங்கற் சாதனம்'' என்பது, ஒரு பாவனையாளரின் ஆதனத்தில் அமைந்துள்ள மானி வரையும், அது உட்படவும் உள்ள எல்லா மின்இணைப்புகளையும் மின்பொறித்தொகுதிகளையும் உள்ளடக்கும்.

(3) மின்விநியோக உரிமம்பெறுநரின் மின்இணைப்பு அல்லது மின்பொறித்தொகுதி தொடர்பில் (1) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு தவறுபுரிகின்ற ஆளுக்கு, அக்கருமம் நிவர்த்தி செய்யப்படும்வரை மின்விநியோக உரிமம்பெறுநர் மின்சார வழங்கலை நிறுத்திவிடலாம்.

(4) ஏதேனும் வீட்டு மின்சார வழங்கற் சாதனம் தொடர்பிலான தவறொன்று (1) ஆம் பந்தியின் உட்பந்தி (ஆ) என்பதன்கீழ் புரியப்பட்டுள்ளவிடத்து, மின்விநியோக உரிமம்பெறுநர் -

(அ) அவ்வாறு தவறுபுரிகின்ற ஆளுக்கு, அக்கருமம் நிவர்த்தி செய்யப்படும்வரை மின்சார வழங்கலை நிறுத்திவிடலாம்; அத்துடன்

(ஆ) தவறானது எந்த மானி தொடர்பில் புரியப்பட்டதோ அந்த மானியை அகற்றலாம்.

(5) நான்காம் பந்தியின்கீழான தத்துவங்களைப் பிரயோகிக்கையில் மின்விநியோக உரிமம்பெறுநர் மானியொன்றை அகற்றுமிடத்து, அதனை அழித்து விடும்படி, அல்லது வேறுவகையில் கையாண்டு தீர்க்கும்படி ஒழுங்குபடுத்துநர் உரிமம்பெறுநருக்கு அதிகாரமளிக்கும்வரை உரிமம் பெறுநர் அதனைக் காப்பான முறையில் வைத்திருத்தல் வேண்டும்.

5. (1) எட்டாம் விடயத்தின் ஏற்பாடுகளுக்கமைய, மின்விநியோக உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், பின்வரும் நோக்கங்களுள் எவற்றுக்காகவும், மின்விநியோக உரிமம் பெறுநருக்குச் சொந்தமான அல்லது அவரினால் தொழிற்படுத்தப்படும் மின்இணைப்புகள்மூலமும் மின்பொறித்தொகுதிமூலமும் மின்விநியோக

உரிமம்பெறுநரினால் எந்த வளவுகளுக்கு மின்சார வழங்கல் கொடுக்கப் படுகின்றதோ அந்த எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்கலாம்; அதாவது -

(அ) மின்விநியோக உரிமம்பெறுநருக்குச் சொந்தமான அல்லது அவரினால் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் மின் இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியைப் பரிசோதனையிடுதல்;

(ஆ) ஏதேனும் மின்சாரமானியின் பதிவை நிச்சயித்தலும், ஒரு முற்கொடுப்பனவு மானியின் விடயத்தில், மின்விநியோக உரிமம்பெறுநருக்குச் சொந்தமான அல்லது அவரினால் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் பணத்தை அல்லது எவையேனும் அடையாள நாணயங்களை அகற்றுதலும்;

(இ) ஏதேனும் மின்சாரமானியை அகற்றுதலும், சோதனை யிடுதலும் அல்லது மீளநிறுவுதலும் அல்லது ஏதேனும் பதிலீட்டுமானியை அல்லது இணைந்த சாதனத்தை நிறுவுதலும்.

(2) ஒராம் பந்தியின் உட்பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றினால் அளிக்கப்படும் தத்துவங்கள், பின்வருமாறாயின், எவையேனும் வளவுகள் தொடர்பில் பிரயோகிக்கப்படுதலாகாது:-

(அ) மின்விநியோக உரிமம்பெறுநர் அவ்வளவுகளுக்கு மின்சாரத்தை வழங்காதொழிக்கும்படி பாவனையாளர் உரிமம்பெறுநருக்கு எழுத்தில் விண்ணப்பித்திருந்தால்; அத்துடன்

(ஆ) உரிமம்பெறுநர் நியாயமானவொரு காலத்தினுள் அவ்வாறு செய்வதற்குத் தவறியிருந்தால்.

6. (1) மின்விநியோக உரிமம்பெறுநர் -

(அ) எவையேனும் வளவுகளுக்கு மின்சார வழங்கலை நிறுத்துமாறு; அல்லது

(ஆ) எந்த மின்சாரமானி தொடர்பில் பின்வரும் பந்தியின்கீழான தவறு புரியப்பட்டதோ அந்த மின்சார மானியை அகற்றுமாறு,

இவ்வட்டவணையின் விடயம் 4 இன் 4 (3) அல்லது 4 (4) என்னும் பந்தியினால் அதிகாரமளிக்கப்படுமிடத்து, மின்விநியோக உரிமம்பெறுநரினால் அதிகார மளிக்கப்படும் எவரேனும் அலுவலர், 8 ஆம் விடயத்துக்கமைய, வழங்கலைத் துண்டிக்கும் நோக்கத்துக்காக அல்லது மின்சாரத்தை விநியோகித்தல் அல்லது வழங்குதல் என்பவற்றுக்காக அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மானியை அல்லது ஏதேனும் இணைந்த மின்பொறித்தொகுதியை அகற்றும் நோக்கத்துக்காக அவ்வளவுகளினுட் பிரவேசிக்கலாம்.

(2) (அ) மின்விநியோக உரிமம்பெறுநர், எவையேனும் வளவுகளுக்கான மின்சார வழங்கலைத் துண்டிக்குமாறு அல்லது நிறுத்துமாறு இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாட்டினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் அதிகாரமளிக்கப்படுமிடத்து;

(ஆ) மின்விநியோக உரிமம்பெறுநரினால் மின்சாரம் வழங்கப்படும் எவையேனும் வளவுகளில் இருப்பாட்சி கொள்கின்ற ஆளொருவர், அத்தகைய வழங்கலைத் தேவைப்படுத்தாதொழியுமிடத்து;

(இ) மின்விநியோக உரிமம்பெறுநரினால் முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள எவையேனும் வளவுகளில் இருப்பாட்சி கொள்ள வருகின்ற ஆளொருவர் அத்தகைய வழங்கலைத் தேவைப்படுத்தாதிருக்கின்றவிடத்து; அல்லது

(ஈ) மின்விநியோக உரிமம்பெறுநருக்குச் சொந்தமான அல்லது மின்விநியோக உரிமம்பெறுநரினால் தொழிற்படுத்தப்படும் மானியொன்றின்மூலம் முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள எவையேனும் வளவுகளில் இருப்பாட்சி கொள்ளவருகின்ற ஆளொருவர் அம்மானியை வாடகைக்கு எடுக்காதிருக்கின்றவிடத்து அல்லது கடனாகப் பெறாதிருக்கின்றவிடத்து,

மின்விநியோக உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், 8 ஆம் விடயத்துக்கமைய, வழங்கலைத் துண்டிக்கும் அல்லது ஏதேனும் மின்பொறித்தொகுதியை, மின்இணைப்பை அல்லது மின்சார மானியை அகற்றும் நோக்கத்துக்காக, அவ்வளவுகளினுட் பிரவேசிக்கலாம்.

7. (1) விடயத்துக்கேற்ப, மின்விநியோக உரிமம்பெறுநரினால், மின்பிறப்பாக்க உரிமம்பெறுநரினால் அல்லது மின்கடத்துகை உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், 8 ஆம் விடயத்துக்கமைய பின்வரும் நோக்கங்களுக்காக எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்கலாம்:-

(அ) சட்டமுறையாக ஏலவே இடப்பட்டுள்ள ஏதேனும் உளதான மின்இணைப்புக்கு அல்லது மின்பொறித்தொகுதிக்குப் பதிலாக, அல்லது அதற்கு மேலதிகமாகப் புதிய மின் இணைப்பொன்றை அல்லது புதிய மின்பொறித்தொகுதியை இடுதல்; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் உளதான மின்இணைப்பை அல்லது மின்பொறித்தொகுதியைப் பழுதுபார்த்தல் அல்லது மாற்றுதல்.

(2) ஏதேனும் மின்இணைப்பில் அல்லது மின்பொறித்தொகுதியில் உள்ள பழுதுகளிலிருந்து எழுகின்ற அவசர நிலைமையின் விடயத்தில், 8 ஆம் விடயத்தில் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அறிவித்தலின்றி, (1) ஆம் பந்தியின்கீழ் பிரவேசம் செய்யப்படலாம் ஆனால் அறிவித்தலானது அப்போது இயன்றளவு முற்கூட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

8. (1) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் காணியின்மீது அல்லது எவையேனும் வளவுகளின்மீது பிரவேசிப்பதற்கு அதிகாரமளிக்கப்படும் மின்பரிசோதகர் அல்லது உரிமம்பெறுநர் (அல்லது உரிமம்பெறுநரின் அலுவலர்)-

(அ) செய்யப்படுவதற்கு முன்னப்படும் செயல்களின் தன்மையும் அளவும்பற்றி இயன்றளவு முழுமையாகவும் செம்மையாகவும் கூறி, மின்பரிசோதகரால் அல்லது உரிமம்பெறுநரினால் அல்லது உரிமம்பெறுநரின் அலுவலரினால் முன்னப்படும் பிரவேசம் பற்றி மூன்று நாட்கால அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய;

(ஆ) அத்தகைய மின்பரிசோதகர் அல்லது உரிமம்பெற்றவர் அவரது அதிகாரம் பற்றிய சான்றைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்பட்டால், அத்தகைய மின்பரிசோதகர் அல்லது உரிமம்பெற்றவர் அவ்வாறு செய்திருந்தாலொழிய;

(இ) பிரவேசத்தைப் பின்பற்றி விளைவிக்கப்படக்கூடிய ஏதேனும் குழப்பம், இயலாமை அல்லது சேதம் என்பவற்றுக்காகக் காணியின் அல்லது வளவுகளின் சொந்தக்காரருக்கு நியாயமான நட்டஈடு செலுத்தப்பட்டாலொழிய,

உரிமை என்ற வகையில் அவ்வாறு செய்வதற்குக் கோருதலாகாது.

(2) ஓராம் பந்தியின் உட்பந்தி (அ) என்பதில் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான ஏதேனும் அறிவித்தல்-

(அ) காணியானது, இருப்பாட்சி கொள்ளப்பட்டுள்ளவிடத்து, இருப்பாட்சியாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) காணியானது இருப்பாட்சி கொள்ளப்படாதவிடத்து, அத்தகைய சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் அறியப்பட்டுள்ளவிடத்து அல்லது நியாயமான விழிப்புக் கவனத்துடன் நிச்சயிக்கப்பட முடியுமானதாகவுள்ளவிடத்து சொந்தக்காரருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்;

(இ) காணியானது இருப்பாட்சி கொள்ளப்படாதவிடத்தும், சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் நியாயமான விழிப்புக்கவனத்துடன் நிச்சயிக்கப்பட முடியாததாகவுள்ள விடத்தும் காணியின் ஏதேனும் துலாம்பரமானவோர் இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) காணியானது ஏதேனும் பொது நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுமிடத்து அல்லது ஒதுக்கப்படுமிடத்து, அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது வேறு ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) மின்பரிசோதகர், உரிமம்பெறுநர் அல்லது அதற்கென உரிமம் பெறுநரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் ஆள், (1) ஆம் பந்தியின் உட்பந்தி (அ) என்பதில் குறிப்பீடுசெய்யப்படும் அறிவித்தலைக் கொடுக்கும் நோக்கத்துக்காக அக்காணியினுட் பிரவேசிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இவ்விடயத்தினால் அளிக்கப்படும் எவையேனும் தத்துவங்களை எவரேனுமாள் பிரயோகிக்குமிடத்து அவர் அல்லது அவள் எந்த உரிமம்பெறுநரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டாரோ அந்த உரிமம்பெறுநர் அத்தகைய பிரவேசத்தின் விளைவாகக் காணிக்கு விளைவிக்கப்படும் ஏதேனும் சேதத்தை ஈடுசெய்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் ஏதேனும் காணிக்கு அல்லது ஏதேனும் அசைவுள்ள ஆதனத்துக்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்படுமிடத்து, அக்காணியில் அல்லது அசைவுள்ள ஆதனத்தில் அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆள், அந்தத் தத்துவம் எந்த உரிமம்பெறுநரின் சார்பில் பிரயோகிக்கப்படுகின்றதோ அந்த உரிமம்பெறுநரிடமிருந்து அச்சேதம் தொடர்பிலான நட்டஈட்டை அறவிடலாம்; அத்துடன் அத்தகைய தத்துவத்தைப் பிரயோகிப்பதன் விளைவாக ஆளொருவர், ஏதேனும் காணியை அல்லது அசைவுள்ள ஆதனத்தைத் துய்த்தலில் குழப்பப்படு மிடத்து, அத்தகைய ஆள் அவ்வுரிமம்பெறுநரிடமிருந்து ஒழுங்குபடுத்து நரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறாக அக்குழப்பம் தொடர்பில் நியாயமான நட்டஈட்டை அறவிடலாம்.

9. (1) இவ்வட்டவணையினால் அளிக்கப்படும் பிரவேசத் தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிக்கும் எத்தனமொன்றில், மின்விநியோக உரிமம் பெறுநர் அவ்வளவுகளினுட் பிரவேசம் செய்வதற்கு, வலோத்காரத்தைப் பயன்படுத்தாமல் வேறுவகையாக நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளதாயின் அத்துடன் அம்முயற்சிகள் வெற்றியீட்டாதிருந்திருப்பின், அது அவ்வளவுகள் அமைந்துள்ள இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு, உரிமம்பெறுநருக்கு அல்லது உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் ஒர் அலுவலருக்கு வலோத்காரம்மூலம் அவ்வளவுகளினுட் பிரவேசிப்பதற்கான கட்டளை யொன்றுக்காக மறுதிறத்தவரில்லாமல் விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் பந்தியின்கீழ் அளிக்கப்படும் கட்டளையொன்று, வலோத்காரம்மூலம் பிரவேசிப்பதனைப் பயனுறுத்துவதற்கு உரிமம் பெறுநரினால் அல்லது உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் அலுவலரினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பிரவேசத்தின் பின்னர் உரிமம் பெறுநரினால் அல்லது அத்தகைய வேறு அலுவலரினால் பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகளையும் விதிக்கலாம்.

(3) உரிமம்பெறுநர் அல்லது உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவர் அவ்வளவுகளினுள் வலோத்காரமாகப் பிரவேசித்தமை தொடர்பில் எவரேனுமாளுக்குப் பொறுப்பெதனையும் கொண்டிருத்த லாகாது

ஆயின், அத்தகைய உரிமம்பெற்றவர் அல்லது அலுவலர்:-

(அ) கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நடவடிக்கை தவிர்ந்த, பிரவேசத்தைப் பயனுறுத்துவதற்கான நடவடிக்கை எதனையும் எடுத்தலாகாது;

(ஆ) கட்டளையால் விதிக்கப்படும் ஏதேனும் நிபந்தனையைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்

(இ) குறித்துரைக்கப்படும் நடவடிக்கையை எடுப்பதிலும் ஏதேனும் விதிக்கப்படும் நிபந்தனையைப் பின்பற்றுவதிலும் செயல்முறைக்குகந்தவாறு நியாயமாகவிருக்கின்றவாறாக மிகக்குறைந்த சேதத்தை விளைவித்தல் வேண்டும்.

(4) (அ) (1) ஆம் பந்தியின்கீழான கட்டளையொன்றை வழங்குதல் அல்லது வழங்காதுவிடுதல் பற்றி; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் கட்டளையின் நியதிகள் தொடர்பாக அல்லது அதில் விதிக்கப்படும் நிபந்தனைகள் தொடர்பாக,

நீதிவான் நீதிமன்றத்தின் முடிபுக்கெதிராக மேன்முறையீடெதுவும் அமைவதாதலாகாது.

(5) ஓராம் பந்தியின்கீழான கட்டளையொன்றைப் பெறுவதிலும் நிறைவேற்றுவதிலும் உரிமம்பெறுநரினால் உறப்படும் எவையேனும் செலவுதொகைகள், அக்கட்டளை எந்த வளவுகள் தொடர்பானதோ அந்த வளவுகளின் சொந்தக்காரரிடமிருந்தான அல்லது இருப்பாட்சியாளரிட மிருந்தான ஒரு குடியியல் தனிசாக அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

10. (1) இவ்வட்டவணையினால் அளிக்கப்படும் எவையேனும் பிரவேசத் தத்துவங்களைப் பின்பற்றி மின்விநியோக உரிமம்பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவர் எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்குமிடத்து-

(அ) அப்பிரவேசம் காரணமாக அவ்வளவுகளின் பாதுகாப்பு குறைக்கப்படாதிருப்பதனை அவ்வலுவலர் உறுதிப் படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மின்விநியோக உரிமம்பெறுநர் அவ்வளவுகளினுட் பிரவேசிப் பதிலும் அல்லது இவ்வட்டவணையினால் அதிகாரமளிக்கப் படும் ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதிலும் அல்லது அவ்வளவுகளைப் பாதுகாப்பானதாக்குவதிலும் அவ்வலு வலரினால் அல்லது அவருடன் அல்லது அவளுடன் செல்லுகின்ற எவரேனுமாளினால் விளைவிக்கப்படும் சேதத்தை ஈடுசெய்தல் வேண்டும், அல்லது அதற்கான நட்டஈடு செலுத்துதல் வேண்டும்.

(2) இவ்வட்டவணையினால் அளிக்கப்படும் பிரவேசத் தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற எவரேனும் அலுவலர், அப்பிரவேசமானது எந்நோக்கத் துக்காகச் செய்யப்படுகின்றதோ அந்நோக்கத்துக்காக அல்லது (1) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமாகக்கூடியவாறான அத்தகைய ஆட்களுடன் அப்பிரவேசத்தைச் செய்யலாம்.

(3) இவ்வட்டவணையினால் அளிக்கப்படும் பிரவேசத் தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற எவரேனும் அலுவலரை எவரேனுமாள் முன்னத்துடன் எதிர்த்தால் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிட்டால் அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவா னொருவரின் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

11. மின்விநியோக உரிமம்பெறுநருக்குச் சொந்தமான அல்லது பாவனையாளரொருவருக்கு அவரினால் வாடகைக்கு விடப்படும் அல்லது கடனாகக் கொடுக்கப்படும் அத்துடன் மின்விநியோக உரிமம்பெறுநரைச் சொந்தக்காரராகச் சுட்டிக்காட்டுகின்ற போதியதான அடையாளத்துடன் அல்லது குறியீட்டுடன் அடையாளமிடப்படும் அல்லது பொறிக்கப்படும் ஏதேனும் மின்பொறித்தொகுதி, மின்இணைப்பு அல்லது மின்சாரமானி-

(அ) அவை எவ்வளவுகளில் அமைந்திருக்கக்கூடுமோ அவ்வளவு களின் ஏதேனும் பாகத்தில் பொருத்தப்பட்டிருப்பது அல்லது இணைக்கப்பட்டிருப்பது எவ்வாறிருப்பினும், காணிச் சொந்தக்காரரின் பொருத்துக்கள் அல்லவெனக் கருதப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தின் மன்றாணையின் அல்லது அவை எவ்வாளின் உடைமையில் இருக்கக்கூடுமோ அவ்வாளுக் கெதிரான எவையேனும் வங்கிமுறிவு வழக்குநடவடிக்கை களின்கீழ் பற்றி விற்றற்கமைவதாதலாகாது அல்லது நிறைவேற்றுகையில் எடுக்கப்படுவதற்கு உட்பட்டதாத லாகாது.

## அட்டவணை IV

[பிரிவு 21 (7) (உ)]

### மின்சாரமானிகளின் பயன்பாடு

1. (1) மின்விநியோக உரிமம்பெறுநரினால் வழங்கப்படும் மின்சாரத்தின் பாவனையாளரொருவர், வழங்கப்படும் மின்சாரத்தின் அளவைக் குறிப்பீடுசெய்து முழுமையாக அல்லது பகுதியளவில் அவ்வழங்கலுக்காக விதிப்பனவு செய்யப்படவுள்ளவிடத்து, அப்போது பாவனையாளருக்கும் மின்விநியோக உரிமம்பெறுநருக்கும் இடையே வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, விடயத்துக்கேற்ப, தோதானவொரு மானிமூலம் அல்லது மானிகள்மூலம் வழங்கல் கொடுக்கப்படுதலும் மின்சாரத்தின் அளவு நிச்சயிக்கப்படுதலும் வேண்டும்.

(2) மானியானது-

(அ) மின்விநியோக உரிமம்பெறுநரினால்; அல்லது

(ஆ) விலக்களிக்கப்பட்ட வழங்கலொன்றுக்காகப் பயன்படுத்தப் படும் அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்னப்படும் ஒரு மானியின் விடயத்தில் திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்டால் பாவனையாளரினால்,

வழங்கப்படுதல் வேண்டும்.

(3) மானியானது, பாவனையாளரின் வளவுகளின்மீது மின்விநியோக உரிமம்பெறுநரால் தீர்மானிக்கப்படும் ஓரிடத்தில், எல்லாச் சூழ்நிலைகளிலும் அதனை அவ்வளவுகளுக்கு வெளியே அல்லது வேறேதேனும் இடத்தில் இடுவது கூடுதல் நியாயமாகவுள்ளதாக இருந்தாலொழிய நிறுவப்படுதல் வேண்டும். இச்சட்டத்தின் நோக்கத்துக்காக உரிமம்பெறுநரினால் பாவனையாளருக்கான மின்வலு வழங்கலானது, வேறுவகையாக அவர்களுக்கிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலன்றி, பாவனையாள ருக்கான வழங்கலை அளவிடப் பயன்படுத்தப்படும் மானி அல்லது அளவீட்டுச் சாதனங்களின் வெளிச்செல் அந்தங்களிலிருந்து தொடங்குவ தாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மின்விநியோக உரிமம்பெறுநர் (2) ஆம், (3) ஆம் பந்திகளுக்கிணங்க வழங்கப்பட்டு நிறுவப்படும் ஏதேனும் மானியை மாற்றீடு செய்தலானது-

(அ) இவ்வட்டவணையின் ஏற்பாடுகளுக்கு அல்லது சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி யொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாக வுள்ளதாக; அல்லது

(ஆ) எல்லாச் சூழ்நிலைகளிலும் வேறுவகையாக நியாயமாகவுள்ள தாக,

இருக்குமிடத்து அது மாற்றீடு செய்யப்படுவதனைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அவ்வாறு மாற்றீடுசெய்யப்படும் ஏதேனும் மானி அப்பந்திகளுக்கிணங்க வழங்கப்படுதலும் நிறுவப்படுதலும் வேண்டும்.

(5) பந்திகள் (2) மற்றும் (3) என்பவற்றுக்கிணங்க வழங்கப்பட்டு நிறுவப்படும் தோதானவொரு மானிமூலம் பாவனையாளர் அவரது அல்லது அவளது மின்சார வழங்கலை எடுப்பதற்கு மறுத்தால் அல்லது தவறினால் வழங்குநர் வழங்கலைக் கொடுக்க மறுக்கலாம் அல்லது வழங்கலை நிறுத்தலாம்.

(6) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, மானியொன்று மின்சாரத்தின் குறிப்பிட்ட ஏதேனும் வழங்கல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படுவதற்காக வழங்கலுக்கு எந்த நியதிகளின்மீது விதிப்பனவு செய்யப்படவுள்ளதோ அந்த நியதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய பயன்பாட்டுக்குப் பொருத்தமாகவுள்ள ஒரு வடிவமைப்பை அல்லது நிர்மாணத்தை அது சொண்டிருந்தால் தோதானவொரு மானியாகவுள்ளது.

(7) இவ்விடயத்தின்கீழ் எழுகின்ற ஏதேனும் பிணக்கை 23 ஆம் பிரிவின்கீழ் முடிபுசெய்யும்வரை ஒழுங்குபடுத்துநர் ஒரு மானியை வழங்குதல் அல்லது நிறுவுதல் பற்றிப் பணிப்புகளை விடுக்கலாம் என்பதுடன், இப்பந்தியின்கீழான பணிப்புகள் ஒன்றில் குறிப்பிட்ட விவரணத்தினவான அல்லது குறிப்பிட்ட விடயங்களினவான மானிகளின் விடயத்தில் ஏற்புடையனவாகலாம்.

(8) இவ்வட்டவணையில் ''விலக்களிக்கப்படும் வழங்கல்'' என்பது, -

(அ) எவையேனும் வளவுகளானவை முழுமையாக அல்லது பிரதானமாக வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் வளவுகளாகவிராதவிடத்து; அல்லது

(ஆ) வழங்குநர் அல்லது பாவனையாளர் அவ்வளவுகளுக்கான மின்சாரத்தை வழங்குவதற்கு விலக்களிப்பொன்றின்மூலம் அதிகாரமளிக்கப்படும் ஆளொருவராகவிருக்குமிடத்து,

எவையேனும் வளவுகளுக்கான ஒரு மின்சார வழங்கல் என்று பொருளாகும்.

2. (1) பாவனையாளரொருவருக்கு மின்விநியோக உரிமம்பெறுநரினால் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை நிச்சயிப்பதற்கான மானியெதுவும், அம்மானியானது -

(அ) அங்கீகரிக்கப்படும் வடிவமைப்பை அல்லது நிர்மாணத்தைக் கொண்டிருப்பதுடன், அங்கீகரிக்கப்படும் ஒருமுறையில் நிறுவப்பட்டிருந்தாலொழிய; அத்துடன்

(ஆ) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய 4 ஆம் விடயத்தின்கீழ் சான்றுப்படுத்தப்பட்டிருந்தாலொழிய,

பயன்படுத்தப்படுதலாகாது என்பதுடன், இவ்வட்டவணையில் ''அங்கீகரிக்கப்படும்'' என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஒழுங்குபடுத்துநரினால் அங்கீகரிக்கப்பட்டது என்று பொருளாகும்.

(2) ஓராம் பந்தியின் உட்பந்தி (ஆ) வின் ஏற்பாடுகள், விலக்களிக்கப்படும் வழங்கலொன்று சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் மானி ஒன்றுக்கு அப்பந்தியினது தேவைப்பாடுகளை விட்டுவிடுவதாக மின்விநியோக உரிமம்பெறுநரும் பாவனையாளரும் எழுத்தில் உடன்பட்டிருந்தால் ஏற்புடையனவாதலாகாது.

(3) ஒழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம்:-

(அ) ஒழுங்குவிதிகளினால் அல்லது ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கப்படும் அங்கீகாரங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களைத் தீர்மானித்தல்;

(ஆ) ஏதேனும் குறிப்பிட்ட வடிவமைப்பைக்கொண்ட அல்லது நிர்மாணத்தைக்கொண்ட மானிக்கு அவ்வாறு கொடுக்கப் படும் அங்கீகாரத்தை இல்லாதொழித்தலும் நிறுவப்பட்டுள்ள அவ் வடிவமைப்பைக்கொண்ட அல்லது நிர்மாணத்தைக் கொண்ட மானிகள், விதித்துரைக்கப்படும் ஒரு காலப் பகுதியினுள் இன்னோர் அங்கீகரிக்கப்படும் வடிவமைப்பைக் கொண்ட அல்லது நிர்மாணத்தைக்கொண்ட மானிகளினால் மாற்றீடு செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துதலும்;

(இ) மானியின் ஏதேனும் குறிப்பிட்ட முறையிலான நிறுவுகைக்கு அவ்வாறு கொடுக்கப்படும் அங்கீகாரமொன்றை இல்லா தொழித்தலும் அம்முறையில் நிறுவப்பட்டுள்ள மானிகள் அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதியினுள் இன்னோர் அங்கீகரிக்கப்படும் முறையில் நிறுவப்படுவதனைத் தேவைப்படுத்துதலும்;

அத்துடன் அவை, வெவ்வேறு விவரணத்தினவான மானிகளுக்கு அல்லது வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப் படுவதற்கு முன்னப்படும் மானிகளுக்கு வெவ்வேறு ஏற்பாட்டைச் செய்யலாம்.

3. (1) வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை நிச்சயிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு மானிமூலம் மின்விநியோக உரிமம்பெறுநர் மின்சாரத்தை வழங்குமிடத்தும்; அத்துடன்

(அ) அம்மானியானது அங்கீகரிக்கப்படும் ஒரு வடிவமைப்பைக் கொண்டிராதவிடத்தும் அல்லது நிர்மாணத்தைக் கொண்டிராதவிடத்தும் அல்லது அங்கீகரிக்கப்படும் ஒரு முறையில் நிறுவப்பட்டிராதவிடத்தும்; அல்லது

(ஆ) விடயம் 1 இன் (2) ஆம் பந்தியின் உட்பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்படுகின்ற ஒரு மானியின் விடயத்தில் 4 ஆம் விடயத்தின்கீழ் சான்றுப்படுத்தப்பட்டதாகவிராதவிடத்தும்,

மின்விநியோக உரிமம்பெறுநர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) வேறோராளின் செயல் அல்லது தவறுகை காரணமாக எவரேனுமாள் இவ்விடயத்தின்கீழான தவறொன்றைப் புரியுமிடத்து அந்த வேறு ஆளும் அத்தவறைப் புரிகின்றார்; அத்துடன் அத்தகைய வேறு ஆள், முதற்குறிப்பிடப்பட்ட ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டாலுஞ்சரி எடுக்கப்படாவிட்டாலுஞ்சரி இப்பந்தியின் பயனைக்கொண்டு அத்தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படலாம் அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கவும் படலாம்.

(3) இவ்விடயத்தின்கீழான தவறொன்று தொடர்பிலான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், அத்தவறு புரியப்படுவதனைத் தவிர்ப்பதற்கு அத்தகைய ஆள் நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தாரென்றும் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தாரென்றும் குற்றஞ் சாட்டப்படும் ஆள் எண்பித்தல் அவருக்கு எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

(4) ஒழுங்குபடுத்துநரினால் அல்லது ஒழுங்குபடுத்துநரின் சார்பில் தவிர, இவ்விடயத்தின்கீழான தவறொன்று தொடர்பில் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

4. (1) ஒழுங்குபடுத்துநர், மானிகளைச் சோதனை செய்வதற்கும், பரீட்சிப்பதற்கும், சான்றுப்படுத்துவதற்குமென எவரேனுமாளை நியமிக்கலாம்.

(2) (அ) மானியானது அங்கீகரிக்கப்படும் ஒரு வடிவமைப்பைக் கொண்டதாக அல்லது நிர்மாணத்தைக் கொண்டதாக இருந்தாலொழிய; அத்துடன்

(ஆ) ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக (வழுவரம்புகளுக்கான குறிப்பீட்டினால் வகுத்தமைக்கப்படும் நியமங்கள் உட்பட) மானியானது அத்தகைய நியமங்களுக்கு இசைந்தொழுகினாலொழிய,

மானியெதுவும் (1) ஆம் பந்திக்கிணங்கச் சான்றுப்படுத்தப் படுதலாகாது; அத்துடன் "விதித்துரைக்கப்படும் வழுவரம்புகள்" என்பதற்கு இவ்வட்டவணையிலுள்ள குறிப்பீடுகள் அதற் கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) வெவ்வேறு விவரணத்தினவான மானிகளுக்கு அல்லது வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு முன்னப்படும் மானிகளுக்கு வெவ்வேறு ஏற்பாடுகள் செய்யப்படலாம் என்பதுடன் பின்வருவனவற்றுக்கான ஏற்பாட்டையும் உள்ளடக்கலாம்:-

(அ) விதித்துரைக்கப்படும் நியமங்களுக்கு இனிமேலும் இசைந் தொழுகாத மானிகளின் விடயத்தில் சான்றுப்படுத்துகையை முடிவுறுத்துவதற்காகவும்;

(ஆ) மானிகளைச் சோதனை செய்தலும், பரீட்சித்தலும், சான்றுப் படுத்துதலும் என்பவற்றுக்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களையும் அவை எவ்வாட்களினாற் செலுத்தப்படற் பாலனவென்பதையும் தீர்மானிப்பதற்காகவும்; அத்துடன்

(இ) மானிகளைச் சோதனை செய்தல், பரீட்சித்தல், சான்றுப் படுத்துதல் என்பவற்றில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை பற்றியும்.

5. (1) ஒரு மின்விநியோக உரிமம்பெறுநரினால் வழங்கப்படும் மின்சாரத்தின் பாவனையாளரொருவரிடமிருந்து வழங்கப்படும் மின்சாரத்தின் அளவைக் குறிப்பீடுசெய்து முழுமையாக அல்லது பகுதியளவில் அவரது அல்லது அவளது வழங்கலுக்காக விதிப்பனவு செய்யப்படவுள்ளவிடத்து, மின்விநியோக உரிமம்பெறுநர் தொழிலின் வழமையான நெறியின்போது, மதிப்பிடப்படும் நுகர்வானது நியாயமான வொரு காலப்பகுதியினுள் ஒரு மானி வாசிப்பின்மூலம் உறுதிப்படுத்தப்படும் அளவுக்குப் பாவனையாளரினால் நுகரப்படும் மின்சாரத்தின் தொகையை மதிப்பிடலாம் என்பதுடன், அதற்கிணங்க விதிப்பனவுகளையும் அறவிட லாம்.

(2) (அ) (அதன்மூலம் எவரேனும் பாவனையாளருக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு நிச்சயிக்கப்படுகின்ற) ஒரு மானியானது நுகர்வைப் பிழையாகப் பதிவுசெய்கின்றதென எண்பிக்கப்படும் பட்சத்தில்; அல்லது

(ஆ) ஏதேனும் மானியானது பிழையாகச் செயற்படுகின்ற ஏதேனும் பட்சத்தில்; அல்லது

(இ) எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் மானியின் பதிவை எவரேனுமாள் மாற்றுகின்ற பட்சத்தில்,

மின்விநியோக உரிமம்பெறுநர் நுகர்வை மதிப்பீடுசெய்து அதற்கிணங்க விதிப்பனவுகளை அறவிடுவதற்கு உரித்துடையவ ராதல் வேண்டும்.

(3) மின்சாரத்தின் நுகர்வு, பந்தி (1) அல்லது (2) என்பதற்கிணங்க, மின்விநியோக உரிமம்பெறுநரினால் மதிப்பிடப்பட்டுள்ளவிடத்து, மின்விநியோக உரிமம்பெறுநரினால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டுக்கிணங்க அல்லது பிணக்குத் தீர்ப்புத் தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்க வேறுவகையாகத் தீர்மானிக்கப்படும் மதிப்பீட்டுக்கிணங்க நுகரப்பட்ட ஏதேனும் மின்சாரத்துக்குப் பணஞ்செலுத்துதல் வேண்டும்.

6. (1) எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை நிச்சயிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மானிகளுக்கு இவ்விடயம் ஏற்புடையதாகின்றது.

(2) இவ்விடயம் ஏற்புடையதாகவுள்ள ஒரு மானியின் பதிவு, அத்தகைய மானியின்மூலம் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவிற்கான சான்றாக நீதிமன்றத்திலான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் ஏல்தகவுடைய தாதல் வேண்டும்.

(3) அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பைக்கொண்டதும் அல்லது நிர்மாணத்தைக்கொண்டதும், அங்கீகரிக்கப்பட்ட முறையில் நிறுவப் படுவதுமான அத்தகையவொரு மானியின்மூலம் ஏதேனும் காலப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளவிடத்து மானியின் பதிவு அக்காலப்பகுதி யின்போது-

(அ) விதித்துரைக்கப்படும் வழுவரம்புகளினுள்; அத்துடன்

(ஆ) விலக்களிக்கப்படும் வழங்கலொன்று சம்பந்தமாகப் பயன் படுத்தப்படும் மானியின் விடயத்தில் உடன்பட்டுக் கொள்ளப்படும் எவையேனும் வழுவரம்புகளினுள்,

பதிவுசெய்து கொண்டிருந்ததென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்விடயம் ஏற்புடையதாகும் ஒரு மானி ஏதேனும் காலப்பகுதிக்காக-

(அ) விதித்துரைக்கப்படும் வழுவரம்புகளினுள்; அத்துடன்

(ஆ) விலக்களிக்கப்பட்ட வழங்கலொன்று சம்பந்தமாகப் பயன் படுத்தப்பட்ட ஒரு மானியின் விடயத்தில், உடன்பட்டுக் கொள்ளப்படும் எவையேனும் வழுவரம்புகளினுள்,

பதிவுசெய்து கொண்டிருப்பதாக ஊகிக்கப்படுமிடத்து, அக்காலப்பகுதியின் போது அத்தகைய மானியின்மூலம் வழங்கப்பட்ட மின்சாரத்தின் அளவை மானியானது பிழையாகப் பதிவுசெய்துகொண்டிருந்ததென எண்பிக்கும் பொறுப்பு பாவனையாளரைச் சார்ந்ததாதல் வேண்டும்.

7. (1) மின்விநியோக உரிமம்பெறுநரினால் வழங்கப்படும் மின்சாரத்தின் பாவனையாளரொருவர், எல்லா நேரங்களிலும், அத்தகைய பாவனை யாளரின் சொந்தச் செலவில், வழங்கப்படும் மின்சாரத்தின் அளவைச் சரியாகப் பதிவுசெய்வதற்காக அத்தகைய பாவனையாளருக்குச் சொந்தமான ஏதேனும் மானியைத் தகுந்த நன்னிலையில் வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பாவனையாளர் அவ்வாறு செய்யத்தவறினால், அம்மானிமூலமான மின்சாரத்தின் வழங்கலை வழங்குநர் நிறுத்தலாம்.

(2) மின்விநியோக உரிமம்பெறுநர், எல்லா நேரங்களிலும், அதனது சொந்தச் செலவில், அதனால் எவரேனும் பாவனையாளருக்கு வாடகைக்கு விடப்படும் அல்லது கடனாகக் கொடுக்கப்படும் ஏதேனும் மானியை, வழங்கப்படும் மின்சாரத்தின் அளவைச் சரியாகப் பதிவுசெய்வதற்காகவும் முற்கொடுப்பனவு மானிகளின் விடயத்தில் அவசியமான கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதன்மேல் தகுந்தமுறையில் தொழிற்படுவதற்காகவும் தகுந்தநிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

(3) எந்த மானிமூலம் மின்விநியோக உரிமம்பெறுநரினால் பாவனையாளருக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு பதிவுசெய்யப் படுகின்றதோ அந்த ஏதேனும் மானியை அகற்றுவதற்கும், சோதனை யிடுவதற்கும், மீளநிறுவுவதற்கும் உரிமம்பெறுநர் தத்துவமுடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் மானி அகற்றப்படுகையில் வளவுகளில் பதிலீட்டு மானியொன்றைப் பொருத்துதலும் வேண்டும்; அத்துடன் மானியை அகற்றுவதற்கான, சோதனையிடுவதற்கான அத்துடன் மீள நிறுவுவதற்கான, மற்றும் பதிலீட்டு மானியைப் பொருத்துவதற்கான ஆகுசெலவு மின்விநியோக உரிமம்பெறுநரினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம், (3) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், மானியைத் தகுந்தமுறையில் கவனிக்கத் தவறியமைக்காகப் பாவனையாள ரொருவருக்கெதிராக மின்விநியோக உரிமம்பெறுநர் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் பரிகாரத்துக்குப் பங்கமின்றி இருத்தல் வேண்டும்.

8. (1) எவரேனுமாள் முன்னத்துடன் அல்லது அலட்சியமாக-

(அ) மின்விநியோக உரிமம்பெறுநரினால் எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் மானியின் பதிவை மாற்றினால்; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் மானியின்மூலம் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவை உரியமுறையில் பதிவுசெய்வ திலிருந்து அம்மானியைத் தடுத்தால்,

அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னராக சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத அத்துடன் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளுக் கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுமிடத்து-

(அ) மானியானது அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் அல்லது அத்தகைய ஆளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, மானியின் பதிவிலான மாற்றத்தை விளைவிப்பதற்கான அல்லது மானியை உரியமுறையில் பதிவுசெய்யாது தடுப்பதற்கான செயற்கையான வழிவகை களை அவர் அல்லது அவள் தம்வசம் வைத்திருக்கின்றார்,

என்ற எண்பிப்பு, மாற்றம் அல்லது தடுப்பு அத்தகைய ஆளினால் முன்னத்துடன் விளைவிக்கப்பட்டதென்பதற்குப் போதிய சான்றாதல் வேண்டும்.

(3) பாவனையாளரொருவர், (2) ஆம் பந்தியின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, மின்விநியோக உரிமம்பெறுநர் பாவனையாளரின் வளவுகளுக்கான மின்சார வழங்கலை நிறுத்தலாம் என்பதுடன் தவறானது எந்த மானி தொடர்பில் புரியப்பட்டதோ அந்த மானியையும் அகற்றலாம்.

(4) மின்விநியோக உரிமம்பெறுநர் (3) ஆம் பந்தியின்கீழ் ஒரு மானியை அகற்றுமிடத்து, ஒழுங்குபடுத்துநர் அதனை அழித்துவிடும்படி அல்லது வேறுவகையில் கையாண்டு தீர்க்கும்படி உரிமம்பெறுநருக்கு அதிகார மளிக்கும்வரை, உரிமம்பெறுநர் அதனைக் காப்பான கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

*9. (1) முற்கொடுப்பனவு மானியொன்றின்மூலம் அத்தகைய வழங்கலை எடுக்கின்ற மின்விநியோக உரிமம்பெறுநரினால் வழங்கப்படும் மின்சாரத்தின் பாவனையாளரொருவர் அத்தகைய மானியினுள் உட்புகுத்தப்படும் ஏதேனும் பணத்தை அல்லது அடையாள நாணயங்களைக் காப்பானமுறையில் வைத்திருப்பதற்காக நியாயமான எல்லா முற்காப்புகளையும் எடுப்பதற்கான கடமையுடையவராதல் வேண்டும்.*

*(2) பாவனையாளரின் அனுமதியுடன் தவிர, முற்கொடுப்பனவு மானியொன்று, மின்சாரத்தின் வழங்குகை, மின்இணைப்பொன்றின் அல்லது மின்பொறித்தொகுதியொன்றின் வழங்குகை அல்லது மானியின் வழங்குகை என்பன தொடர்பில் அல்லாது வேறுவகையாகப் பாவனையாளரொருவரினால் மின்விநியோக உரிமம்பெறுநருக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்குப் பயன்படுத்தப்படலாகாது.*